இன்றைய காலநிலை



புதைகுழி தேசம் 06



எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமத்தின் தாய்மாருக்கு மெகா லைஃவ்சயன்ஸ் குளோ உதவிக்கரம் 13



செரீனாவை நிலைகுலைய வைத்தார் யரோஸ்லவா 23

கூடிய வெப்பநிலை 33 c°
குறைந்த வெப்பநிலை 27 c°
வெப்பமான காலநிலை


உதயன் அங்காடி விளம்பர சிறப்பிதழ் உள்ளே...



# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் : 60

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 | கதிர்: 117 | வள்ளுவர் ஆண்டு: 2045 | பங்குனி 09, ஞாயிறு 23.03.2014


# தேடுதல்கள் குடாநாட்டுக்கும் விரிவடைவு

## நேற்று வட்டுக்கோட்டையில் சுற்றிவளைப்பு 300 இளைஞர்களிடம் விசாரணை

யாழ்ப்பாணம்,மார்ச் 23
வன்னியில் இதுவரை இடம்பெற்றுவந்த படையினரின் தேடுதல் வேட்டைகள் இப்போது யாழ்.குடாநாட்டுக்கும் விரிவடைந்துள்ளன.
வட்டுக்கோட்டைப் பகுதி நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நேற்று நண்பகல் வரை ஆயிரக்கணக்கான படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு பெரும் தேடுதல் நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டது.இதன்போது 300 இற்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் படையினரால் கைதுசெய்யப்பட்டுப் பல மணித்தியாலங்களாக விசாரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.



கோப்புப்படம்

தருமபுரம் பகுதியில் துப்பாக்கிச் சூட்டை நடத்திய நபர் வட்டுக்கோட்டைப் பகுதியில் பதுங்கியுள்ளார் எனக் கிடைத்த தகவலை அடுத்தே தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாகப் படை அதிகாரி ஒருவர் தன்னிடம் கூறினார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் மேலும் கூறினார்.
இந்தத் தேடுதலால் வட்டுக்கோட்டையில் நேற்று நண்பகல் வரை பதற்றம் நிலவியது என்றும், அங்குள்ள இளைஞர்களும் அவர்களின் பெற்றோரும் பெரும் அச்சமடைந்

25 ஆம் பக்கம் பார்க்க

# காணாமற்போனோர் விசாரணைக்கு மட்டக்களப்பில் பதிவுகள் குவிவு

## 3 தினங்களில் மட்டும் 1239 முறைப்பாடுகள்

மட்டக்களப்பிலிருந்து அலுவலகச் செய்தியாளர்

மட்டக்களப்பு, மார்ச் 23
மட்டக்களப்பு மாவட்டத்தில் காணாமற்போனோர் விசாரணைக்காக அழைக்கப்பட்டவர்களை விட கடந்த மூன்று தினங்களில் மட்டும் புதிதாக ஆயிரத்து 239 பேர் வரை முறைப் பாடுகளைப் பதிவு செய்துள்ளனர்.
காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும்ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்றன.



பதிவுக்காகக் காத்திருப்போர்

ஆணைக்குழுவுக்கு விண்ணப்பித்தவர்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 161 பேர் மூன்று தினங்களிலும் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டனர்.
செங்கலடியில் 54 பேர் அழைக்கப்பட்ட நிலையில் 39 பேரும், கிரானில் 55 பேர் அழைக்கப்பட்ட நிலையில் 48 பேரும், மண்முனைப்பற்று வடக்கில் 52 பேர் அழைக்கப்பட்ட நிலையில் 45 பேரும் சாட்சியமளிக்க வந்திருந்தனர். அத்துடன் மண்முனைப் பற்றில் புதிய சாட்சிகள் 2 பேரும் சாட்சியமளித்தனர்.
இந்த நிலையில் மூன்று பிரதேச செயலர் பிரிவுகளிலும், ஆணைக்குழுவின் அமர்வுகளுக்கு விண்ணப்பிக்காதவர்களிடமிருந்து புதிதாக விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.அந்த வகையில் செங்கலடியில் 251 பேரும், கிரானில் 429 பேரும், மண்முனைப் பற்று வடக்கில் 560 பேரும் புதிதாகத் தமது விண்ணப்பங்களைப் பதிவு செய்துள்ளனர்.

(து-5)

## மட்டக்களப்பு மாநகர உறுப்பினரை ராணுவத்தினரே கடத்திச் சென்றனர்

*அவரது தாயார் ஆணைக்குழு முன் சாட்சியம்*

மட்டக்களப்பு, மார்ச் 23
மட்டக்களப்பு மாநகர சபையின் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மாநகர சபை உறுப்பினரை இராணுவமும் அவர்களுடன் இணைந்த இனியபாரதி குழுவினரும் கடத்திச் சென்றனர். அதன் பின்னர் அவர் காணாமற்போனார் என்று மட்டக்களப்பில் நேற்றைய தினம் சாட்சியமளிக்கப்பட்டது.
மட்டக்களப்பு மாநகர சபையின் ஆளுங்கட்சி உறுப்பினரான கில்லி மாஸ்ரர் என்று அழைக்கப்படும்,

25 ஆம் பக்கம் பார்க்க

## பற்பொடிக் கொம்பனி ராணுவத்தினரே கிழக்கில் பலரைக் கடத்திச் சென்றனர்

### நேற்றைய சாட்சியத்தில் உறவுகள் தெரிவிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 23
மட்டக்களப்பில் பற்பொடி கொம்பனியில் இயங்கிய இராணுவ முகாமிலிருந்து வந்த விசேட அதிரடிப் படையினராலேயே தங்களது உறவுகள் பெருமளவில் கடத்தப்பட்டனர் என்று நேற்றைய சாட்சியங்களில் மக்கள் தெரிவித்தனர்.
மட்டக்களப்பு நகரில் பற்பொடி கொம்பனி முன்னர் அமைந்திருந்த இடத்தில் இராணுவ முகாம் செயற்பட்டு வருகின்றது. குறித்த முகாமிலிருந்து வரும் புலனாய்வாளர்கள், விசேட அதிரடிப்படையினரே

25 ஆம் பக்கம் பார்க்க

## கைத் துப்பாக்கியைக் காட்டி 20 பவுண் நகை கொள்ளை

### சொகுசுக் காரில் சென்றோர் கைவரிசை உரும்பிராயில் பட்டப்பகலில் சம்பவம்

*யாழ்ப்பாணம், மார்ச் 23*
*கைத்துப்பாக்கியுடன் சொகுசுக் காரில் வந்திறங்கிய மூவர் தாம் சி.ஐ.டியினர் என்றும் வீட்டில் தேடுதல் நடத்தவுள்ளதாகவும் கூறி வீட்டுக்காரரை வீட்டுக்குள் அழைத்துச் சென்று கதவைப் பூட்டிவிட்டு சுமார் 20 பவுண் நகைகளைக் கொள் ளையடித் துச் சென்றுள்ளனர். அவர்களில் இரண்டு பேர் சிங்களத்தில் பேசினர் என்று*

25 ஆம் பக்கம் பார்க்க

## மருமகனை காணவில்லை என முறையிட்டமையால் மிரட்டல்

### மாமியார் ஆணைக்குழுவிடம் முறையீடு

மட்டக்களப்பு, மார்ச் 23
காணாமற்போன எனது மருமகன் தொடர்பில் 22 வருடங்களின் பின்னர் கிடைத்த தகவலுக்கு அமைய, வவுனியா தடுப்பு முகாமில் முறைப்பாடு பதிவு செய்தேன்.இதன் காரணமாக எனது பேரப்பிள்ளையைக் கடத்தி

25 ஆம் பக்கம் பார்க்க



கருணா மற்றும் பிள்ளையான் ஆகியோர் விடுதலைப் புலிகள் அமைப்பில் இயங்கிய போது முஸ்லிம் மக்கள் 160 பேரைப் படுகொலை செய்து சத்துருக்கொண்டானில் புதைத்தனர் என நேற்று இருவர் சாட்சியம் அளித்தனர். இவ்வாறு முஸ்லிம்கள் புதைக்கப்பட்ட இடத்தை ஆணைக்குழுவினர் சென்று பார்வையிட்டனர். (து-5)

## வீட்டில் ஆயுதம் உள்ளதாக ஒப்புக்கொண்டால் கடத்திய கணவரை விடுவிப்பதாகக் கூறினர்

### பொலிஸாருக்கு எதிராக மனைவி நேற்று சாட்சியம்

மட்டக்களப்பு, மார்ச் 23
வீட்டில் ஆயுதம் இருப்பதாக ஒத்துக்கொண்டால் கடத்திச் சென்ற எனது கணவரை விடுவிப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.அதற்கு நான் ஒத்துக்கொள்ளாததால் 5 வருடங்களாகியும் எனது கணவரின் நிலை என்னவென்றே தெரியவில்லை என்று கடத்தப்பட்டவ

25 ஆம் பக்கம் பார்க்க

# ஐ.நா தலைமையில் தமிழருக்கு இடைக்கால நிர்வாகம் வேண்டும்

*ஜெனிவா ஊடகவியலாளர் மாநாட்டில் கஜேந்திரகுமார் கோரிக்கை*

ஜெனிவா.மார்ச் 23

இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள், மானுடத்துக்கு எதிரான குற்றங்களை மட்டுமன்றி இனப்படுகொலை தொடர்பாகவும் விசாரணை நடத்தப்பட வேண்டும். வடக்கு-கிழக்கில் தமிழ் மக்கள் அச்சத்தில் இருக்கிறார்கள். மக்கள் அச்சத்தில் இருந்து விடுபட்டுச் சுதந்திரமாகச் சாட்சியமளிக்கும் நிலை உருவாக்கப்பட வேண்டுமாயின் ஐ.நா. தலைமையிலான ஒரு இடைக்கால நிர்வாகம் அமைக்கப்பட வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

ஐ.நா. மனித உரிமைச் சபையில் கொண்டுவரப்படும் தீர்மானம், பிரச்சினையின் ஒரு அங்கமா அல்லது தீர்வின் ஒரு அங்கமா? என்ற தொனிப் பொருளிலான ஊடகவியலாளர் மகாநாடு ஜெனிவா ஊடக மையத்தில் நேற்று முன்தினம் முற்பகல் நடைபெற்றது. மகாநாட்டுக்குப் பிரேமன் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் பிரதிநிதி விராஜ் மெண்டிஸ் தலைமை தாங்கினார்.

இந்த மாநாட்டில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், தமிழ் சிவில் சமூக ஒன்றியப் பிரதிநிதி குமாரவடிவேல் குருபரன், உலக ஈழத் தமிழரவையின் இணைத் தலைவர் பேராசிரியர் சிறி ரஞ்சன், அவ்வமைப்பின் கனேடியப் பிரதிநிதி கிருஸ்ணா சரவணமுத்து, ஜேர்மன் பிரதிநிதி லக்ஸி அலெக்ஸ் லம்பேர்ட், இலங்கை மக்கள் தீர்ப்பாயத்தின் வழக்குத் தொடுநரும் லண்டன் கிங்ஸ்ரன் பல்கலைக்கழகத்தின் சர்வதேச கற்கைகள் மற்றும் மனித உரிமைகளுக்கான பிரதம விரிவுரையாளருமான கலாநிதி அன்ட்ரூ ஹிக்கின் பொட்டம், ஊடகவியலாளரும், மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான பாஷண அபேவர்த்தன ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களைத் தெரிவித்தனர்.



ஜெனிவாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது

அங்கு உரையாற்றிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,

தற்போது களத்தில் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பவை பற்றியே நான் பேச விழைகிறேன். என்னுடைய எதிர்பார்ப்பு என்னவெனில், ஐ.நா. மனித உரிமைச் சபையில் நடைபெற்று வருகின்ற செயற்பாடுகள் களத்தில் மாற்றத்தைக் கொண்டு வருபவையாக இருக்கவேண்டும் என்பதே.

இலங்கையில் நடைபெற்ற போரின் போது போர்க்குற்றங்கள், மானுடத்துக்கு எதிரான குற்றங்கள் இழைக்கப்பட்டமையை நாம் அனைவரும் அறிவோம். அதனை யாரும் கேள்விக்கு உட்படுத்த முடியாது ஏனெனில் அதற்குச் சாட்சியமாக நாங்கள் உள்ளோம். உண்மையிலேயே அவை போர்க் குற்றங்கள், மானுடத்துக்கு எதிரான குற்றங்கள் என்பவற்றிற்கும் அப்பாற்பட்டவை. திட்டமிடப்பட்ட இனப்படுகொலை அங்கே நடைபெற்றது. அது தற்போதும் தொடர்ந்து வருகின்றது.

இனப்படுகொலை என்ற பதத்தைப் பாவிக்கும் போது தனியே உயிரிழப்புக்களைப் பற்றி மாத்திரம் நான் குறிப்பிடவில்லை. போரின்போது இனப்படுகொலைச் சம்பவங்கள் பல நடைபெற்றன. அவை நிரூபிக்கப்படக் கூடியவை. இங்கே உள்ள ளங்களுக்குள் சிலர் அதற்குச் சாட்சிகளாக உள்ளோம். அதில் நானும் ஒருவன்.

இனப்படுகொலை என்ற பதத்தைப் பாவிக்கும் போது அது கொலைகளை மாத்திரம் குறித்து நிற்பதாக அல்லாமல் தமிழ்த் தேசம் திட்டமிடப்பட்ட முறையில் சிதைக்கப்படுவதையும் குறிக்கும். ஒரு தேசத்தின் அடையாளமே திட்டமிடப்பட்ட வகையில் அழிக்கப்பட்டு வருகின்றது. உயிரிழப்பு என்பது அதன் ஒரு அம்சமே. 5 வருடாங்களுக்கு முன்னர் போர் முடிவுக்கு வந்துவிட்ட நிலையில் உயிரிழப்புகள் வெகுவாகக் குறைந்துள்ளன. ஆனால் அதன் அர்த்தம் அங்கே முரண்பாடு தீர்வுக்கு வந்துவிட்டது என்பது அல்ல - என்றார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவிக்கையில்,

தற்போதைய சூழ்நிலையில் ஜெனீவாவில் என்ன நடக்கப் போகின்றது என்பதை அறிய தமிழ் மக்கள் ஆவலாக உள்ளனர். போர் முடிவடைந்தும் மக்களின் துயரம் இன்னமும் தீரவில்லை. அரசு தமிழ் மக்களின் நிலங்களைத் தீவிரமாக அபகரித்து வருகின்றது. போரில் கொல்லப்பட்ட, காயப்பட்ட, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசு எந்தவித உதவியையும் வழங்கவில்லை. ஆனால், காயமடைந்த படையினருக்கு மாதாந்தம் 45,000 ரூபா உதவித் தொகை வழங்கப்படுகின்றது.

போரில் பாதிக்கப்பட்ட, காயப்பட்ட, கொல்லப்பட்ட மக்களுக்கு நீதி அவசியம். அத்தோடு அரசியல் தீர்வும் தேவை. குற்றங்கள் புரிந்தவர்கள் தண்டிக்கப்படவும் வேண்டும். அமெரிக்கா முன்மொழிந்துள்ள பிரேரணையில் தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வு பற்றி எதுவும் கூறப்படவில்லை. 13 ஆவது திருத்தச் சட்டம் பற்றியே கூறப்பட்டு உள்ளது. எமது மக்கள் மீது இழைக்கப்பட்ட உரிமை மீறல்களுக்கு சர்வதேச நீதி விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியம்.

தமிழர்களுக்கான சுயநிர்ணய அடிப்படையுடன் கூடிய இரண்டு தேசங்கள் இணைந்த ஒரு கூட்டாட்சியே இலங்கை முரண்பாட்டுக்குப் பொருத்தமான தீர்வு. இந்த நிலையை எட்டுவதற்கு முன்னர், வேகமாக இடம்பெற்று வரும் இன அழிப்பு நிறுத்தப்பட வேண்டும். எனவே, அதனைத் தடுக்க ஐ.நா. மேற்பார்வையுடன் கூடிய இடைக்கால சபை ஒன்று அமைக்கப்பட வேண்டும் - என்றார். (கு)

## இலங்கைக்கு கடத்தவிருந்த கடல் குதிரைகள் பறிமுதல்

**ஒருவர் கைதானார்**

இராமநாதபுரம், மார்ச், 23

இராமநாதபுரம் அருகே தொண்டியில் இருந்து இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த கடல் குதிரைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து தெரிய வருவதாவது:-

இராமநாதபுரம் மாவட்டம் தொண்டி பகுதியில் அரசால் தடைசெய்யப்பட்டிருந்த கடல் குதிரைகளை மர்ம நபர்கள் கடத்துவதாகக் கடலோரப் பாதுகாப்பு குழுமப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்ததையடுத்து தொண்டிப் பகுதியில் கடலோர பாதுகாப்புக் குழுமப் பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை மாலை தொண்டியைச் சேர்ந்த அர்ச்சுனன் என்பவர் கடல் குதிரைகளைப் பதுக்கி வைத்திருப்பதாக வந்த தகவலையடுத்து அங்கு சோதனை செய்ததில் ரூபா 3 இலட்சம் பெறுமதியான கடல் குதிரைகள் இருப்பது தெரியவந்தது.

கடல் குதிரையைக் கைப்பற்றிய பொலிஸார் கடத்தலில் ஈடுபட்ட அர்ச்சுனனையும் கைது செய்தனர். மேலும் அர்ச்சுனனிடம் விசாரணை செய்ததில் கடல் குதிரைகளைச் சென்னை வழியாக இலங்கை, தாய்லாந்து போன்ற வெளிநாடுகளுக்குக் கடத்த இருந்தது தெரியவந்தது.

இதனையடுத்து கடத்தலில் ஈடுபட்ட அர்ச்சுனனை இராமநாதபுரம் வனத்துறையினரிடம் கடலோரப் பாதுகாப்புப் பொலிஸார் ஒப்படைத்தனர். (கு-10)

## பொலிஸ் பிரிவு தெரியாமல் அலைக்கழித்த பொலிஸார்

*முறைப்பாடு செய்யச் சென்றவர் ஏமாற்றம்*

யாழ்ப்பாணம்.மார்ச்.23

தாக்குதல் சம்பவம் தொடர்பாக முறைப்பாடு பதிவு செய்யச் சென்றவரை 3 பொலிஸ் நிலையங்களிலும் பொலிஸ் பிரிவு தெரியாமல் அலைக்கழித்த சம்பவம் கடந்த 20 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் தாவடி, கொக்குவில் பகுதியில் உள்ள தனியார் கட்டடம் மீது நள்ளிரவு கல் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது. இது தொடர்பில் தனியார் கல்வி நிறுவன இயக்குநர் கடந்த 20 ஆம் திகதி சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்குத் தெரியப்படுத்தியதை அடுத்துச் சுன்னாகம் பொலிஸார் நேரடியாகச் சம்பவம் நடந்த இடத்துக்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதனையடுத்துக் குறித்த நபர் முறைப்பாட்டைப் பதிவு செய்வதற்காக சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றபோது, சம்பவம் நடந்த இடம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உரியது. எனவே அங்கு சென்று முறைப்பாட்டை வழங்குமாறு சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர் முறைப்பாட்டை வழங்குவதற்காகக் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றுள்ளார். அங்கு கோப்பாய் பொலிசார் சம்பவ இடத்துக்கு நேரடியாக வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்ட போது, குறித்த பகுதி சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு உரியது. எனவே அங்கு செல்லுமாறு கூறிவிட்டு அவர்கள் அங்கிருந்து சென்றுவிட்டனர்.

மீண்டும் சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குக் குறித்த நபர் சென்றபோது, இந்தப்பகுதி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு உரியது. எனவே அங்கு சென்று முறைப்பாட்டை பதியுமாறு சுன்னாகம் பொலிசார் தெரிவித்துள்ளனர். பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றபோது குறித்த பகுதி சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கே உரியது. அங்கு செல்லுமாறு யாழ்ப்பாணம் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதி எந்தப் பொலிஸ் பிரிவுக்குள் அடங்குகிறது என்று தெரியாமல் 3 பொலிஸ் நிலையங்களிலும் பொலிஸார் திருப்பி அனுப்பியமையால் முறைப்பாட்டை வழங்க முடியாது ஏமாற்றம் அடைந்த அவர் வீடு திரும்பினார்.

கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையங்களுக்கு காலை 9 மணியில் இருந்து மாலை 5.30 மணிவரை தாம் மாறிமாறி அலைக்கப்பட்டதாக அவர் கூறினார். (கு-14)

## கொழும்புத் துறைமுக நகர் ஆய்வுக்கு தெரிவுக்குழு அமைக்கப்படவேண்டும்

*எதிர்க்கட்சித் தலைவர் ரணில் கோரிக்கை*

கொழும்பு, மார்ச், 23

கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் தொடர்பாக ஆராய்வதற்காக தெரிவுக் குழுவொன்று அமைக்கப்படவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றம் வெள்ளிக்கிழமை பிரதிச் சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கூடியபோது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சபையின் பிரதான நடவடிக்கைகள் முடிவடைந்ததன் பின்னர் நிலையியற் கட்டளை 23.2 இன் கீழ் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எழுந்திருந்த போது கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்காக ஆளுந்தரப்புப் பிரதம கொரடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தயாரானார்.

'இரண்டு கேள்விகளுக்கு விரிவான பதில்கள் வழங்கப்படவிருப்பதால் நேரத்தைக் கருத்தில்கொண்டு அவற்றைச் சபாபீடத்தில் சமர்ப்பிக்கவா?' என எதிர்க்கட்சித் தலைவரிடம் கேட்டார் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன.

இதற்குப் பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க, சபாபீடத்தில் சமர்ப்பிக்கும் அதேவேளை ஹன்சாட்டிலும் உள்ளடக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அத்துடன் துறைமுக நகரத் திட்டம் விவாதத்துக்கு வரும் வரையில் அது தொடர்ந்தால் ஆராய்வதற்கு தெரிவுக்குழுவொன்றை அமைக்குமாறு ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்தார்.

அதேவேளை அரசுக்கு எதிராகச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை விவகாரம் தொடர்பாகவும் இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் கேள்விகளை எழுப்பினார்.

இதற்கு பதில் வழங்கிய அமைச்சர் தினேஷ் குணவர்த்தன.

மேற்படி விடயத்தை ஏப்ரல் 8ஆம் திகதி விவாதிப்பதற்குக் கா[illegible]துக்கப்பட்டது. ஒரு நாளில் இரவு 2.30 மணிவரை விவாதிப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டது. எனினும் ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் இரண்டு நாள்களை கோருவதால் மே மாதம் அது சாத்தியமாகும். இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விவாதமொன்றும் இருக்கின்றது - என்றார். (கு-10)

## வடக்கில் வன்முறைகளை கண்டிக்கிறது புதிய ஜனநாயக கட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 23

வடக்கில் தொடரும் மனித உரிமை மீறல்கள், அரசின் இராணுவ முனைப்பினூடான பேரினவாத ஒடுக்குமுறை என்பவற்றைப் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி வன்மையாகக் கண்டிப்பதாக கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்தில்வேல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கிளிநொச்சி தருமபுரத்தில் பாலேந்திரா ஜெயகுமாரியும் அவரது மகள் விபூசிகாவும் பயங்கரவாதத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். தொடர்ந்து மனித உரிமை ஆர்வலர் ருக்ஷி பெர்ணான்டோவும் மதகுரு அருட்திரு பிரவீனும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். காணாமற்போன ஆசிரியர் கார்த்திகேசு நிரூபன் மாங்குளத்தில் எலும்புக்கூடாக மீட்கப்பட்டார். இவ்வாறான சம்பவங்கள் வடக்கில் தொடர்ந்த வண்ணம் உள்ளன [illegible] பேரினவாத ஒடுக்குமுறையைக் கைவிடத்தயாராக [illegible] மிட்டுப் பழிவாங்கும் நடவடிக்கைகளையே தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது. இதனை எமது கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது - என்றுள்ளது. (கு-14)

**மொழி பெயர்ப்பாளர் தேவை**

பிரபல பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்கு ஆங்கில மொழியில் இருந்து தமிழ் மொழிக்கும் சிங்கள மொழியில் இருந்து தமிழ்மொழிக்கும் மொழி பெயர்ப்புச் செய்யக்கூடிய ஒருவர் உடன் தேவை.

( பத்திரிகைத்துறையில் முன் அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது.)

தொடர்பு : 078 2846666

# விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்ககோருவோம்

### ம.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் தீர்மானம்

சென்னை, மார்ச் 23

விடுதலைப்புலிகள் இயக்கம் ஒருவன்முறை இயக்கம் அல்ல. அவர்கள் இன விடுதலைப் போராளிகள் என நியூசிலாந்து மற்றும் இத்தாலி நீதிமன்றங் கள்தீர்ப்பு அளித்துஉள்ளனஎனவே இந்தியாவில் விடுதலைப்புலி கள் மீது விதிக்கப்பட்டு உள்ள தடையை நீக்க வலியுறுத்து வோம். இவ்வாறு ம.தி.மு.க. வெளியிட்டுள்ள தேர்தல் அறிக் கையில் கூறப்பட்டுள்ளது.

இந்திய லோக்சபா தேர்தலுக் கான மதிமுகவின் தேர்தல் அறிக்கை நேற்று சென்னை யில்வெளியிடப்பட்டது. இதனை ம.தி.மு.க பொதுச்செயலர் வைகோ வெளியிட்டு உரை நிகழ்த்தி னார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்தியாவின் பெயரை இந்திய ஐக்கிய நாடுகள் என மாற்றம் செய்வோம் என்பது எமது முதலாவது உறுதி மொழியாக உள்ளது. அத்துடன் இலங்கை யில் ஈழத்தமிழர்களுக்கு விடிவு காலம் கிடைக்க வலியுறுத்தி இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக் கக் கோரும் தீர்மானத்தையும் நாம் கொண்டுவந்துள்ளோம். விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவின் இறையாண் மைக்கு எதிராகச் செயல்படுவ தாகவும், இந்தியப் பகுதிகளை யும் இணைத்துத் தனிநாடு கேட்பதாகவும், ஆதாரம் இல் லாத பொய்யான குற்றச் சாட்டு களின் அடிப்படையில் மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசு, விடு தலைப்புலிகள் மீது தடையை விதித்து அதை தொடர்ந்து



தேர்தல் அறிக்கை வெளியிடுகிறார் வைகோ

பேணி வருகிறது. உண்மை யில் இது ஒரு இனத்துக்கு செய் யும் துரோகம் விடுதலைப் புலி கள் இயக்கம் ஒரு வன்முறை இயக்கம் அல்ல. அவர்கள் இன விடுதலைப் போராளிகள் என நியூசிலாந்து மற்றும் இத் தாலி நீதிமன்றங்கள் தீர்ப்பு அளித்து உள்ளன. எனவே, இந்தியாவில் விடுதலைப் புலி கள் இயக்கத்திற்கு விதிக்கப் பட்டு உள்ள தடையை நீக்க வலியுறுத்துவோம் என வைகோ குறிப்பிட்டார். ம.தி.மு.க தேர்தல் அறிக்கையில் 46 உறுதிமொழி கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (ஐ)

# சட்டங்களில் மாற்றங்கள் சிந்திக்கவேண்டியுள்ளது

### ஜனாதிபதி கூறுகிறார்

யாழ்ப்பாணம், மார்ச் 23

1940 ஆம் ஆண்டு காலங்க ளில் கொண்டுவரப்பட்ட சட்டங் களில் மாற்றம் ஏற்படுத்துவது பற்றி மீளச் சிந்திக்கவேண் டியுள்ளது. சிறு குற்றங்கள் புரிந்த பலர் நீதிமன்றத் தீர்ப்புக் கமையத் தண்டனை அனுப விக்கிறார்கள். இதனை நோக் கும்போது சிறைக் கைதி களை அடைத்து வைத்து அவர்களுக்குத் தண்டனை வழங்குவதை விடுத்துச் சிறைச் சாலைகளைப் புனர்வாழ்வு நிலையங்களாக மாற்றி அவர் களுக்குப் புனர்வாழ்வு அளிப் பது பற்றி அதிகாரிகளுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் கல்விமேம்பாட்டுக் காக அமைக் கப்பட்ட முதலாவது பாடசாலை யைத் திறந்து வைத்து உரை யாற்றுகையிலேயே ஜனா திபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

வாழ்க்கைக்கான தொழிலே இவர்களின் எதிர்காலத்துக்குச் சிறந்ததாக அமைய முடியும். சிறு குற்றங்களுக்காகத் தண் டனைகளை அனுபவித்து வரும் எமது சகோதரர்கள் தொடர்பில் நாம் சற்றுப் பரந்து சிந்திக்கவேண்டியுள்ளது.

முதற்கட்டமாக ஜீ.சீ.ஈ சாதா ரண தரம் வரையும் கற்பித்



மஹிந்த ராஜபக்ஷ

தல் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதுடன் இரண் டாம் கட்டமாக ஜீ.சீ.ஈ உயர் தரம் அதனையடுத்து திறன் அபிவிருத்தி தொழில் பயிற்சி களும் இதனூடாகச் சிறைக் கைதிகளுக்கு வழங்கப்பட வுள்ளன. முதற்கட்டமாக 120 மாணவர்கள் இங்கு கல்வி பயில உள்ளனர்.

தற்போது சிறைச்சாலைக்கு ள்ளும் பல குற்றங்கள் நடை பெறுவதனையே காண முடி கின்றது. முன்னைய காலத்தில் 16 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களைப் படுகொலை செய்ய உத்தர விட்டவர்கள் - பௌத்த மதத் துக்கு இழுக்கு ஏற்படுத்தும் வகையில் கண்டி தலதா மாளிகைக்கு அருகில் தூக்கு மேடை அமைத்தவர்களே இப்போது மனித உரிமை சம்பந்தமாகவும் சமய நல் லிணக்கம் சம்பந்தமாகவும் எம்மிடம் கேள்வி எழுப்பி வருகின்றனர்-என்றார். (த-4)

# இலங்கை மீதான நடவடிக்கை உறுப்புநாடுகளே தீர்மானிக்கும்

### ஐ.நா. செயலர் தெரிவிப்பு

இலங்கை மீது எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட வேண் டும் என்பதை நிலுவையில் உள்ள தீர்மானத்தின் மூலம், ஐக்கிய நாடுகள் மனித உரி மைகள் சபையின் உறுப்பு நாடுகளே தீர்மானிக்க வேண் டும் ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ-மூன் உறுதியாக இருக் கிறார் என அவரது பிரதிப் பேச் சாளர் பர்ஹான் ஹக் தெரி வித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போதான சம்பவங் களுக்குப் பொறுப் புக்கூறப்பட வேண்டும் என்பதிலும் பான் கீ - மூன் உறுதியாக இருக் கிறார் என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

நேற்றுமுன்தினம் நியுயோர்க் கில் செய்தியாளர் ஒருவர் எழுப் பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இதனைத் தெரி வித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேர வையில் உள்ள உறுப்பு நாடு கள் நிலுவையில் உள்ள தீர் மானத்தில் இதனைக் கருத் தில் எடுக்க வேண்டும். அதற் கான பொறுப்பை அவர்களி டமே விட்டு விடுவதாகவும் பர்ஹான் ஹக் தெரிவித்துள் ளார்.

இதேவேளை, மனித உரிமை கள் சட்டவாளர் யஸ்மின் சூகா, மற்றும்பிரிட்டன்மனித உரிமை சட்டவாளர் குழுவின் அறிக்கை தொடர்பான கேள்விக்கு பர் ஹான் ஹக் நேரடியாகப் பதி லளிக்க மறுத்து விட்டார். (த)




சர்வதேச ஊழியத்தின் 36 ஆவது சுவிசேஷ மாநாடு!

மார்ச் மாதம் 28ஆம் 29ஆம் 30ஆம் திகதிகளில்
தினமும் மாலை 5.00 மணிக்கு
நகரசபை மைதானம் யாழ்ப்பாணத்தில்
(துரையப்பா மைதானம் அருகில்) நடைபெறும். பிரவேசம் இலவசம்!

பிரியமானவர்களே !
அண்டசராசரத்தை ஆளுகை செய்யும் ஆண்டவர் ஒருவர் இருக்கிறார். அவருடைய வல்லமையை அளவிட முடியாது. அவரே தொடக்கமும் முடிவுமானவர். ஜீவியத்தில் நோய், துன்பம், கண்ணீர், சஞ்சலம், தோஷங்களிலிருந்தும், விடமுடியாத பழக்கவழக்கம், பாவ வாழ்க்கை, பொல்லாத ஆவிகளின் செய்வினை கட்டுகள், மாந்திரீகம், பில்லிசூனியத் திலிருந்தும் விடுதலை பெற இதோ ஓர் அரிய சந்தர்ப்பம் உங்களை நோக்கி வருகிறது. இச் சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள். இன்றே அற்புதத்தின் நாள். ஆசீர்வாதத்தின் நாள். உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
தெய்விக சுகத்தையும், சமாதானத்தையும் பெற்றுக்கொள்ள வாருங்கள்! உங்களுக்காக பிரார்த்தனை செய்பவர்கள்,

கலாநிதி. M.R. இராஜேந்திரம் அவர்கள். C.V. இராஜேந்திரம் அவர்கள்.

(சி.12655)(3.6)

36ஆவது வருட வேதாகம கருத்தரங்கு!
2014 மார்ச் 23 முதல் 30 வரை தினமும் காலை 8.00 - 2.00 வரை நடைபெறும். இடம்:- A.O.G. சபை மண்டபம், 68/2, ராசாவின் தோட்டம், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். பிரவேசம் இலவசம்!

For Information :- Jesus Lives Evangelical International Ministry, T.P. 2522608, Fax- 2525695, Web- Jesusliveslk.com

யாழ் மண்ணின் இணைய வானொலி
சுடர்fm www.sudarfm.com பெருமையுடன் வழங்கும்
சுடர் விருதுகள் – 2014

நீங்கள் குறும்படம் அல்லது பாடல்களை படைக்கும் படைப்பாளிகளா?
அப்படியாயின், நீங்கள்தான் சுடர் விருதுகள் 2014ற்கு சொந்தமானவர்கள்
இப்போதே உங்கள் படைப்புக்களின் இரண்டு இறுவெட்டினையும் தொடர்பு கொள்ளும் முகவரியுடனும் எமக்கு அனுப்பி வையுங்கள்.
இவ்விருதுகள் "பல்துறை" சார்ந்த கலைஞர்களுக்கான விருது என்பதை மறந்து விடாதீர்கள் ! ! !
370A, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். மேலதிக தொடர்புகளுக்கு 0770557261 இறுதித்திகதி 2014/03/31

# நுண்கலை மாணவன் காயம்

வலி.வடக்கு, மார்ச் 23

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட இறுதி வருட மாணவர் ஒருவரை வளாகத்தின் வெளியே வைத்து இனந்தெரியாதோர் தாக்கினர். இதனால் குறித்த மாணவன் காயமடைந்து தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்த சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றது. மருதனார்மடத்தில் அமைந்துள்ள நுண்கலைப்பீடத்தில் நேற்று இடம்பெற்ற வரவேற்பு உபசார விழாவை முடித்துக் கொண்டு குறித்த மாணவன் வீடு திரும்ப முற்பட்ட வேளை வளாக வாயிலில் வைத்து வெளியில் நின்ற கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது. இதன்போது இறுதி வருட மாணவன் காயமடைந்தார். சம்பவம் குறித்து கேள்வியுற்ற சுன்னாகம் பொலிஸார் அங்கு வந்தமையால் குறித்த குழுவினர் அங்கிருந்து தப்பிச்சென்றனர். இது தொடர்பாக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டனர். (ஐ-86)


## கண்ணீர் அஞ்சலி



யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய அதிபரும், தேசிய கல்வி நிறுவக பகுதி நேரவிரிவுரையாளருமாகிய

திரு.த. தயாளன் அவர்களின் தந்தை

**தம்பு நடேசு**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தேசிய கல்வி நிறுவக யாழ்ப்பாணப்பிராந்திய இணைப்பாளரும், விரிவுரையாளர்களும்

## கண்ணீர் அஞ்சலி

**கஜந்தன் சந்தோஷி**



மழலை மொழி பேசி, மகிழ்வுடனேயே கைவீசி,
மகளாய் எம்முடனிருந்த சந்தோஷி,
கனவிலும் நினைக்கவில்லை
காலன் கருவறுப்பானென்று!!!
உன் பிஞ்சுக்கரத்தால் எமக்கூட்டிய பலகாரம்,
பாதி செமிப்பதற்குமுன், பாவியுனை பாதகன்
பாரை விட்டே அழைத்துவிட்டான்!!!
உன்னை உயிர்காவு கொண்டதற்காக
காட்டுமிராண்டி காலன் கூட கண்கலங்கி ஒருநாள்
அழுவான், அவன் தொழில் விடுவான்!!! எம் அன்பு
மழலையே இன்று நீ இவ்வுலகில் இல்லை,
உன் நினைவுகளுக்கு ஒன்றுமே நிகரில்லை,
காலனின் செயலில் நீதி இல்லை!!!
காலமெல்லாம் மகளே நீதான் எம் பிள்ளை!!!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

உரிமையாளர் பணியாளர்கள்
துவாரகா நகைமாடம், யாழ்ப்பாணம். நாதன் பல்பொருள் வாணிபம், வவுனியா.
(46021)(10)

## வேலை ஆள்கள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு விற்பனையாளர் தேவை. ஆண்கள் மட்டும் வயது 18 தொடக்கம் 25 வரை நாள் ஒன்றுக்கு வேதனமாக ரூ 450/= ம் மேலதிகமாக 100/= ரூபாவும் வழங்கப்படும்.
வேலை நேரம் காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை 24 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு : 11A ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
T.P : 021 2223857


## வேலைவாய்ப்பு

தனியார் துறைமுகம் விமான நிலையத்தில் வேலை செய்ய விருப்பமா ?
18 – 45 வயதை உடையவராயின் கப்பல் புனர் நிர்மாணப் பிரிவில் சாதாரண ஊழியர்கள், வெல்டர், தச்சு, விமான நிலையத்தில் சுத்திகரிப்பாளர் கேட்டரிங், லோன்றி சம்பளம் 18000/= 35000/= உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில்
தொடர்பு : 077 5561883, 077 4312176

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

4 அறைகள், கிணறு, சமையலறை 2 மலசல கூடம், குளியலறை (உள்வெளி) இரண்டு கோல், 2 விறாந்தை உடன் கூடிய புதிய வீடு (கட்டி 2வருடம், முழுமையாக மாபிள் பதிக்கப்பட்டுள்ளது). 3 பரப்புக் காணியுடன் விற்ப னைக்கு உண்டு.
இடம் : விளையாட்டரங்கு வீதி, கல்வியங்காடு.
தொடர்பு : 021 222 5853, 07730 44162
(தரகர் தேவையில்லை)
விலை நேரில் பேசலாம் (46058)(10)

CEYLON THEATRES
இப்பொழுது திரையில்
MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 10.30am, 2.30pm, 6.30pm




Silver 10.15am, 2.15pm, 6.15pm




Bronze 10.30am, 2.30pm, 6.30pm
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

## மலேசியாவில் வேலைவாய்ப்பு

இலக்றோனிக்ஸ் பாக உற்பத்தி நிறுவனத்திற்கு
புரடக்சன் ஒப்பரேற்றர்ஸ் (ஆண்கள்)
அடிப்படை சம்பளம் 36000/=

உடன்படிக்கைகள்
- இரவு வேலைக்காக நாளொன்றுக்கு சம்பளத்திற்கும் அதிகமாக ரூ400 வழங்கப்படும்.
- வார நாள்களில் மேலதிக வேலை நேரம் = மணித்தியாலத்திற்கு X 1.5
- விடுமுறை நாள்களில் = மணித்தியாலத்திற்கு X 2.0
- குளிக்குமிட வசதி வைத்திய வசதி இலவசம்.
- திரும்பி வருவதற்கான விமான சீட்டு இலவசம்.
- வயதெல்லை -18-32, க.பொ.த (சா/த, உ/த)
- I.T பாடநெறியொன்றை கற்றிருத்தல் மேலதிக தகைமையாகும்.

பியுரோ அனுமதி கட்டணம் - 125,000/=

மலேசியா நாட்டு முகவர் நிறுவனத்தினரால் நேர்முகப்பரீட்சை இம்மாதம் 24ஆம், 25ஆம் திகதிகளில் மாத்தளையிலும் 26ஆம் திகதி பேராதனையிலும் (0723449835, 0777807090) காலை 9 மணியிலிருந்து நடைபெறும்.
உடனடியாகப் பதிவுசெய்வதற்கு
U.M.A என்ரபிறைசஸ் (தனியார்) நிறுவனம்,
இல. 612/B, பிரதான வீதி மாத்தளை.
0662226888 / 0716597943 / 0779989907 / 077 48 74 937 / 0714545968
uma2877@gmail.com Kisho-Jaffna : 0714540968
umakandy593@yahoo.com App No:AL/2877Advt/03/14

## Vacancy

IDM Nations Campus is the Premier higher education institute in Sri lanka and is focused in providing Quality education in IT, English, Business Management and Soft skills to the Nations. With this Objective, Orient Academy has expanded its service with the current growth of Business the company requires to fill the following vacancy for the mentioned location.

**Lecturers**
IT/Management

**Requirements**
Recognized Qualification in the relevant field and experience in Similar field will be an added advantage

Apply via- email or by post with complete Curriculum Vitae Of two non- related referees, before 30th March

IDM
IDM Nations Campus
Chavakachcheri Branch
Managed by Stepinto
No,267, Kandy Road, Chavakachcheri
Tel: 021 7 200 600, E- mail: info.idmchava@gmail.com

## மரண அறிவித்தல்



திருமதி **மாணிக்கம் தவச்செல்வம்**

நெடுந்தீவைப்பிறப்பிடமாகவும் நல்லூர் முத்திரைச்சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் தவச்செல்வம் நேற்று (22.03.2014) சனிக்கிழமை காலமாகவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தவச்செல்வத்தின் அன்பு மனைவியும் குணரட்ணம் (லண்டன்) அவர்களின் அன்புச்சகோதரியும் ஸ்ரீதரன், முரளிதரன், மோகன், வனிதா, சுகிர்தா, மலர்விழி (சென்றல் நேசிங் ஹோம்) ஆகியோரின் அன்புத்தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 4 மணிக்கு பூதவுடல் தகனத்திற்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

62/8 செம்மணி வீதி, முத்திரைச்சந்தி.
தகவல் முரளிதரன் (மகன்)

## மரண அறிவித்தல்



திருமதி **தங்கமுத்து வீரசிங்கம்**


கொக்குவில் மேற்கு, வராஹி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கமுத்து வீரசிங்கம் நேற்று (22.03.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து-லட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், வீரசிங்கத்தின் பாசமிகு மனைவியும், பாக்கியலட்சுமி, இராஜேஸ்வரி, ஜெகதீஸ்வரி (சுதா), சாந்தினி ஆகியோரின் அன்புத் தாயும், இந்திரன், சிவபாலன், சிவபாக்கியம் ஆகியோரின் பெரிய தாயும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, செல்லப்பா (அப்பர்), நடேசு, திருப்பதி, பேரம்பலம், சரஸ்வதி, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இரத்தினசிங்கம் மற்றும், தனராஜா, சிவநேசராசா, பாஸ்கரன், பிறேமா, சுபாசினி ஆகியோரின் பாசமிகு மாமியும், றமேஸ், தனதீசன், சுகாசினி (பாப்பா), மைதிலி, தயாளன், தனுசன் (தினேஸ்), கபிசனா, விதுர்சன், மிதுசிகா, யதுர்சன், பேருஷாலி, தனுவர்ணன், பபிகேசன், டிலக்சன், டனிஸ்ரன், சுலோசனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், டேனுஜா, கிதுஜா, ஆராதனா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப 01 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வராஹி அம்மன் கோயில், கொக்குவில் மேற்கு. (3346065)(10) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**மாணிக்கம் சின்னத்துரை**

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சின்னத்துரை 22/03/2014 அன்று சனிக்கிழமை காலமானார். அன்னார் காலம் சென்ற மாணிக்கம் நன்னிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் நாகமணி சுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகனும் நாகமணி சுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலம் சென்ற சரஸ்வதியின் அன்பு கணவரும் காலம் சென்ற அரியராணி மற்றும் செல்வராணி, புஸ்பராணி, உதயகுமாரி (மலேசியா), பாஸ்கரன் (ஜேர்மனி), பாலகுமார் (செல்வம்), சதீஸ்குமார் (ரகு) ஆகியோரின் அன்புத் தகப்பனும், சிவசுப்பிரமணியம், மகேந்திரன், பாலசுப்பிரமணியம், ஸ்டீபன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி மற்றும் சுபாசினி, லோஜி ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23/03/2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்
தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

**முருகர் கணபதிப்பிள்ளை**



நாயன்மார்கட்டை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகர் கணபதிப்பிள்ளை 21.03.2014 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளையின் அன்புக்கணவரும் மகாத்மராஜா, பத்மினி, கிரோகினி, கமலினி, மாலினி, அன்பினி (லண்டன்), தர்மராஜா (தர்மம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் சந்திரலேகா காலஞ்சென்ற செல்லத்துரை, அன்ரன்பிரான்சிஸ், சுவாமிநாதன், பிறேமானந்தா, பிறேமதர்சினி ஆகியோரின் மாமனாரும் சாதுரிகன், அசோக் பிரவீன், துளசி, அபிராமி, ஆகாஷ், தர்ஷிகா, ஷகானா, கவின், அபிநயா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.03.2014) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

24 அம்பாள் வீதி, நாயன்மார்கட்டு
077 1816330
தகவல் குடும்பத்தினர்.

# கிழக்கில் தமிழ்ப் பாடசாலைகள் திட்டமிட்ட வகையில் புறக்கணிப்பு

*அங்கு அடக்குமுறை நிர்வாகமே நடக்கிறது*
*இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு*

மட்டக்களப்பு,மார்ச் 23
கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்ப் பாடசாலைகள் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுவதோடு, அங்கு கடமையாற்றுகின்ற அதிபர், ஆசிரியர்களும் பழிவாங்கப்படுகின்றனர்.
அங்கு அடக்கு முறை நிர்வாகமே நடைமுறையில் உள்ளது. இவ்வாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.
இது தொடர்பில் தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் கடமையாற்றிய தமிழ் உயர் அதிகாரிகளை திட்டமிட்டு வெளியேற்றி பெரும்பான்மை இனம் சார்ந்த அதிகாரிகளே தற்போது முற்று முழுதாகக் கடமையாற்றுகின்றார்கள்.
அதனால் அதிகளவான தமிழ்ப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களின் தேவைகள் புறக்கணிக்கப்படுகின்றன; தமிழ் பாடசாலைகளும் புறக்கணிக்கப்படுகின்றன.
அடக்குமுறைப் பாணியில் அதிபர்களும் ஆசிரியர்களும் துன்புறுத்தப்படுகின்றனர். பாடசாலைகளில் அதிபர்கள் நியமனம், கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் நியமனம், கோட்டக்கல்விப் பணிப்பாளர்களின் நியமனம் உள்ளிட்ட அனைத்திலும் திட்டமிட்ட பழி வாங்கல்களும் புறக்கணிப்புகளும் இடம்பெற்றுள்ளமை ஆதாரங்களுடன் நிரூபணமாகியிருக்கின்றன.
கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் அடக்குமுறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை, மீண்டும் இனக்குரோதங்களைத் தூண்டுகின்ற செயற்பாடுகளாகவே நோக்கப்பட வேண்டியுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
தமிழ் பேசும் உயர் அதிகாரிகளின் பொறுப்புகளைப் பறித்தெடுத்து, தமிழ் பாடசாலைகளுக்கு எதுவுமே செய்ய விடாமல் தடுத்து, அரசியல் ரீதியிலான செல்வாக்குகளை கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் பிரயோகிப்பது அவரது பதவிக்குரிய அதிகாரம் உடையதல்ல.
பொருத்தமில்லாத ஏராளமான படிவங்களை பாடசாலைகளுக்கு அனுப்பி அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் சுமைகளைக் கூட்டி மாகாணக் கல்வித் திணைக்களம் செய்ய வேண்டிய வேலைகளை பாடசாலைகள் மீது சுமத்துவது பொருத்தமில்லாத செயற்பாடு.
இடமாற்றச் சபை கூடித் தீர்மானித்த அதிபர்கள், ஆசிரியர்களின் இடமாற்றங்களையும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் இடைநிறுத்தியிருப்பது அடக்கு முறையின் இன்னுமொரு வெளிப்பாடு.
பெரும்பான்மையான தமிழ்ப் பாடசாலைகளைக் கொண்ட கிழக்கு மாகாணத்தில் இவ்வாறானதொரு அடக்கு முறையைப் பிரயோகிப்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்பதனை சம்பந்தப்பட்டோர் புரிந்து கொள்ள வேண்டும் -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ச)

## கட்டடங்களை அமைக்கும்போது எமது நலன்களையும் கவனிக்குக

*மாற்று வலுவுடையோர் கோரிக்கை*

யாழ்ப்பாணம்.மார்ச் 23
புதிய கட்டடங்கள் அமைக்கப்படும் போது மாற்றுவலுவுடையவர்களும் அவற்றைப் பயன்படுத்தக் கூடிய முறையில் அவை அமைக்கப்பட வேண்டும் என்ற நீதிமன்றத் தீர்ப்பை வடமாகாணத்திலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மாற்றுவலுவுடையோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.
வங்கிகள், வைத்தியசாலைகள் உட்பட பொது இடங்களிலும் அரச சார்பற்ற நிறு வனங்களின் கட்டடங்களில் மாற்றுவலுவுடையவர்கள் பயன்படுத்தக்கூடிய விதத்தில் கட்டடங்கள் அமைக்கப்படாத காரணத்தால் அவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. இந்த நிலையில் இனிவரும் காலங்களில் புதிய கட்டடங்கள் அமைக்கப்படும்போது மாற்று வலுடையவர்களும் அவற்றைப் பயன்படுத்தக் கூடிய விதத்தில் அவை அமைக்கப்பட வேண்டும் என்று நீதிமன்றில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
வடமாகாணத்தில் தற்போது புதிய கட்டடங்கள் அதிகளவு அமைக்கப்பட்டு வருவதால் கட்டடங்களை அமைப்போர் அவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.
கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துக்கு முன்னதாக பொதுக் கட்டடங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் கட்டடங்களில் மாற்று வலுவுடையவர்களுக்கு உட்பிரவேசிக்கக்கூடிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும் அதனை நடைமுறைப்படுத்துமாறு மாற்றுவலுவுடையோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-14)

## நம்பிக்கை நிதியச் செயற்பாடுகள் சிறந்த முறையில் முன்னெடுப்பு

*தென்மராட்சிப் பிரதேச செயலக கணக்காளர் பாராட்டு*

**நேர முகாமைத்துவம் பேணப்படல் வேண்டும். இதற்கு சிறந்த திட்டமிடல் அவசியம். இதன் மூலம் நேரத்தை மீதப்படுத்தலாம். அதிக அங்கத் தவர்களை இணைக்க வேண் டும். அங்கத்தவர் எண்ணிக்கை அதிகரிக்க நன்மைகளும் கூடக்கிடைக்கும்**

வரணி, மார்ச் 23
தென்மராட்சிப் பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கத்தின் செயற்பாடுகள் நேர்மையானவையாகவும் அர்ப்பணிப்பு உணர்வு மிக்கவையாகவும் உள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது. இந்தச் செயற்பாட்டை நான் பாராட்டுகிறேன்.
தென்மராட்சி பிரதேச செயலக கணக்காளர் திருமதி வசந்தமாலா மனோகரன் இவ்வாறு தெரிவித்தார்.
கடந்த வாரம் தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவின் பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் செ.ஞானலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.
இந்தக் கூட்டத்தில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோது வசந்தமாலா மனோகரன் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் தொடர்ந்து உரையாற்றும் போது:-
நிர்வாகக் கடமைகள் ஒழுங்கமைக்கப்பட்டு ஒவ்வொருவரும் அதைப் பொறுப்பேற்று விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டும். வயோதிபர்களான உங்களை கூடிய நேரம் இங்கு காக்க வைக்க முடியாது. விரைவில் உங்களை வீட்டுக்கு செல்ல உதவும் வகையில் செயற்பட்டு தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். உங்களது நலன் சார்ந்த விடயங்களை உங்கள் சங்கம் நிறைவேற்றுகிறது.
நேர முகாமைத்துவம் பேணப்படல் வேண்டும். இதற்கு சிறந்த திட்டமிடல் அவசியம். இதன் மூலம் நேரத்தை மீதப்படுத்தலாம். அதிக அங்கத்தவர்களை இணைக்க வேண்டும். அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதனால் நன்மைகளும் அதிகமாகும். உங்கள் சங்கச் செயற்பாடுகளை பாராட்டுகிறேன் என்று தெரிவித்தார். (வ-122)

## மின் விநியோகம் ஆரம்பித்து வைப்பு



மின் விநியோக ஆரம்ப நிகழ்வின்போது

வரணி, நாவற்காடு பொது நோக்கு மண்டபத்துக்கான மின்சார விநியோகம் கடந்த செவ்வாய்க்கிழமை வட மாகாண போக்குவரத்து கடற்றொழில் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
நாவற்காடு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொதுநோக்கு மண்டபத்துக்கான மின்சார விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்ட அதே சமயம் மிருசுவில் சுட்டிபுரம் பிரதான வீதி புனரமைப்பு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.
இந்த நிகழ்வில் வட மாகாண சபை உறுப்பினர்களான யோ. சிவயோகன், எம்.எம். அஸ்மின் உட்பட பொது மக்களும் கலந்து கொண்டிருந்தனர். (ஓ)

## வழிப்பறிக் கொள்ளை

வரணி, மார்ச் 23
வடமராட்சி தில்லையம்பலப் பிள்ளையார் ஆலய வீதியில் வழிப்பறிக் கொள்ளைச் சம்பவம் ஒன்று கடந்தவாரம் இடம்பெற்றுள்ளது.
வரணி, இயற்றாலைப் பகுதியில் இருந்து கரவெட்டிப் பகுதிக்கு மேசன் வேலைக்குச் சென்ற ஒருவர், வேலை முடிந்து மாலை வேளை வீட்டுக்குத் திரும்பி வந்த போது மூவர் கொண்ட குழுவினரால் வழிமறிக்கப்பட்டு தாக்கப்பட்டதுடன், அவர் எடுத்துச் சென்ற அரிசி மற்றும் 2 ஆயிரம் ரூபா வரையான பணமும் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-122)

# கட்டுப்பாட்டுக்குள் வந்தது கால்வாய் நோய்த் தாக்கம்

*யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில்*

**வட மாகாணத்தில் குறிப்பாக யாழ். மாவட்டம், வவுனியா மாவட்டம், முல்லைத்தீவு மாவட் டங்களில் பால் தரும் மாடுகளுக்கு கால்வாய் நோய்க் கிருமித் தாக்கம் ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்ட நிலையில் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.**

யாழ்ப்பாணம்.மார்ச் 23
யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மாடுகளுக்கு ஏற்பட்ட கால்வாய் நோய் கிருமித்தாக்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதால் பால் நுகர்வோர் மற்றும் இறைச்சிப் பாவனையாளர்கள் இனிமேல் அச்சப்படத் தேவையில்லை என்று வட மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.வசீகரன் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
வட மாகாணத்தில் குறிப்பாக, யாழ்.மாவட்டம், வவுனியா மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டங்களில் பால் தரும் மாடுகளுக்கு கால்வாய்நோய்க் கிருமித்தாக்கம் ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்ட நிலையில் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இந்தக் கிருமித்தாக்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.
எனினும் ஏனைய மாவட்டங்களில் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாதிப்பு இல்லாத பிரதேசங்களில் பால் நுகர்வோர் மற்றும் இறைச்சிப் பாவனையாளர்கள் இவற்றைப் பயன்படுத்துவதால் பாதிப்பு ஏற்படும் என்று தவறான அபிப்பிராயம் கொள்ளத் தேவையில்லை.
இந்த நிலையில் வடமாகாணத்தில் தற்போது மன்னார் மாவட்டத்தில் சிறிதளவிலும், முல்லைத்தீவு மாவட்டம் மற்றும் வவுனியா மாவட்டங்களிலேயே நோய்த்தாக்கம் உள்ளது. யாழ்.மாவட்டத்தில் தெல்லிப்பழை, கோப்பாய், வட்டுக்கோட்டை பிரதேசங்களில் இந்த நோய்த்தாக்கம் அடையாளம் காணப்பட்டு அவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது..
வட்டுக்கோட்டை பிரதேசத்தில் அதிகளவான தாக்கம் இருந்தமையால் அவற்றையும் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் பால் உற்பத்தியாளர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு அவற்றை முற்று முழுதாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**வவுனியா பகுதிகளில் நோய்த்தாக்கம்**

வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம், வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு ,வவுனியா நகர் ஆகிய பகுதிகளிலும் இந்த நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளது.
அதே போன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசத்திலும் இந்த நோய்த் தாக்கம் இனங்காணப்பட்டுள்ளது.
எனினும் நல்லின மாடுகளுக்கு ஏற்கெனவே தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளதால் இந்த நோய்த்தாக்கம் பெரிதளவில் ஏற்படவில்லை .
நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ள பிரதேசங்களில் பாலைக் காய்ச்சிக்குடிப்பதால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது . ஆனால் வேறு பிரதேசங்களுக்கு குறிப்பாக நோய்த்தாக்கம் இல்லாத பிரதேசங்களுக்கு பாலைக் கொண்டு செல்வதால் பாலுடன் நோய்க்கிருமிகளும் காவிச் செல்லப்படும். இதனால் ஏனைய இடங்களுக்கும் நோய்க்கிருமித்தாக்கம் ஏற்படும். எனவே பால் சேகரிப்பு நிலையங்களும் கால்நடை வளர்ப்போரும் இவ் விடயத்தில் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.
மாடுகளுக்கு நோய்த்தாக்கம் ஏற்பட்ட பின்னர் தடுப்பூசி ஏற்றுவது தவிர்க்கப்பட வேண்டும். எனவே நோய்த் தாக்கம் ஏற்பட முன்னர் கால்நடைகளுக்கு தடுப்பூசி ஏற்றுவதற்கு தமது பிரதேச கால் நடை வைத்திய நிலையங்களுக்கு தகவல் கொடுத்தால் அவர்கள் நேரடியாகவே தடுப்பூசியை ஏற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வர்.
நோய்த்தாக்கம் ஏற்பட்ட பின்னர் குறிப்பிட்ட சில மாடுகளே உயிரிழக்க நேரிடும். உணவு உட்கொள்ள முடியாத நிலை ஏற்படும் போதே அவை உயிரிழப்பைச் சந்திக்கும்.
எனவே கால்நடை வளர்ப்போர் மிக அவதானத்துடன் அந்தந்த காலப்பகுதிகளுக்கு ஏற்ப கால்நடைகளுக்கு தடுப்பூசிகளை ஏற்றுவிப்பது பாதுகாப்பானது - என்றார்.
(வ-14)

## விற்பனைக்கு

நெற்கபே ஒன்றில் பாவனையிலுள்ள கணினிகள், கணினி மேசைகள், கணினி அறைப்பெட்டிகள் என்பன விற்பனைக்குள்ளன.
(45996)(3.6.4)
தொடர்பு:077 971 0525, 021 222 0553

## கடை வாடகைக்குண்டு

யாழ். மின்சார நிலைய வீதி, ஞானம் ஹோட்டல் அருகில் உள்ள மூன்று தளங்களைக் கொண்ட கடை வாடகைக்குண்டு.
(சி/12779)(3.6.4)
தொடர்பு:077 910 7242

## கோழிக்குஞ்சு விற்பனை

தென்பகுதியில் அரச திட்டங்களுக்கு கோழிக்குஞ்சு விநியோகிக்கும் பிரபல பண்ணையின் கோழிக் குஞ்சுகள் தற்போது யாழ்ப்பாணத்திலும் கிடைக்கும்.
ஊர்க்கோழிக்குஞ்சு-75/=
(கினிராஜ், கழுத்துவெட்டி)
வாத்துக்குஞ்சு-150/= (46004)(3.6.4)
தொடர்பு:077 753 1344,077 466 9669

## வீடு, காணி விற்பனைக்கு

யாழ். உரும்பிராய் கிழக்கில் 3 பரப்புக் காணியுடனான வீடு உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 365 8485 (சி/13008)(3.6.4)


## கார் விற்பனைக்கு

மாருதி சுசுக்கி ZENESTILO KP xxxx சில்வர் கலர்
தொடர்பு:077 358 1085
(46007)(3.6.4)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1979, ஆயிலியம், கிரகபாவம் 55, டாக்டர் மணமகனுக்கு அழகிய படித்த மணமகள் தேவை.
(46010)(3.6.4)
தொடர்பு:
077 723 4085, 023 205 0637

## EDU CONSULTANCY INTERNATIONAL



UK , NEW ZEALAND, ITALY, NORWAY, FRANCE மற்றும் AMERICA ஆகிய நாடுகளுக்கு Student Visa, Migration Visa சேவை வழங்கப்படும்.
Minimum Qualification
- O/L
- IELTS (4.5 Band)

மேலதிக விபரங்களுக்கு கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் (சி/13001)
FLEX Graphic

பிரகாஷ் (LLB)
Tel: - 0776 493 164

## உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## கடை வாடகைக்குண்டு

வேம்படிப் பாடசாலைக்கு முன்பாகக் கடை வாடகைக்குண்டு.
தொடர்பு:077 896 5367 (46008)(3.6.4)

## தேவை

வெள்ளவத்தையில் உள்ள இல்லத்திற்கு முதியோரை பராமரிப்பதற்கு, பெண் உதவியாளர்கள் தேவை.
0112 360 789

## Vacancy for Web Application Developer and Data Processing Analyst

A USA-based company with offices in Colombo and Jaffna is looking for a Web Appli cation Developer and a Data Processing Analyst to work in the Jaffna office. Both candidates should have a degree or diploma in the field of Computer Science/IT and should posses strong technical and analytical skills. Candidates for Web Application Developer should have good programming knowledge; familiarity with PHP, HTML/CSS and Javascript is a plus. Excellent opportunity for motivated candidates to work with a strong team on challenging projects and establish long-term careers. Fluency in English is a must. Send your CV to siva@monthlywarranty.com
(46006)(10.6.3)

## வீடு வாடகைக்கு

யாழ்.செயலகத்தில் இருந்து 1km தூரத்தில், 333, கண்டி வீதியில் (ஏ9 வீதி) 3250 சதுர அடிப்பரப்பில் ஏனைய வசதிகளுடன் 6 அறைகள் கொண்ட வீடு உடனடி வாடகைக்குண்டு. இதில் 5 படுக்கை அறைகள், நவீன இணைந்த குளியல் அறைகள் உள்ளவை. 3 PHASE மின் வசதியும் உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 350, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:021 222 2761 (46005)(3.6.4)

## தேவை

தெஹிவளையில் உள்ள இயன்முறை மருத்துவ நிலையத்திற்கு உதவியாளர்கள் தேவை.
ஆண்(Physiotherapy Assistant - Male)
தகைமைகள்:
- O/L அல்லது A/L சித்தியெய்திய 35 வயதுக்கு உட்பட்ட ஆண்
- மருத்துவத்துறை, முதியோர்/ ஊனமுற்றோர் பராமரிப்பில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
- தகைமைக்கு ஏற்ப சம்பளத்துடன் தங்குமிட வசதி வழங்கப்படும்.

(சி/13009)(3.6.4) தொடர்பு:077 712 3234

## இணையற்ற ஆயுள் காப்புறுதி நிறுவனத்தின் வரிசையில் இணைந்துகொள்ளுங்கள்...



- நீங்கள் நிரந்தரமான தொழில்வாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் நபரா?
- வாழ்நாள் முழுவதும் பயன்மிக்கதொரு தொழிலை எதிர்பார்த்திருப்பவரா?
- அப்படியானால் நீங்கள் எதிர்பார்ப்பது வாழ்க்கையில் உயர்வையும் பெறுமதியையும் ஏற்படுத்தும் முன்னேற்றத்திற்கு வழிகாட்டக்கூடிய தொழில்வாய்ப்பா?

கூட்டுறவு காப்புறுதிச் சங்கத்தால் அதன் ஆயுள் காப்புறுதி சந்தைப்படுத்தல் விற்பனைப் பிரிவில் உங்களுக்காக வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. (ஆண்/பெண் இருபாலாரும்)

நாடளாவிய மூன்றாவது பரந்த சேவை வலையமைப்பை கொண்ட நாடுமுழுவதும் 42 காப்புறுதிக் கிளைகளையும் 300 க்கு மேற்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் 110 சேவை மத்தியநிலையங்களையும் உடைய கூட்டுறவு காப்புறுதி சங்கத்தின் ஆயுள் காப்புறுதி பிரிவில் நிதித் திட்டமிடல் உத்தியோகத்தராக (Financial Planner) அல்லது விற்பனை ஊக்குவிப்பு உத்தியோகத்தர் (Sales Promotion Officer) மற்றும் விற்பனை ஊக்குவிப்பு நிறைவேற்று உத்தியோகத்தராக (Sales Promotion Executive) இணைந்துகொள்ளும் உங்களுக்கு கீழ்க்காணும் சேவை அனுகூலங்கள் நிரந்தரமாக உரிமையாகும். (EPF/ETF, அடிப்படை சம்பளம் போக்குவரத்து செலவு என்பன வழங்கப்படும்)

01. அடிப்படைச் சம்பளம், ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகள் உட்பட ரூ.100,000 க்குக் கிட்டிய மாதாந்த வருமானம் உட்பட கீழ்க்காணும் அனுகூலங்கள் உங்களுக்கு உரிமையாகும். உரித்துடையதாகும். (G.C.E. O/L கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
02. மோட்டார் சைக்கிள் அல்லது மோட்டார் கார் கொள்வனவுக்கான குறைந்த நிவாரண வட்டி வீதத்தில் கடன் வசதிகள்.
03. சர்வதேச தரத்திலான பயிற்சியாளர்கள் வழங்கும் பயிற்சி நெறி.
04. வெளிநாட்டுச் சுற்றுலா வசதிகள்.
05. ஆயுள் காப்புறுதி மற்றும் திடீர் விபத்துக் காப்புறுதி வசதிகள்.
06. வைத்திய காப்புறுதி வசதிகள்.
07. கல்விச் செயற்பாடுகளுக்குத் தேவைப்படும் நிதி உதவி வசதிகள்.
08. தனக்குரிய இலக்கைப் பூர்த்தி செய்வதன் மூலம் சங்கத்தில் உயர்பதவி நிலையை அடைய முடியும்.
09. வயதெல்லை 18 - 45 வரை இருத்தல் வேண்டும்.

இணையற்ற உயர் பதவிகள் மூலம் உயர்ந்த எதிர்காலத்தை அடைய நீங்கள் இன்றே கூட்டுறவு காப்புறுதி சங்கத்தின் ஆயுள் காப்புறுதிப் பிரிவில் இணைந்து கொள்ளுங்கள்.

கடவுச்சீட்டுக்குரிய அளவிலான ஒரு புகைப்படம் மற்றும் உறவினரல்லாத இரண்டு நடுவர்களின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் உங்களுடைய விண்ணப்பப்பத்திரத்தை கீழ்காணும் முகவரிக்கு இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் அனுப்பும்படி வேண்டுகின்றோம்.

(இலங்கையில் எந்த கிளையிலும் இணைந்துகொள்ளலாம்)

தேசிய விற்பனை முகாமையாளர் - ஆயுள்காப்புறுதி
வரையறுக்கப்பட்ட கூட்டுறவு காப்புறுதிச் சங்கம் கூட்டுறவு மாளிகை
கூட்டுறவு இல்லம்
இல. 455, காலி வீதி,
கொழும்பு - 03.

மின்னஞ்சல் : chandanap@coopinsu.com
தொலைநகல் : 011 2556760

நாடெங்கும் கிளைகள்....
(சி/13004)

co op INSURANCE
கூட்டுறவு காப்புறுதி சங்கம்
மக்களால் மக்களுக்காக....
www.ci.lk

## மாபெரும் மலிவு விற்பனை

அம்பிகை புத்தக நிலையம்
T.P:077 887 5357
246, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
24.03.2014 முதல்



1) பழைய புதிய மருத்துவ நூல்கள்
2) சட்டம், CIMA, சம்பந்தமான நூல்கள்
3) தமிழ், ஆங்கில பாடநூல்கள்
4) பழைய சஞ்சிகைகள்
5) பலவகையான அகராதிகள் உட்பட

இன்னும் பல வகையான இலங்கை, இந்திய நூல்கள்.
வாருங்கள் வந்து பாருங்கள்.
15% - 20% - இற்கும் மேற்பட்ட விலைக்கழிவு.
(45997)(3.6.4)

## PROPOSED K.V.K SHOPPING MALL MANTHIKAI, PULOLY

FOR SHOP & OFFICE SPACE



FOR RESERVATION
Contacts :- 077 962 1337
077 720 3936
(சி/13007)

## Kerala Ayurvedic Medicine

- இருதய நோய்.
- புற்றுநோய் தணிப்பு.
- ஈரல் பாதிப்புகள்.
- மூட்டுவலி, முதுகுவலி.
- புரோஸ்ட்ரேட் பிரச்சினைகள்.
- ஒற்றைத் தலைவலி.
- சைனஸ் பிரச்சினைகள்.
- மன அழுத்தம்.
- இருமல், சளி.
- படுக்கைப் புண்கள்.
- நீரழிவுப் புண்கள்.
- நச்சு வைரஸ் பாதிப்பு.
- பாலியல் குறைபாடு.

சில பிரச்சினைகளுக்கு சிறிய பரிகாரங்கள்.

### கல்லீரல் மருத்துவம்

அதிக மதுபாவனை ஆரோக்கியத்தைக் கெடுக்கும்.



கல்லீரலை பரிசோதனை செய்தீர்களா?
- முகத்தில் கரும்புள்ளிகள்
- கால்களில் வீக்கம்
- பசியின்மை
- வாந்தி உணர்வு

**Free Consultation**
Daily @ Ceylinci House
Weekdays 9.00 a.m - 5.00 p.m
Saturdays 9.00 a.m - 2.00 p.m
Monthly Clinics are conducted islandwide

Tel: 011 4 388 101
4 388 102
Hotline : 0777 708 310 / 0777 555 600
0777 708 330

FAIR PHARMA (PVT) LTD
Kerala Ayurvedic Medicine (சி/12499)

Ceylinco House,
11th Floor.
69, Janadipathi Mawatha
Colombo1.
E.mail:fairpharmasrilanka@yahoo.com
Website:www.ayurveda.lk

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA & BOI
AN ISO 9001 : 2008 QMS CERTIFIED COMPANY

# மினி பஸ்ஸில் பயணித்த பெண்ணிடம் பணத்தை அபகரித்த இரு 'பெண்டுகள்'

*மந்திகை ஆஸ்பத்திரிச் சந்தியில் சம்பவம்*

வடமராட்சி, மார்ச் 23

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பாதையில் மினி பஸ்ஸில் பயணித்த பெண்மணி ஒருவரின் கைப்பையில் இருந்து ஒரு தொகைப் பணத்தை அபகரித்த இரு பெண்கள் வகையாக மாட்டிக் கொண்டனர். அவர்கள் பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

வடமராட்சி சிற்றூர்தி சேவைச் சங்கத்தைச் சேர்ந்த மினி பஸ் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி வந்து கொண்டிருந்த வேளை ஆசனத்தில் அமர்ந்திருந்த பெண் ஒருவரின் அருகில் நின்ற இரு பெண்கள் அவரின் கைப்பையை லாவகமாக எடுத்து அதற்குள் இருந்த சில ஆயிரம் ரூபா பணத்தை அபகரித்து விட்டு, மந்திகை ஆஸ்பத்திரிச் சந்தியில் இறங்கிச் சென்றனர்.

இதேநேரம் கைப்பையில் இருந்த பணம் பறிபோனதை அவதானித்த பயணியான குறித்த பெண்மணி சாரதிக்கும், நடத்துநருக்கும் தகவல் கொடுத்தார். மினிபஸ்ஸில் இருந்து இறங்கிச் சென்ற இருபெண்களையும் வைத்தியசாலை வீதி வரை துரத்திச் சென்று பிடித்த சாரதியும், நடத்துநரும் குறித்த பெண்களிடமிருந்து பறிபோன பணத்தை மீட்டதுடன், இரு பெண்களையும் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இரு பெண்களும் வவுனியா வாசிகள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-173)

## மெய்வன்மைப் போட்டிகள்

வவுனியா, மார்ச் 23

வவுனியா சின்னத்தம்பனை அ.த.க.பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை அதிபர் வ.ஜதீஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ளன.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன், சிறப்பு விருந்தினராக வவுனியா நகர கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.பி.நடராஜ் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.உதயகுமார், கிராம சேவையாளர் ந.இளஞ்செழியன், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் செ.விஜயகாந்தன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.சிவராஜினி ஆகியோரும் கலந்து கொள்வர். (ஓ-402)

♦♦♦

வவுனியா கணேசுவரா மகா வித்தியாலயத்தின் மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் ச.யேசுதாசன் தலைமையில் நடைபெறவுள்ளன.

நிகழ்வுக்குபிரதமவிருந்தினராக செட்டிகுளம் பிரதேச செயலர் நாகமலதாசனும், சிறப்பு விருந்தினராக கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.பி.நடராஜும் கலந்து கொள்வர். (ஓ-402)

## கும்பாபிஷேகம்

கட்டுவன்- சோழங்கராயன் ஸ்ரீவிக்னவிநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை முற்பகல்10.21 தொடக்கம் 11.07 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் இடம்பெறும்.

கும்பாபிஷேகக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும். நாளை மறுதினம்செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை எண்ணெய்க் காப்புச்சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

கும்பாபிஷேகக்கிரியைகள் பிரதிஷ்டா பிரதம குருசிவஸ்ரீநகேஸ்வரக் குருக்கள்தலைமையில் நடைபெறும். (ஓ)

---

## நினைவு அஞ்சலி

6 ஆம் ஆண்டு 12 ஆம் ஆண்டு



உலகத்தில் 05.08.1924
விண்ணகத்தில் 23.03.2008
அமரர் அருட்திரு D.R. அம்பலவாணர்
(தென்னிந்திய திருச்சபை ஊழியன்)

உலகத்தில் 05.06.1927
விண்ணகத்தில் 15.04.2002
திருமதி E.R.அம்பலவாணர்

"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்"

தென்னிந்திய திருச்சபை
முதலாம் வட்டாரம், புங்குடுதீவு.
மகன் : நிமால் அம்பலவாணர்,
பேரன்: ஹரன் (பரியோவான் கல்லூரி மாணவன்)

---

## நான்காம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை**

தோற்றம் 21.11.1930
மறைவு 06.04.2010
திதி:அபரபக்க ஸப்தமி
ஞாயிறு
(23.03.2014)

ஆண்டுகள் நான்கு சென்றாலும் ஆறவில்லை
எம் துயர் ஐயா!
அருகிலிருந்து அன்பு மழை பொழிந்து ஆதரவு
தந்த நாள்களை எண்ணும் போது உங்கள்
வதனமே எங்கள் மனதில் தோன்றுகிறது
இவ்வெறுமை உலகில் வேதனைப் படவிட்டு
சென்றீரோ வானவனிடம் – உங்கள்
ஆத்ம சாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மருதங்கேணி தெற்கு,
தாளையடி.
உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.
(33416)(3.6.4)

---




**புதிய நதியா நகைமாடம்** இல.73,103, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர், ஊழியர்கள், நகைத் தொழிலாளர்கள்.

---

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் ஆறுமுகம்
**வேதநாயகம் சூசைதாசன்**



மலர்வு 29.03.1945
உதிர்வு 23.03.2009

பாசத்தின் உறைவிடமாம்
பண்பின் சிகரமாம்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள் தந்தையே!
உங்கள் நினைவுகளுடன்
நாம் என்றும் வாழ்கின்றோம்.

93 4/5, பீற்றர்சன் லேன்,
வெள்ளவத்தை, கொழும்பு-6.
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள், உற்றார், உறவினர்.
(45994)(7.6.3)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர் **வேலுப்பிள்ளை அரியதுரை**



திதி : ஸப்தமி (23.03.2014)
தோற்றம் 01.08.1926
மறைவு 21.02.2014

கண்ணை இமை காப்பது போல்,
எமைக் காத்து, காற்றோடு கலந்துவிட்ட
எம் அன்புத் தெய்வமே!
இன்னும் எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
உங்களோடு வாழும் வரம் வேண்டுமே!

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும்,
அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும்
நன்றி நவில்கின்றோம்.

இல. 239, செம்மணடிக்ற வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
(45980)(7.6.3)

---

## முதலாம் ஆண்டு நினைவலைகள்...



**திருமதி தவமணி பரமசாமி**

வையத்துள் 13.02.1930
திதி: ஸப்தமி 23.03.2014
தெய்வத்துள் 02.03.2013



வாழ்வாங்கு வாழ உயிர் தந்தாய்...
உறவென்னும் உடல் தந்தாய்...
கல்வியெனும் சிறகு தந்தாய்...
பண்பெனும் மாலை தந்தாய்...
அன்பெனும் ஆடை தந்தாய்...
ஏற்றம் எனும் ஏணி தந்தாய்
உருவத் தெய்வமாய் எம்முடன் இருந்தாய்...
அருவத் தெய்வமாய் சடுதியில் வானுறைந்தாய்...
மூலமாய் முடிவாய் முடிவில்லா முடிவாய்...
ஏழேழு ஜென்மங்களுக்கும் உம்...
மக்களாய் தோன்றும் வரம் தருவாய்....

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*


190 ஆம் கட்டையடி,
கண்டி வீதி,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.
(45955)(2-6)

# ‘எஸ்.லோன்’ நிறுவனத்தின் வியாபார முகவர்களுக்கான விருது




எஸ்.லோன். நிறுவனத்தின் வியாபார முகவர்களுக்கான வெற்றியாளர்களுக்கு விருது வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு 20.03.2014 அன்று ஞானம்ஸ் விடுதியில் நடைபெற்றது. இதில் முதலாமிடத்தை நியூ கமால் செரமிக் நிறுவனமும், இரண்டாம் இடத்தை ஜெய ஜெய ராம் செரமிக் நிறுவனமும் மூன்றாம் இடத்தை சாய்.பி.வி.சி. அன்ட் பிற்றிங் நிறுவனமும் பெற்றுக்கொண்டன.

இந்த நிகழ்வில் இருந்து சில பதிவுகள்.





யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வடமாகாணத்துக்கான எஸ்.லோன்.லங்கா பிறைவேட் லிமிட்டெட்டின் ஏகவினியோகஸ்தருமான கௌரவ ஈ.சரவணபவன், கப்பிற்றல் மகாராஜா நிறுவன குழுமப் பணிப்பாளர் எஸ்.சி.வீரசேகர ஆகியோர் மங்கள விளக்கேற்றுகின்றனர்.

விருது பெற்ற வெற்றியாளர்கள்









வெற்றியாளர்களும் குழும அங்கத்தவர்களும்

# Multilac®
PREMIUM PAINTS

MACKSONS PAINTS WORLDWIDE




**வெற்றி பெற நீங்கள் செய்யவேண்டியது**

மல்டிலெக் பிரீமியம் இமல்ஷன், மல்டிலெக் வெதர்காட், மல்டிலெக் வோட்டர் புருவிங் சீலர், மல்டிலெக் நொன் யெலொவிங் எனமல் பிரிலியன்ட் வைட், மல்டிலெக் சிங்கப்பூர் ஷேட்ஸ் அல்லது அறிமுகப்படுத்தப்பட்ட புத்தம் புதிய மல்டிலெக் ப்ளேட்டினம் பெயின்ற் வகைகளில் 4 லீற்றர்களைக் கொள்வனவு செய்யுங்கள். விற்பனை முகவரிடம் இருந்து பெற்ற பரிசுக்கூப்பனை நிரப்பி, மேலுறைகளுடன், மல்டிலெக் பெயின்ற் கொள்வனவு செய்த பற்றுச் சீட்டையும் இணைத்து இன்றே அனுப்பி வையுங்கள்.

மல்டிலெக் உல்லாசப் பயணக் கப்பல் சவாரி, த.பெ. இல.2024, கொழும்பு.

மல்டிலெக் உல்லாசப் பயணக் கப்பல் சவாரி
போட்டிக் காலம் 2014 மார்ச் 10 முதல் ஏப்ரல் 10 வரை




நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

www.multilac.com
Hotline 0772 222555

லீற்றர் ரூபா 785 /- முதல்

## தென்னிலங்கை கடற்றொழிலாளர்களால் உள்ளூர் மீனவர்களுக்குப் பாதிப்பு

### முல்லைத்தீவு கிராமிய கடற்றொழிலாளர் சம்மேளனம் தெரிவிப்பு

கிளிநொச்சி, மார்ச் 20

முல்லைத்தீவு கடற்பரப்பில் தென்னிலங்கையைச் சேர்ந்த பெருமளவிலான கடற்றொழிலாளர்கள் தொழிலில் ஈடுபடுவதால் முல்லைத்தீவைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட கிராமிய கடற்றொழிலாளர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் சிறிஸ்கந்தராசா அருள்ஜெனிபேட் தெரிவித்தார்.

இது தொடர்பாக கடந்த 10ஆம் திகதி கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரட்னவுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது தெரிவிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

2012ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் பிரகாரம் தென்னிலங்கையைச் சேர்ந்த 58 மீன்பிடிப் படகுகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் தற்போது 70க்கும் மேற்பட்ட தென்னிலங்கையைச் சேர்ந்த மீன்பிடிப் படகுகள் நாயாற்றுப் பகுதியில் அனுமதி பெறாது மீன்பிடியில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

## கிளிநொச்சி பொது மருத்துவமனையில் நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு




கிளிநொச்சி, மார்ச் 20

கிளிநொச்சி பொது மருத்துவமனையில் நோயாளர் வருகை அதிகரித்துக் காணப்படுவதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

மாவட்டத்தில் தற்போது வறட்சியான காலநிலை காணப்படுவதன் காரணமாக வெப்பத்தினால் ஏற்படக்கூடிய நோய்களுக்கு அதிகளவான நோயாளர்கள் சிகிச்சை பெற்றுச் செல்வதைக் காண முடிகின்றது.

மேலும் இந்த மாவட்டத்திலுள்ள ஏனைய மருத்துவமனைகளில் மருத்துவர்கள் இல்லாததும் மீள்குடியமர்ந்த மக்கள் கிளிநொச்சி நகரில் உள்ள பொது மருத்துவமனைக்கு செல்வதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் பாம்புக் கடியும் அதிகரித்துக் காணப்படுகின்றது. வெப்பமான காலநிலை என்பதால் பாம்புகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக மீள்குடியமர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர். (க-18)









நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 160



# சிறுவர்களை வீட்டு விபத்துக்களிலிருந்து பாதுகாப்பது எப்படி?



வீட்டிலே ஏற்படும் விபத்துக்களால், சிறுவர்கள் பாதிக்கப்படுவது, இன்று உலகளாவிய ரீதியில் ஒரு பிரச்சினையாக இருந்து வருகின்றது.

அநேகமான வீட்டு விபத்துக்கள் சிறுவர்களுக்கு குறிப்பிட்ட ஒரு வயதின் பின்பே நிகழ்கின்றன.

ஏனெனில் குறுநடைபோடும் குழந்தைகள், (Toddlers) அனைத்தையும் ஆராயும் தன்மையும், வாயில் எதனையும் வைத்து கடிக்கும் இயல்பும், பெரியவர்கள் செய்வதைப் பார்த்து தாமும் அதேபோல் செய்யும் பழக்கமுமுள்ள குறும்புக்காரர்களாக இருப்பதேயாகும்.

எவ்வாறான வீட்டு விபத்துக்கள் சிறுபிள்ளைகளுக்கு ஏற்படுகின்றன?

சிறுபிள்ளைகளுக்கு ஏற்படக்கூடிய வீட்டு விபத்துக்களில் மிகவும் பொதுவாக காணப்படக்கூடியவை பின்வருமாறு:-

1. தவறுதலாக, மண்ணெண்ணெய் போன்ற பெற்றோலியப் பொருள்கள், வீட்டில் காணப்படும் மருந்துப் பொருள்கள், நச்சுப் பதார்த்தங்கள் போன்றவற்றை உட்கொள்ளல்.
2. விளையாட்டுப் பொருள்களில் காணப்படும் சிறிய பகுதிகள், பேனை மூடி, நாணயக் குற்றிகள், சட்டை ஊசிகள், உணவுப் பொருள்களிலுள்ள கடினமான துணிக்கைகள் போன்றவற்றை விழுங்குதல்.
3. குப்பி விளக்கின் சுடர் அல்லது சுடு திரவங்கள் உடலில் படுவதால் ஏற்படும் எரிகாயங்கள்.
4. உயரமான பகுதிகளிலிருந்து விழுதல்.
5. பென்சில், பேனை அல்லது கத்தி போன்ற கூரிய பொருள்களுடன் விளையாடும் போது ஏற்படும் காயங்கள்.
6. பாதுகாப்பற்ற கிணறுகள், நீர்த்தொட்டிகள், நீர் நிலைகளில் தவறுதலாக விழுதல்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட, வீட்டு விபத்துக்களால் பாதிப்படைந்த குழந்தைகளில் சிலருக்கு ஏற்பட்ட சம்பவங்கள் உதாரணங்களாக கீழே தரப்படுகின்றன.

**நிகழ்வு:1**

இரண்டு வயதுச் சிறுவனுடன், கிராமப் புறத்தாய் மாலைவேளையில், அயல் வீட்டுக்குச் சென்று, தனது சிநேகிதியுடன் அளவளாவிக் கொண்டிருந்தார். அவரது குறும்புக்காரப் பிள்ளை, பலதையும் ஆராய்ந்து கொண்டு குடிசை வீட்டின் குசினிப் பக்கம் சென்று, அங்கே நிலத்தில் வைக்கப்பட்ட குளிர்பானப் போத்தலை எடுத்து அதன் மூடி இறுக்கமாக மூடப் படாததால் அதிலிருந்த மண்ணெண்ணெயில் சிறிதளவை அருந்தி விடுகிறான். அதனால் அவனுக்கு புரைக்கேறி இருமலும் வந்து கொண்டிருந்தது. உடனே அயல் வீட்டு அன்ரி தேங்காய்ப்பாலைப் பருக்கி வாந்தி எடுக்கச் செய்தார். வாந்தி எடுத்ததன் பின்னர் அந்த பிள்ளைக்கு சுவாசிப்பதில் மேலும் சிரமம் ஏற்படவே, உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார்கள். அங்கு தகுந்த அதிதீவிர சிகிச்சைகள் அளிக்கப்பட்டு இரண்டு வாரங்களின் பின்னர் சிறுவன் வீடு சென்றான்.

***மேற்கூறிய நிகழ்விலிருந்து நாம் தெரிந்திருக்க வேண்டியவை எவை?***

1. மண்ணெண்ணெய் போன்ற பெற்றோலியப் பொருள்களும் ஆபத்தானவை. அவற்றைப் பாதுகாப்பாக, குழந்தைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் இறுக மூடி வைக்க வேண்டும்.
2. குளிர்பானப் போத்தல்களில் மண்ணெண்ணெய் போன்ற நச்சுப் பதார்த்தங்களைச் சேமித்தால் குழந்தைகள் அவற்றைக் குளிர்பானம் என நினைத்து தவறுதலாக அருந்தி விடலாம். எனவே இவற்றை அவற்றுக்கே உரிய பாதுகாப்பாக போத்தல்களில் சேமிக்க வேண்டும்.
3. பெற்றோலியப் பொருள்களை அருந்தினால், ஒருபோதும் வாந்தியெடுக்கச் செய்யக்கூடாது. வாந்தி எடுக்கும் போது பெற்றோலியப் பொருள்கள், சுவாசப் பாதைக்குள் செல்ல அதிகம் வாய்ப்புண்டு. அதனால் நியூமோனியா ஏற்படலாம். எனவே பெற்றோர் குழந்தைக்கு வாந்தி எடுக்கச் செய்யாமல் உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டும்.

**நிகழ்வு:2**

தாயொருவர் தான் கச்சான் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது, அதன் பருப்புக்களை உடைத்து தனது இரண்டு வயதுக் குழந்தைக்கும் கொடுத்துக் கொண்டிருந்தார். அதைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த குழந்தை திடீரென புரைக்கேறி இருமத் தொடங்கியதுடன், மூச்சு விடவும் சிரமப்பட்டது. தாய் அயலவரின் துணையுடன் அருகிலுள்ள வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார். அங்கு போதிய வசதிகள் இன்மையால் குழந்தையைப் பெரியாஸ்பத்திரிக்கு மாற்றினர். அங்கு குழந்தைக்கு செயற் கைச் சுவாசம் அளிக்கப்பட்டதுடன் காது, மூக்கு, தொண்டை சிகிச்சை நிபுணரினால் சுவாசப் பாதையை அடைத்துக் கொண்டிருந்த கச்சான் துகள் எடுக்கப்பட்டதன் பின்னர் குழந்தை சுகமடைந்தது.

**இந்த நிகழ்விலிருந்து எமக்கு தெரிய வேண்டியவை:**

1. ஒருபோதும் மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு கடினமான சிறு துணிக்கைகளான உணவுப் பொருள்களை வழங்கக் கூடாது. அதேபோல் குழந்தைகளுடைய விளையாட்டுப் பொருள்களிலும், விழுங்கக் கூடிய, இலகுவில் கழரும் சிறு பொருள்கள் இருக்கக் கூடாது. மேலும் நாணயக்குற்றிகள், சிறிய ஊசிகள், பேனை மூடிகள் என்பவற்றையும் குழந்தைகள் விழுங்க அதிகம் வாய்ப்புண்டு. வீட்டிலுள்ள பெரியவர்கள் அவதானமாக இருப்பதன் மூலம் இது போன்ற அநாவசிய ஆபத்துக்களைத் தடுக்க முடியும்.
2. சிறு துணிக்கைகளான பிற பொருள்களை குழந்தைகள் விழுங்கினால், உடனடியாக அதற்கான முதலுதவியை செய்து பிறபொருளை வெளியகற்றலாம். எனவே அது பற்றியும் பெரியவர்களுக்கு தெரிந்திருப்பது நல்லது.

**நிகழ்வு:3**

முதல் நாள்தான், தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடிய வன்னிப் பகுதிக் குழந்தை ஒன்று, பிற்பகல் வேளையில் வீட்டி னுள்ளே தாய் தந்தையருடன் விளையாடிக் கொண்டிருந்தது. தந்தை சிறிது நேரத்தில் அயர்ந்து தூங்கி விட்டார். தாயோ, தகப்பன் பிள்ளையைக் கவனிப்பார் தானே என நினைத்து ஏதோ வேலையாக வீட்டின் பின்புறம் சென்று விட்டார். குழந்தை தாய் வெளியே சென்றதைக் காணாது, அவரைத் தேடி வீட்டின் முற்றத்துக்கு தத்தித் தத்தி சென்று வீட்டின் முன்னேயுள்ள பாதுகாப்பு கட்டில்லாத மண்கிணற்றில் (துரவு) விழுந்து விட்டது. சில நிமிடங்களில் வீட்டுக்குள் வந்த தாய் குழந்தையைக் காணாது தேடிப் பார்க்கையில் மண் கிணற்றிலுள்ளே குழந்தை தத்தளித்துக் கொண்டிருந்தது. உடனடியாக குழந்தையை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றும் காப்பாற்ற முடியவில்லை.

***இந்த நிகழ்வு எமக்கு தெரிவிப்பவை என்ன?***


1. குழந்தைகளை மிகவும் பாதுகாப்பாக, கண்ணை இமை காப்பது போல் பாதுகாக்க வேண்டியது பெற்றோரின் கடமையாகும்.
2. பாதுகாப்பற்ற கட்டில்லாத கிணறுகளுக்கு, பாதுகாப்புக் கட்டு அல்லது வேலி அமைக்க வேண்டும். அதேபோல் வீட்டு வளவினுள்ளே நீர் நிலைகள் இருப்பின் அவற்றுக்கும் பாதுகாப்பு வேலி அமைக்க வேண்டும்.
3. தகுந்த முதலுதவி முறைகள் குறித்துப் பெரியவர்கள் தெரிந்திருப்பது நன்மை தரும்.

மேற்கூறியவை போன்று முற்றிலும் தவிர்க்கக் கூடிய ஆபத்துக்களை, வீட்டு விபத்துக்களை, தகுந்த பாதுகாப்பு முறைகளை பின்பற்றி முற்றிலுமாகத் தடுக்க முடியும். எனவே அனைவரும் சிறுவர்களுக்கு ஏற்படக்கூடிய வீட்டு விபத்துக்களைத் தடுக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து கவன மெடுத்து அவற்றை நடைமுறைப் படுத்த வேண்டும்.

**Dr.** ந. ஸ்ரீசரவணபவானந்தன்,
குழந்தை வைத்திய நிபுணர்,
யாழ்.போதனாவைத்தியசாலை.

# துரித உணவுப் பாவனை

## ஆஸ்துமா, எக்ஸிமா நோய் ஆபத்தை அதிகரிக்கும்...







1. அண்மைக் காலமாக யாழ். குடாநாட்டிலும், உலகின் ஏனைய பகுதிகளிலும் வாழும் மக்கள் மத்தியில் துரித உணவுப் பாவனை வேகமாக அதிகரித்து வருகின்றது. இதன் காரணமாக அதீத உடற் பருமன், நீரிழிவு, கொலஸ்ரோல் மட்டம் அதிகரித்தல் போன்றவை ஏற்படும் ஆபத்து அதிகரித்து வருகின்றது. இதனை அண்மைக் கால ஆய்வுகளும் உறுதி செய்துள்ளன.
2. வாரத்துக்கு மூன்று முறை துரித, உணவு வகைகளை உண்ணும் பழக்கம் கொண்ட பிள்ளைகளுக்கு ஆஸ்துமா என்ற நுரையீரல் கோளாறு, எக்ஸிமா எனப்படும் தோல் நோய் போன்றவை ஏற்படுவதற்கான ஆபத்துக்கள் அதிகரிக்கின்றன என்று உலக அளவில் உணவுப் பழக்கங்கள் மற்றும் நோய்கள் இடையிலான சம்பந்தம் தொடர்பில் ஆராய்ந்தவர்கள் கூறுகின்றனர்.
3. துரித உணவுகளை கடையில் வாங்கிச் சாப்பிடும் வழக்கம் கொண்டவர்களிடையே ஆஸ்துமா, எக்ஸிமாவைத் தாண்டி கண் அரிப்பு, கண்ணில் இருந்து நீர்வடிதல் ஆகிய பிரச்சினைகளும் அதிகரிக்கின்றன. நிறைய பழங்கள் சாப்பிடுவதால் இந்த நோய்களில் இருந்து பிள்ளைகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் எனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
4. துரித உணவுகளில் அதிகம் காணப்படுகின்ற கொழுப்பு, பிள்ளைகளுடைய நோய் எதிர்ப்புச் சக்தியைப் பாதிக்கின்றது என்றும், பழங்களில் காணப்படும் அண்டி ஒக்ஸிடென்ஸ் (Anti oxidants) போன்ற நல்ல சத்துக்கள் நோய் எதிர்ப்பு சக்தியை விருத்தி செய்கின்றன என்றும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.
5. உலக அளவில் துரித உணவு மோகம் பெரிதாக அதிகரித்து வருகின்ற சூழ்நிலையில் அதில் இருக்கக் கூடிய ஆபத்துக்கள் பற்றி அறிந்து, விழிப்புடன் இருப்பது அவசிய மாகும்.

*Dr. கஜேந்தினி வேலுப்பிள்ளை,*
*நீரிழிவு சிகிச்சை நிலையம்,*
*போதனா வைத்தியசாலை,*
*யாழ்ப்பாணம்.*

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எகிறும் அரிசி விலைகளும் எமது அன்றாடம் காய்ச்சிகளும்

அரிசியின் கட்டுப்பாட்டு விலைகளை உயர்த் துவது குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவற்றின் பிரகாரம் குத்தரிசியின் கட்டுப்பாட்டு விலையை கிலோ 64 ரூபாவாகவும் . சம்பா அரிசியின் விலையை கிலோ 75 ரூபாவாகவும் உயர்த்துவதற்கு அரசு முடிவு செய்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குத்தரிசி மற்றும் சம்பா அரிசி வகைகளுக்கு அரசாங்கம் இது வரை கட்டுப்பாட்டு விலைகளை நிர்ணயிக்கவில்லை. தனியார் வர்த்தகர்கள் அதனைப் பயன்படுத்தி, தமக்குச் சாதகமாக்கி சம்பா அரிசியை கிலோ 78 ரூபா முதல் 90 ரூபா வரையும், குத்தரிசியை கிலோ 68 ரூபா முதல் 80 ரூபா வரையிலும் விற்பனை செய்து வருகின்றனர்.

வடக்கில், வன்னிப் பிரதேசங்களில் குத்தரிசி கிலோ 85 ரூபாவுக்கு அதிகமாகவும், சம்பா அரிசி கிலோ 95 ரூபாவுக்கு அதிகமாகவும் விற்பனையாகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் குத்தரிசி கிலோ 90 ரூபாவுக்கு அதிகமாகவும் சம்பா அரிசி கிலோ 100 ரூபாவுக்கு அதிகமாகவும் விற்ப னையாகின்றன.

கடந்த வரவு - செலவுத் திட்டத்தின் போது நெல்லின் கொள்வனவு விலைகள் கிலோ 32 ரூபாவாகவும், 35 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. அரிசி வகைகளுக்கான கட்டுப்பாட்டு விலைகளில் எந்தவிதமான மாற்றமும் கொண்டு வரப்படவில்லை.

வடக்கைப் பொறுத்தமட்டில், அதன் வன்னிப் பிரதேசமே, நெல் உற்பத்திக்கு நீண்ட காலமாகப் பெயர் [illegible] விளங்கியது. போர்க் காலத்திலும் அதனை அடுத்து வந்த கடந்த ஆறு வருடங்களிலும் முந்தைய நிலையை அதனால் [illegible] இயலவில்லை. நெல் உற்பத்தியை முந்தைய நிலைக்கு மீட்டுக் கொண்டு வருவதற்கு அரச இயந்திரமும், இயற்கையும் விவசா யிகளை வஞ்சித்து வருகின்றன.

கடந்த வருடத்தைய பெரும்போகச் செய்கை முந்தைய காலங்கள் போலன்றி மிகவும் பின்னடைவைக் கண்டிருந்தது. நெல் உற்பத்தி பெரிதும் வீழ்ச்சி அடைந் ததனால் . எதிர்காலத்தில் உள்ளூர் அரிசிக்குத் தட்டுப் பாடு நிலவும் ஆபத்தும் உருவாகியுள்ளது.

எனினும் அதனைத் தடுப்பதில் வடமாகாண விவசாயத்துறை அமைச்சு, ஓரளவிலேனும் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அரிசிக்கு இங்கு தட்டுப்பாடும், விலை உயர்வும் ஏற்படாத வகையில், உற்பத்தியான முழு அளவு நெல்லையும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்வனவு செய்வதற்கு வடக்கு மாகாண விவசாய அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.

எனினும், இனிவரும் மாதங்களில் வடக்கில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாயம் உண்டு என்பது மறக்கக் கூடியது அல்ல.

வடக்கில் - வன்னிப் பிரதேசத்தில் - விளைந்த முழு நெல்லையும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்வனவு செய்து விற்பனைக்கு ஏற்பாடு செய்வதற்கு, மாகாண சபையின் விவசாயத்துறை அமைச்சு தீர்மானித் துள்ளமை குறிப்பிடத்தக்கதும், சமயோசிதமான ஏற்பாடுமாகும்.

அது செவ்வனே செயற்படுத்தப்பட வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

கடந்த தைப்பொங்கல் பண்டிகைக் காலத்தில் உள்ளூர் தீட்டல் பச்சை அரிசிக்கு பெரும் மவுசு நிலவியதும் அதற்குத் தட்டுப்பாடு இருந்தமையும் குறிப் பிடத்தக்கது.

அது ஒரு புறமிருக்க, வடக்கில் அரிசிக்குப் பற்றாக்குறை - தட்டுப்பாடு - வரும் வேளை பார்த்து விலைகளை அதீதமாக உயர்த்தவும், அதன் மூல விசையாக இருக்கக்கூடிய கொள்ளை இலாபத்தை ஈட்டவும் வடக்கு வர்த்தகர்கள் முனைதல் ஆகாது.

மிகப் பலரும் நினைப்பது போல், வடக்கு மக்களில் மிகப் பலருக்கு , அனைத்துலக நாடுகளில்- வசிக்கும்- வாழும் உறவுகள் மூலம் பணம் கிடைக்கிறது - என்ற தேற்றத்தை முன்னிறுத்தி - கொள்ளை இலாபம் அடிக்க முற்படக் கூடாது.

வடக்கில் வாழும் மக்களில் மிகப் பெரும்பான்மையினர், பல வகை சார் இல்லாமைகளை அனுப வித்துக் கொண்டே வாழ் நாள்களைக் கழிக்கிறார்கள் என்பதனை மனதில் ஆழப் பதித்து -

எமது பிரதேசங்களின் வர்த்தகப் பெருமக்கள் தொழிலாற்ற வேண்டும்.

பல வகைகளிலும், வழிகளிலும் நொந்து போன உங்கள் உறவுகளுக்கு உதவும் மனப்பாங்கை ஆத்மார்த்தமாக உணர்ந்து செயற்படுங்கள். எந்த மேல் நிலையிலும் சரி, இல்லாமை நிலையிலும் தீதும் நன்றும் பிறர் தர வருவதில்லை. அவரவர்கள் தமக்குத் தாமே வலிந்து தேடிக் கொள்கிறார்கள். இந்த நியதி, எல்லா வேளைகளிலும் முனைப்புடனும் துடிப்புடனுமே மேலோங்கும்.

கட்டுரை

# புதைகுழி தேசம்



அ.எழிலரசன்

புத்தன்பாதம், செத்த பிணங்கள் புதையும் கல்லறையோ..!

இது ஈழத்து வில்லிசைப் பாடல் வரிகள். ஈழத் தமிழர் படுகொலைகளுக்குப் பின்னர், இலங்கையில் சிங்களவர்கள் பாதம் பதித்த இடங்கள் எல்லாம் இப்போது மனிதப் புதைகுழிகளாக உருமாறிவிட்டன. திருக்கேதீஸ்வரம், இறுதிப் போர் நடந்த மூங்கிலாறு பகுதிகளில் தோண்டப்பட்ட குழிகளில் இருந்து நூற்றுக்கணக்கான மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டதே, இப்போது ஈழக் கொலைக் களத்தின் சாட்சி.

இந்தியா, தேர்தல் காய்ச்சலில் தகித்துக் கொண்டிருக்க, தமிழகம் கூட்டணிக் கணக்குகளுக்குள் சிக்கி உழன்று கொண்டிருக்க... ஈழ நிலைவரம் கண்டுகொள்ளப்படாத செய்தியாகி விட்டது இப்போது!

குடிதண்ணீருக்காகத் தோண்டிய போது திருக்கேதீஸ்வரத்திலும், நிலத்தை உழுதபோது மூங்கிலாறு பகுதியிலும் மனித எலும்புக்கூடுகள் தென்பட்டிருக்கின்றன. அதிர்ச்சியில் விதிர்விதிர்த்து, அரசுக்குத் தகவல் தெரிவித்து மேலும் தோண்டினால், தோண்டத் தோண்ட எலும்புக்கூடுகள்! அரைகுறையாகக் குழி தோண்டி அதில் குறுக்கும் நெடுக்குமாக மக்களைப் போட்டு மண் மூடியிருக்கிறார்கள். உயிரோடு புதைத்தார்களா... கொன்று புதைத்தார்களா... அல்லது போரில் கொல்லப்பட்ட மக்களின் பிணங்களா? என்பதெல்லாம் புத்தனுக்கே வெளிச்சம். இதனால், அடிப்படைத் தேவைகளுக்காக மண்ணைத் தோண்டக்கூட அச்சமடைந்துள்ளனர் ஈழ மக்கள்!

திருக்கேதீஸ்வரம், மூங்கிலாறு பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகளில் பெரும்பாலும் எலும்புகள் சிதைந்தும், மண்டை ஓடுகள் உடைந்தும் காணப்படுகின்றன. ஐந்து முதல் ஏழு ஆண்டுகளுக்குள் புதைக்கப்பட்டவர்களாக இருக்க வாய்ப்பு இருக்கிறது என்கிறது மருத்துவர் குழு அறிக்கை. ஆனால், அதை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த எலும்புக்கூடுகளுக்கு உரியவர்கள் இலங்கை இராணுவத்தின் குண்டுவீச்சில் கொல்லப்பட்டவர்களாக இருக்கலாம். அல்லது இறுதிப் போரில் பிடிபட்ட, சரணடைந்த போராளிகளைக் கொன்று இலங்கை இராணுவமே புதைத்திருக்கலாம். ஏனென்றால், போர் முடிந்து மூன்று வருடங்களாக இந்தப் பகுதிக்குள் வேறு யாரும் நுழையாதபடி இராணுவமே தன் முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. நிலைமை சகஜமடைந்து ஓரளவு மக்கள் தங்களின் இயல்பு வாழ்வைத் தொடங்கும்போது, இந்த மரணக் குழிகள் வெளிச்சத்துக்கு வருகின்றன.

இப்போது மக்களிடையே இரண்டுவிதமான அச்சம். எங்கெங்கு மனிதப் புதைகுழிகள் இருக்குமோ என்பது ஒன்று; காணாமற்போன தங்கள் சொந்தபந்தங்கள் எலும்புக்கூடுகளாக அந்தப் புதைகுழிகளில் இருப்பார்களோ என்பது இன்னொன்று! என்கிறார் கிளிநொச்சியில் வசிக்கும் அன்பரொருவர்.

போரில் கொல்லப்படுவதைத் தவிர்க்க பதுங்குகுழி தோண்டிப் பழக்கப்பட்ட மக்கள், இப்போது கிணறு தோண்டவோ, வீட்டுத் தேவைக்காகச் சிறிய பள்ளம் ஒன்றைத் தோண்டக்கூட பயப்படுகிறார்கள். போருக்குப் பின்னரான உளவியல் போரின் முதல் புள்ளி... புதைகுழி. வருங்காலங்களில் இன்னும் பல பூதங்கள் கிளம்பும். இந்தப் புதைகுழிகளை இலங்கை இராணுவத்தின் இனஅழித்தொழிப்பு வேலைகளின் ஆதாரமாகச் சுட்டிக்காட்டக் கிடைத்த வாய்ப்பையும் கபளீகரம் செய்யப் பார்க்கிறது இலங்கை அரசு.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமை அமர்வுகள் தொடங்கியிருக்கும் நிலையில், தன் மீதான சர்வதேச அழுத்தங்களைத் தவிர்க்க, இந்தப் புதைகுழிகளைத் தனக்குச் சாதகமான கோணத்தில் அணுகி இருக்கிறது இலங்கை அரசு.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து புதைகுழி தொடர்பான புகார் மனுவைப் பெற்ற இலங்கைப் பொலிஸார், அதன் அடிப்படையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக வழக்குப் பதிந்திருக்கிறார்கள். விடுதலைப் புலிகள் அமைப்பின் காவல்துறையில் பணிபுரிந்த குணராஜ் என்பவரைத் தேடுவதாக அறிவித்துள்ளது இலங்கை இராணுவம். விடுதலைப் புலிகள், பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்திக் கொன்று புதைத்த புதைகுழிகள்தான் இவை என்று பழியை புலிகள் மீது திருப்பி, ஐ.நா. விசாரணையை எதிர்கொள்வது இலங்கை அரசின் திட்டம்.

இந்த நிலையில் ஐ.நா. ஆண்டு தோறும் நடத்தும் மனித உரிமை அமர்வு, இந்த ஆண்டு ஜெனிவாவில் தொடங்கிவிட்டது. ஐ.நாவின் மனித உரிமை ஆணையாளரான நவிப் பிள்ளை நேரடியாக இலங்கைக்கு வந்துசென்று தயாரித்த அறிக்கை, ஐ.நாவில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் இலங்கை அரசிடம் அனுப்பி, அவர்கள் கூறிய திருத்தங்களுடன்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கிறது தகவலொன்று.

அதோடு ஐ.நாவில் அமெரிக்கா முன்மொழிந்துள்ள பிரேரணை, ஈழத்தில் நடந்த இனப்படுகொலை தொடர்பாக சுதந்திரமான பன்னாட்டு விசாரணையைக் கோரவில்லை. இலங்கை அரசு அமைத்த நல்லிணக்க ஆணைக் குழுவின் மூலமான விசாரணையைத்தான் மீண்டும் மீண்டும் கோருகிறது. ஆனால், கொல்லப்பட்ட மக்களுக்கும், உயிர் தப்பி எஞ்சியிருக்கும் மக்களுக்கும் நீதியும் அச்சமற்ற வாழ்வும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றால், சுதந்திரமான விசாரணை தான் குறைந்தபட்சத் தேவை என்கிறார் ஈழத்துக் கவிஞர் ஒருவர்.

இலங்கைத் தீவில் ஒரு நூற்றாண்டுக் கும் மேலாக அரசியல் பிரச்சினையாகக் கொழுந்துவிட்டு எரிந்த இனப் பிரச்சினை என்பது தீர்மான வரைவில் குறிப்பிடப்படாமல், வெறும் மனித உரிமை மீறல் என்ற அளவில் ஈழத் தமிழர் பிரச்சினையாகச் சுருக்கப்பட்டுவிட்டது. இதுவே இலங்கை அரசுக்குக் கிடைத்த வெற்றி என்றே கொள்ளலாம். அத்துடன் ஈழத் தமிழருக்கு இழைக்கப்பட்டுவரும் அரசியல் அநீதிக்கும், இன அடையாளப் படுகொலைக்கும், வாழ்வியல் இருப்புக்கான அச்சுறுத்தலுக்கும் அனைத்துலக சமூகமும் துணைபோவதாகவே நினைக்க முடியும். இலங்கையில் இனப் பிரச்சினை என்று எதுவும் இல்லை என்ற இலங்கை அரசின் கூற்றுக்கு வலுச் சேர்ப்பதாகவே இந்தத் தீர்மான வரைவு அமைந்துள்ளது என்பதே பரவலான கருத்து என்கிறார் பிரான்ஸில் வாழும் முன்னாள் போராளி ஒருவர்.

இலங்கை காவல் துறை, புலிகள் கொன்று புதைத்த பிணக்குவியல் அது என்று குற்றம்சாட்ட, இலங்கை அரசின் தொல்லியல் துறையோ, மனிதப் புதைகுழிகளை ஆதிகாலக் கல்லறைகள் என்கிறது. போர் முடிந்த பகுதிகளில் வந்து குடியமர்ந்த புத்தனாலும் பேச முடியாது; போரில் தப்பி வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களாலும் பேச முடியாது என்பதே அவர்களின் இந்தத் துணிச்சலுக்குக் காரணமாகும்.

ஈழத்தில் போர் முடிந்து ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், இறுதி இன அழிப்புப் போரில் காணாமற்போன தங்களின் உறவுகளைத் தேடி மக்கள் நடத்திய அத்தனை ஆர்ப்பாட்டங்களிலும் தனிக் கவனம் பெற்ற கண்ணீர், சிறுமி விபூசிகாவினுடையது. 13 வயதேயான விபூசிகா, காணாமற்போய் இராணுவத்தின் பிடியில் இருக்கும் தன் அண்ணன் மகிந்தனை ஒப்படைக்குமாறு தன் தாய் ஜெயக்குமாரியோடு சேர்ந்து போராட, அது உள்ளூர் மற்றும் உலக ஊடகங்களின் கவனத்தை ஈர்த்தது. நவிப் பிள்ளை வந்தபோது போராடிய விபூசிகா, இப்போது ஐ.நா. அமர்வு நடப்பதை யொட்டிப் போராடினார். 13 வயது விபூசிகாவையும், அவரது அம்மா ஜெயக்குமாரியையும் கைது செய்திருக்கிறது ஸ்ரீலங்கா பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு. பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் தந்தார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஜெயக்குமாரியை, பூஸா தடுப்பு முகாமுக்கு அனுப்பிய பொலிஸார், விபூசிகாவை இளஞ்சிறார் சிறைக்கு அனுப்பிவிட் டார்கள். ஆனால், அந்த விபூசிகாவின் கண்ணீர் உலகத் தமிழர்களை உசுப்பியிருக்கிறது.



## அலியான்ஸ் லங்கா சென்ற ஆண்டில் மிகவுயர்ந்த வளர்ச்சியைப் பெற்றது

அலியான்ஸ் லங்காவின் வரலாற்றில் 2013ஆம் ஆண்டு மறக்க முடியாத ஓர் ஆண்டாகும். ஆயுட் காப்புறுதி, ஆயுள் சாராத காப்புறுதி ஆகிய இரு பிரிவுகளிலும் இலங்கையின் காப்புறுதித் தொழில் அரங்கிலேயே மிகவுயர்ந்த வளர்ச்சியை அலியான்ஸ் லங்கா பெற்றுக்கொண்டதே இதற்குக் காரணமாகும். ஆயுட் காப்புறுதி சாராத கம்பனியின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணத் தொகை ரூ.1.5 பில்லியனிலிருந்து ரூ.2.1 பில்லியனாக அதிகரித்தது. இது 38 வீத வளர்ச்சியாகும். புதிய ஊழியர் நியமனங்கள் மற்றும் கம்பனியின் விரிவாக்க நடவடிக்கைகளில் பெருமளவு பணம் முதலீடு செய்யப்பட்டபோதிலும், கம்பனி ரூ.249 மில்லியனை செயற்பாட்டு இலாபமாகப் பெற்றுக்கொண்டது. மீளாய்வுக்குரிய ஆண்டில், காப்புறுதிச் சந்தையில் கடும் போட்டி நிலவியபோதிலும், கம்பனி தொடர்ச்சியாக முன்னேறி ரூ.90 மில்லியனை எழுத்துறுதி இலாபமாகப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பெரும் நிறுவன வாடிக்கையாளர்களை அதிகமாகக் கொண்டுள்ள அலியான்ஸ் லங்கா தனது சில்லறை வியாபாரத்தை அபிவிருத்தி செய்வதில் கடந்த வருடம் முக்கிய கவனத்தைச் செலுத்தியது. தனிப்பட்ட வாடிக்கையாளர்களின் காப்புறுதித் தேவைகளை ஈடுசெய்வதில் காட்டப்பட்ட இந்த அக்கறையினால் சிறந்த பலாபலன்கள் கிடைத்தன. ஆயுட் காப்புறுதி சாராத காப்புறுதிப் பிரிவைப் பொறுத்தவரையில், மோட்டார் வாகனக் காப்புறுதி வியாபாரம் 24 வீதம் ஆகவும் ஏனைய காப்புறுதி வியாபாரம் 76வீதம் ஆகவும் இருந்தன. கம்பனியின் பெரிய அளவிலான விரிவாக்கம், அதன் விளைவான கட்டமைப்பு அபிவி ருத்திச் செலவுகள் என்பவற்றின் காரணமாக பங்கு ரிமை மீதான வருமானம் 29வீதத்தில் இருந்து 22வீதமாக வீழ்ச்சியடைந்தது. கம்பனியின் திரவத்தன்மை எல்லை, குறைந்தபட்ச ஒழுங்குபடுத்தல் தேவையை விட 2.3 மடங்கு அதிகமாகப் பேணப்பட்டது. நிகர சொத்துக்களின் அடித்தளம் ரூ.780 மில்லியனில் இருந்து ரூ.875 மில்லியனாக 12 வீதம் அதிகரித்ததால் கம்பனியின் நிதி உறுதிப்பாடும் ஊர்ஜிதமானது.

ஆயுட் காப்புறுதிக் கம்பனியின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணத் தொகை ரூ.532 மில்லியனில் இருந்து ரூ.829 மில்லியனாக வளர்ச்சியடைந்தது. இது 56 வீத அதிகரிப்பாகும். முதல்வருடக்கட்டுப்பணத்தொகை யிலும் 64வீதம் அதிகரிப்புக் காணப்பட்டது. முதலீடுகள் 73 வீதம் என்ற கணிசமான அளவில் அதிகரித்தன. நிகர இழப்பை மேலும் 32 வீதமாகக் குறைப்பதிலும் கம்பனி வெற்றி கண்டது. கம்பனியின் திரவத்தன்மை எல்லை, குறைந்த பட்ச ஒழுங்குபடுத்தல் தேவையைவிட 5.3 மடங்கு அதிகமாகப் பேணப்பட்டது. ஆயுட் காப்புறுதிக் கம்பனி யொன்றை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றுவது விரைவாக மேற்கொள்ளப்படக்கூடிய காரியமல்ல. எனினும், அலியான்ஸ் லங்காவின் ஆயுட் காப்புறுதிக் கம்பனி அந்த இலக்கை நோக்கிக் கிரமமான முறையில் முன்னேறுகிறது. வெற்றிகரமான முதலீட்டு மூலோ பாயத்தின் பயனாக, ஆயுட் காப்புறுதி பெற்றவர் களுக்கு 8 வீத பங்கு லாபத்தை வழங்க கம்பனியினால் முடிந்துள்ளது.

மீளாய்வுக்குரிய ஆண்டில், அலியான்ஸ் ஆயுட் காப்புறுதிக் கம்பனி என்ற புதிய ஆயுட் காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியது. வாடிக்கையாளர்கள் தமது இடர்த் தன்மையின் அடிப்படையில் முதலீட்டைத் தீர்மானித்து, குறித்துரைக்கப்பட்ட நிதியங்கள் மூலம் தமது பாதுகாப்பையும் முதலீட்டையும் அதிகரிப்பதற்கு இத் திட்டம் இடமளிக்கிறது என்று Allianz லங்காவின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுரேக்கா அலஸ் தெரிவித்தார்.




## இலங்கை வங்கி நெல்லியடிக் கிளை மிக விரைவில் புதிய கட்டடத்தில்

வடமராட்சி, மார்ச் 23

நெல்லியடி இலங்கை வங்கிக் கிளைக்கென புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய கட்டட வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளதையடுத்து, எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் இவ்வங்கிக்கிளை புதிய கட்டடத்தில் இயங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த வங்கிக் கிளைக்கென புதிய கட்டடம் கட்டுவதற்கென நெல்லியடி நகரப் பகுதியின் மையத்தில் - கொடிகாமம் வீதியில், சுமார் 60 வருடங்களுக்கு மேலாக செயற்பட்டு வந்த லச்சுமி தியேட்டர் அமைந்திருந்த சுமார் 5 பரப்புக் காணி பல கோடி ரூபா செலவில் இலங்கை வங்கி தலைமைப் பீடத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒரு வருட காலத்துக்குள் 60 மில்லியன் ரூபாவுக்கு மேலான செலவில் நவீன வசதிகளுடன் விசாலமான வாகனம் நிறுத்தும் இடத்துடன் கூடியதாக கட்டப்பட்டுள்ள இந்த வங்கிக்கிளையில், வடமராட்சிப் பிரதேச மக்களுக்கென முதன் முதலாக பாதுகாப்புப் பெட்டகப் பிரிவும் அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிக்கிளை நெல்லியடியில் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் மத்திய மகா வித்தியாலய வீதியில் உள்ள தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அடுத்த மாதம் முதல் இந்தக் கிளை சொந்தக் கட்டடத்தில் இயங்கும் என இலங்கைவங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (து-173)

## எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமத்தின் தாய்மாருக்கு மெகா லைஃவ்சயன்ஸ் குளோ உதவிக்கரம்



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பிலியந்தலை எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமத்தைச் சேர்ந்த 36 தாய்மாருக்கு மெகா லைஃவ் சயன்சஸ் பிறைவேட் லிமிடெட் நிறுவனத்தின் முன்னணி வர்த்தக நாமமாக குளோ நிதி அன்பளிப்பை வழங்கியிருந்தது.

இந்த அன்பளிப்பு நிகழ்வில் மெகா லைஃவ் சயன்சஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ அதிகாரிகள், நிறுவனத்தின் இலங்கைக்கான முகாமையாளர் பிரவீன் விஷ்வகுமாரன் மற்றும் குளோ வர்த்தக நாம முகாமையாளர் ருச்சிரா வெலிபிட்டிய ஆகியோர் பங்கேற்றிருந்தனர். இந்த நிகழ்வில் நிறுவனத்தின் இலங்கைக்கான முகாமையாளர் பிரவீன் விஷ்வகுமாரன் கருத்து வெளியிடுகையில்;

சமுதாயத்தில் பெண்களின் பங்களிப்பு என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. குறிப்பாக அன்னை தெரேசா, இந்தியாவின் கொல்கத்தா நகரில் ஆற்றிய சேவையைக் குறிப்பிட முடியும். எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமத்தைச் சேர்ந்த சிறுவர்களின் வளர்ச்சியில் முக்கிய பங்கை வகிக்கும் இந்தத் தாய்மார் தமது வாழ்நாளில் சிறந்த நிலையை அடைவதற்கான வழிகாட்டியாக திகழச் செய்ய வேண்டியது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது எனக் குறிப்பிட்டிருந்தார்.

> தாய்மா ருக்கு, ஓய்வு பெற்ற தாய்மா ருக்கும் தனித்தனி அன்பளிப்பு பொதிகள் கையளிக்கப்பட்டிருந்தன. மனிதாபிமான செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், ஊக்குவிக்கவும் தம்மை அர்ப்பணித் துள்ளதாகவும், அனைத்து தாய்மார்களையும் நாம் கௌரவிக்கிறோம்.

பண அன்பளிப்பு கையளிப்பு எஸ்.ஓ. எஸ். சிறுவர் கிராமத்தின் உதவி பணிப்பாளர் லக்சிறி ஹெட்டிகேயிடம் கையளிக்கப்பட்டிருந்தது. அத்துடன் பங்குபற்றிய தாய்மாருக்கு, ஓய்வு பெற்ற தாய்மாருக்கும் தனித்தனி அன்பளிப்புப் பொதிகள் கையளிக்கப்பட்டிருந்தன. மனிதாபிமான செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், ஊக்குவிக்கவும் தம்மை அர்ப்பணித்துள்ளதாகவும், அனைத்து தாய்மார்களையும் நாம் கௌரவிக்கிறோம் எனவும், இந்த தாய்மார்களை பெற்றுள்ளமைக்காக எஸ். ஓ.எஸ். சிறுவர் கிராமத்தைச் சேர்ந்த பிள்ளைகள் உண்மையில் அதிர்ஷ்டசாலிகள் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

சிகை மற்றும் அழகியல் நிபுணரான ஷீலா பெர்னான்டோவின் ஆலோசனை நிகழ்ச்சியுடன் நிகிழ்ச்வு நிறைவடைந்தது. இவர் தாய்மாருக்கு பிரத்தியேக சுகாதாரம் மற்றும் அழகுக் குறிப்புகளை வழங்கியிருந்ததுடன் இலவச ஆலோசனைகளையும் வழங்கியிருந்தார். தாய்மாருடன் இணைந்து பாடல் இசை நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பின்னர் சிற்றுண்டிகளும், பான வகைகளும் பரிமாறப்பட்டிருந்தன.

எஸ்.ஓ.எஸ். சிறுவர் இல்லத்தின் மூலம் உடல் மற்றும் உள ரீதியான வழிகாட்டல்கள் சமார் 250 சிறுவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இது நாடு முழுவதும் 9 நிலையங்களை கொண்டுள்ளது. குடும்பச் சுற்றாடலில் அமைந்துள்ள இந்தப் பகுதியில், ஓர் இல்லத்தில் 10 பிள்ளைகளை ஒரு தாய் பராமரித்து வருகிறார்.

குளோ என்பது சரும பராமரிப்பு தயாரிப்பாகும். நாளாந்தம் சருமம் பல்வேறு அபாயகரமான சூழல் காரணிகளுக்கு முகங்கொடுக்கிறது. இவற்றில் மாசு, அழுத்தம், சூரிய ஒளி போன்றவை உள்ளடங்குகின்றன. இதன் காரணமாக ஆரோக்கியமாகவும், பளபளப்பாகவும், கவர்ச்சிகரமாகவும் திகழ்வதற்கு பொருத்தமான போஷாக்கைப் பெற வேண்டும். குளோவில் விசேடமாக அமைந்த எஸ்.கே.எச்.என்.சேர்மானம் உள்ளடங்கியுள்ளது. இது கொ லைஃவ்சயன்சஸ் (ஆஸ்திரேலியா) பிறேவேற் லிமிடெட் நிறுவனத்தின் உரிமை வர்த்தக நாமமாக அமைந்துள்ளது. இது இயற்கைத் தாவர சேர்மானங்கள் மற்றும் புரதங்களைக் கொண்டுள்ளது. இவை சருமத்தின் சுகாதாரத்தையும், வர்ணம், தன்மை, பளபளப்பு, மென்மை மற்றும் மிருதுவான தன்மை ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. இயற்கையான தயாரிப்பாக அமைந்துள்ளதால் நீண்ட கால பாவனைக்கு குளோ பாதுகாப்பானதாக அமைந்துள்ளது. (த)



யாழ்ப்பாணம் ஈ சொப்ற் மெற்றோ கம்பஸின் 4 ஆவது வருடாந்த சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த 14 ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஈ சொப்ற் நிறுவனப் பணிப்பாளர் டயான் மங்கல விளக்கேற்றுகிறார். (த)

# "இணக்கமறுப்பு கலை" ஆவணப் படம் இன்று நல்லூரில்

சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தினால் ஒழுங்கமைக்கப் பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் திரையிடலில் முதலாவது நிகழ்வாக சார்னி ஜெயவர்தனாவின் "இணக்கமறுப்பு கலை" ஆவணப்படம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் கோயில் வீதியிலுள்ள ஆவணக் காப்பகத்தில் இடம்பெறும்.

இந்தப் படைப்பு இலங்கையின் மூன்று பிரதான இன சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் ஐந்து படைப்பாளிகளின் படைப்புப் பற்றியதும், கலை மற்றும் தீர்வுக்கிடையேயான இயல்பை பிரேரிப்பதாகவும் அமைகின்றது. அத்துடன் மீள் புனரமைப்பு என்ற ஆவண செயற்றிட்டத்தின் ஒரு பகுதியுமாகும்.

2003 ஆம் ஆண்டில் இளம் ஆசிய ஒளிபரப்புத் தாபனத்துக்குரிய தயாரிப்பாக இருப்பதுடன், சர்வதேச பத்திரிகை இயல் பேரவையால் தென்னாசியாவிற்கான சகிப்புத் தன்மைக்குரிய விருதை இந்தப் படைப்பிற்காக சார்னி ஜெயவர்தனா பெற்றுக்கொண்டார். இவர் ஆவணப்படம், புகைப்படக் கலை மற்றும் எழுத்து சம்பந்தப்பட்டும் இயங்குபவர். (ஓ)


---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும், நன்றி நவிலலும்

விஸ்வப் பிரம்மஶ்ரீ

உதயம் 17.09.1922

அஸ்தமனம் 21.02.2014



அமரர்

### கந்தையா கிருஷ்ணர்

கடந்த 21.02.2014 வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் கந்தையா கிருஷ்ணர் அவர்களின் வீட்டுக்கிருத்தியகிரியைகள் இன்று (23.03.2014 ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும், அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன உபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் காலமான செய்தி கேட்டு உடன் வந்து உதவிகள் புரிந்தோர், நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், துண்டுப்பிரசுரம், கடிதங்கள், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

[இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று சிறப்பிக்கும் வண்ணம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்]

மட்டுவில்தெற்கு,
சிவன் கோயில் றோட்,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(30363)(12.)(3.6)

---

## திறந்த பல்கலை கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் முகாமைத்துவப் பட்டக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன. க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும். அது மட்டுமன்றி, திறந்த பல்கலைக்கழகத்தல் வழங்கட்டும் தொழிலுரிமைத்துவமும் சிறு வணிக முகாமைத்துவமும் கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்களும் இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கற்கை நெறி நான்கு வருட காலங்களைக் கொண்டுள்ளதுடன் இதற்கான அனைத்து வகுப்புக்களும் யாழ். பிராந்திய நிலையத்திலும், 155 ஆம் மைல்கல், கண்டி வீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள கிளிநொச்சி கற்கை நிலையத்திலும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ)

---

குருவடி சரணம்

## நூற்றைந்தாவது பிறந்தநாள் நினைவு



தாய் மடியில் 23.03.1909 — ஆண்டவர் அடி 03.02.1990

### அமரர் கந்தையா சாமுவேல் திரவியம்

(முன்னாள் தலைமை ஆசிரியர் (தலை வாத்தியார்) பெரியபுலம் மகாவித்தியாலயம்)

திரவியம் என்றால் அது எம் பெரியபுலத்தின் K.S. திரவியமே

எடுப்பான நாசியும் துடிப்பான நடையும்
கனிவான பார்வையும் வெண்துகிலாடும் மேனியும்
பிரியமானவர்களே என அழைக்கும் பணிவான பேச்சும்
நெஞ்சத்து நேர்மைத்திடமான செயல் வீரத்திலகம்

பொன்னார் திருமேனிச் செம்மல் பொன் முத்து மணிகளால்
கணீர் என்ற ஓசையுடன் பிள்ளை எனப் பாசத்துடனும்
கனிவான கருத்துடன் உவந்தளிக்கும் உத்தமர் எம்
பெரியபுலம் தலைவாத்தியாருக்கு நூற்றுஐந்து முறை
தலை வணங்கி வணங்கும் நன்றி மறவாத பழைய மாணவர்கள்.

அன்னாரின் நன்றிமறவாத நல்மாணவர்களும் நலன்விரும்பிகளும் இன்று (23.03.2014) ஞாயிறு பி.ப. 4 மணிக்கு நாம் ஒன்றுகூடி நினைவுகூர எமது பெரியபுலம் மகாவித்தியாலயத்திற்கு சமுகமளிப்போமாக

ஏகாம்பரநாதன் (பழைய மாணவன்) 077 844 5400

(45886)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### இராஜேஸ்வரி கதிரவேல்



தோற்றம் 09.02.1929 | மறைவு 02.04.2013

வாழ்க்கை எனும் பாதையிலே
எம்மோடு பயணித்த
எமது அன்னையே!
இன்றுடன் ஓராண்டு முடிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை
விட்டு என்றும் மறையா.

க. நித்தியானந்தன் (மகன்)
(கிராம அலுவலர்)
குடும்பத்தினர்.

50/3, முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(45877)(10.6.3)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### கமலசேகரம் சதீஸ்சேகர் (சதீஸ்)

அன்னை மடியில்
06.03.1973



மரணத்தின் பிடியில்
23.03.2013

கடந்த 23.03.2013 கனடாவில் அகால மரணமடைந்த எங்கள் அன்புச் செல்வத்தை ஆழ்ந்த மனத்துயருடன் நினைவுகூருகின்றோம்!

மகனாய் வந்துதித்த மாம்பழமே! - எனக்கு
வகையாய் பணி புரிந்த தேனமுதே!
தொகையாய் உன் நினைவு வாட்டுதிங்கே
எதற்காய் காலன் உனைப் பறித்தான்?

ஈர்பத்து வருடங்கள் பிரிந்திருந்தாய்
பிள்ளைக்கு, பெற்றவள் ஈமக்கிரியை
செய்யும் வேண்டாத பேற்றைத் தந்து சென்றாய்!
வெறுமனே பிள்ளையா நீ! - நான்
வெதும்பி அழுதிருக்க என் இதயம்
மூச்சு எல்லாமாகி நின்றாயே!
என் செய்வேன் இனி நான்?

உனைப்போல் ஒருபிள்ளை - ஊரில்
யாருக்கும் வாய்த்ததில்லை
எனைப் போல் பாவி இங்கு யாரும் இருந்ததில்லை
என்ன சொல்லி ஆறுவேன் - இனி
எவர் சொல்லித் தேறுவேன்?
இறையடிதனில் இருக்கும் - உனை
பூஜித்துக் காத்திருப்பேன்!

333/7, மன்னார் வீதி,
வேப்பங்குளம் - வவுனியா.


அப்பா, அம்மா,
உடன் பிறப்புகள்.
077 949 9826

(43413)(45.3.6)

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### கந்தையா ரகுநாதன் (மகிந்தன்)



மலர்வு : 01*08*1970
உதிர்வு : 07*02*2014

குடும்பத்தின் குலவிளக்காய்
குதூகலிக்க வைத்தவனே!
அம்மா என்றழைத்து
அடிநெஞ்சை குளிர்வித்தவனே!

அன்புக்குக் கணவனாய்
ஆசைக்கு மகனாய்
இன்பத்தின் சோதரனாய்
ஈகம் செய் மாமாவாய்

பண்புமிகு பெரியதந்தையாய்
பாசமிகு சிறியதந்தையாய்
பிள்ளைக்குப் பிள்ளையாய்
பேரன்பு மருமகனாய்

உள்ளத்தில் உயர்ந்தவனாய்
ஊருக்கு உத்தமனாய் – திகழ்ந்தவனே!
உள்ளம் நெகிழ
உனை எண்ணித்துடிக்கும் உறவுகள்

கடந்த 07.02.2014 இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் இன்று (23.03.2014) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
இல.23, அணைக்கட்டு வீதி (பண்ட் றோட்),
திருநகர் வடக்கு, கிளிநொச்சி.

(45998)(2.6.3)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உங்களின் நற்செயல் சிலரால் தவறாக விமர்சிக்கப்படலாம். பொறுமையைப் பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சிலமாற்றம் செய்வீர்கள். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**இடபம்:** உங்கள் ஆலோசனையை குடும்ப உறுப்பினர் மதித்துச் செயற்படுவர். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில் வளர அனுகூலமான காரணி பலம் பெறும். தாராள பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** உங்கள் வாழ்வில் கூடுதல் வளம் பெற புதிய சூழ்நிலை உருவாகும். தைரியமனதுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திருப்திகர வளர்ச்சி உண்டாகும்.

**கடகம்:** உங்களது தன்மானத்துக்கு சோதனை வரலாம். சகிப்புத் தன்மையுடன் செயற்படுவதால் சில நன்மைகள் ஏற்படும். தொழில் சார்ந்த இடையூறைச் சரிசெய்வீர்கள். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**சிங்கம்:** இஷ்ட தெய்வ அருளை நம்பி, முக்கியமான செயல் ஒன்றில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத் தொடர்பு பலம்பெறும். ஆதாய பணவரவு கிடைக்கும். உறவினர்களின் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கன்னி:** நீண்ட நாள் தாமத செயலில் அனுகூலபயன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், புதிய வளர்ச்சி, பரிமாணம் ஏற்படும். நண்பர் வீட்டு சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள்.

**நாளை**

பங்குனி-10 திங்கட்கிழமை 24.03.2014
திதி: அட்டமி பி.ப.04.06 வரை
நட்சத்திரம்: மூலம் பி.ப.12.07
சுபநேரம்: 12.16- 01.46 வரை
இராகுகாலம்: 07.46-09.16 வரை

**துலாம்:** முக்கியமான பணி ஒன்று நிறைவேற தாமதமாகலாம். உங்களது மனக் குறையை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில் வளர அதிகளவில் பணிபுரிவது அவசியம். போக்குவரத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** இன்று, ஆன்மிக சிந்தனையுடன் செயல்படுவீர்கள். தாயின் அன்பு, ஆசி பலமாகக் கிடைக்கும். தொழிலில் திட்ட மிட்ட இலக்கு நிறைவேறும். உபரி பண வருமானம் கிடைக்கும். நல்யோகம் உண்டு.

**தனுசு:** உங்களின் நற்செயலைச் சிலர் பரிக சித்துப் பேசுவர். பெருந்தன்மைக் குணத்துடன் நடந்து கொள்வீர்கள். தொழில் வளர்ச்சி சீராக இருக்கும்.

**மகரம்:** சந்தோஷ எண்ணம் மனதை உற்சாகப்படுத்தும். எந்தச் செயலையும் விமரிசையாகச் செய்வீர்கள். தொழில் வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும். உடன் பிறந்தவர்களுக்கு உதவுவீர்கள்.

**கும்பம்:** சமூகப் பணியில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில், புதிய சாதனை உருவாகும். நிலுவைப் பணக்கடனைச் செலுத்துவீர்கள்.

**மீனம்:** உங்களது செயலில் கவனச் சிதறல் ஏற்படலாம். நிதானத்தைப் பின்பற்றுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். பணவரவு பெறுவதில் தாமதம் இருக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | 2 | | | | | | |
| | | 7 | 2 | | 5 | 3 | 1 | |
| 1 | 6 | | 3 | | 4 | | 9 | 8 |
| | | | | | 9 | 8 | | |
| 2 | 1 | | | | | | 4 | 7 |
| | | 4 | 7 | | | | | |
| 9 | 3 | | 4 | | 6 | | 5 | 2 |
| | 2 | 8 | 5 | | 1 | 4 | | |
| | | | | 2 | | 1 | | 3 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 7 | 8 | 9 | 6 | 3 | 4 | 5 |
| 5 | 6 | 9 | 4 | 3 | 1 | 8 | 7 | 2 |
| 8 | 4 | 3 | 5 | 2 | 7 | 1 | 9 | 6 |
| 4 | 5 | 2 | 9 | 7 | 8 | 6 | 1 | 3 |
| 9 | 7 | 6 | 3 | 1 | 5 | 2 | 8 | 4 |
| 3 | 8 | 1 | 2 | 6 | 4 | 7 | 5 | 9 |
| 7 | 1 | 5 | 6 | 4 | 2 | 9 | 3 | 8 |
| 2 | 9 | 8 | 7 | 5 | 3 | 4 | 6 | 1 |
| 6 | 3 | 4 | 1 | 8 | 9 | 5 | 2 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை, பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


வடபுலத்து உடன் பிறப்புகளே,
"உரிமைகளுக்கு குரல் கொடுப்போம்,
உறவுக்கு கை கொடுப்போம்"








(யாழிலும் , கிளிநொச்சியிலும் கடந்த வடமாகாண சபைத் தேர்தலின்போது தலைவர் மனோ கணேசனும் , சண்.குகவரதனும் , தமிழ் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்து தேர்தல் பிரசார மேடையில் பேசியபோது..)



"வாக்குரிமையுள்ள ஒவ்வொருவரும் தேர்தலன்று வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களியுங்கள்" என தமது மேல் மாகாண உறவுகளை வலியுறுத்தும்படி அனைத்து வடபுலத்து உடன்பிறப்புகளையும் நாம் வேண்டுகிறோம்.

தேர்தல் பரப்புரைக் குழு
ஜனநாயக மக்கள் முன்னணி

யாழ் மண்ணின் மைந்தன்
சண்.குகவரதன்
(பொறியியலாளர்)
அண்ணன் மனோவுடன்
மேல்மாகாண சபைத் தேர்தலில்..



தங்கத்தாத்தா நவாலியூர்
சோமசுந்தரப்புலவரின் பூட்டன்,
(கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பழைய மாணவன்)

(45962)

## பருத்தித்துறை மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோர் அதிகரிப்பு

வடமராட்சி, மார்ச் 23

பருத்தித்துறை அரசினர் ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது.

வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு மற்றும் பல்வேறு கிளினிக்குகளில் பெரும் எண்ணிக்கையானோர் சிகிச்சை பெறுகின்றனர். நோய்களின் தன்மைகள், காரணிகளைக் கண்டறியும் எக்ஸ்றே, ஈ.சி.ஜி, ஸ்கான், மருத்துவ ஆய்வு கூடம் ஆகிய பிரிவுகளில் நோயாளர்கள் பரிசோதனை செய்யும் நடவடிக்கையும் அதிகரித்துள்ளது. (வ-173)

# மரண அறிவித்தல்கள்



## சரவணமுத்து கார்த்திகேசு

(தென்மராட்சி மே.பல.நோ.கூட்டுறவுச் சங்க முன்னாள் கிளை முகாமையாளர்)

கோயிலாக்கண்டி , கைதடியைப் பிறப்பிடமாகவும், தற்போது ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட சரவண முத்து கார்த்திகேசு 18.03.2014 செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - இராசமணி தம்பதியரின் அன்பு மகனும், கார்த்திகேசு உடையாரின் பேரனும், காலஞ்சென்ற சோதீஸ்மதியின் அன்புக் கணவரும், நடராசா - அமிர்தவல்லி தம்பதியரின் மருமகனும், கணநாதன் (ஜேர்மனி), கணாசன் (ஜேர்மனி), கலைமதி (பிரான்ஸ்), கணராசன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான சிவமணி, சிவஞானம் மற்றும் சிவபாதசுந்தரம், சிவசோதி, காலஞ்சென்ற சிவானந்தன் மற்றும் சிவநேசன், சிவதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரசாமி, கந்தசாமி மற்றும் புஸ்பராணி, மங்கையர்க்கரசி, தவகுமாரி, ஏரம்பமூர்த்தி, மங்களம், ஞானாம்பிகை மற்றும் யோகேஸ்வரன், காலஞ்சென்ற குமாரதேவன் ஆகியோரின் மைத்துனரும், யோகமலர் (ஜேர்மனி), கிருசாந்தி (ஜேர்மனி), இந்திரகுமார் (பிரான்ஸ்), ஆர்வினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், கய்ஷ, கய்றா, கய்வா, கஜத், கரிஷா, அம்பிறிசா, கிஷா, புளோறி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22.03.2014) சனிக்கிழமை ஜேர்மன் நேரப்படி.11.30இற்கு ஜேர்மனியில் (KALDENHOV ERBAU No.55. 45357, ESSEN. LERMANY ) என்ற இடத்தில் நடைபெற்றன.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கூட்டுறவு ஒழுங்கை, நாவற்குழி.
021 205 0909

தகவல்: சகோதரர்
(ச.சிவநேசன்)

(29791)(12)(3.6)

## கார்த்திகேசு ஆறுமுகம்



காரைநகரைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் 3ஆம் குறுக்குத்தெருவை வதிவிடமாகவும் கொழும்பை தற்காலிக இருப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு ஆறுமுகம் 20.03.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-நாகமுத்து தம்பதியரின் சிரேஷ்ட மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- அன்னம்மா தம்பதியரின் மருமகனும், யோகம்மாவின் ஆசைக்கணவரும், காலஞ்சென்ற ராஜினி மற்றும் வசந்தா (கமலாதேவி-ஜேர்மனி), யமுனாராணி (நீர்கொழும்பு), சாந்தி(கொழும்பு), கிருஷ்ணநாதன்(ஜேர்மனி), ரமேஷ்(ஜேர்மனி), யசிந்தன்(பிரான்ஸ்), லவநந்தினி(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நடராசா, குணசிங்கம்(ஜேர்மனி), குலசிங்கம், வரவேஸ்வரன், கிறேசியன், உமாகாந்தி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான நடராசா, சிவம் மற்றும் வல்லிபுரம், லோகநாதன் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான ரத்தினம், சோமசுந்தரம் மற்றும் பூமணி காலஞ்சென்ற வனிதமலர், காலஞ்சென்ற திருநாவுக்கரசு ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.00 மணிக்கு இன்பம் மலர்ச்சாலையில் இடம்பெற்று பிற்பகல் 4 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

171, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
சுஜன் - 021 222 2695,
சாந்தி - 077 775 9235 ,
ஜமுனா - 077 742 3625.

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(45969)(3.6.4)

## குளத்து மீன்களுக்கு தட்டுப்பாடு

வவுனியாவில் குளத்து மீன்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட குளங்களில்இந்தஆண்டுக்கான மீன்குஞ்சுகள் இதுவரை விடப்படவில்லை.அத்துடன்மீன்களின் பெருக்கமும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பிடிக்கப்படும் மீன்களின்அளவிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதேவேளை பிடிக்கப்படும் குளத்து மீன்கள் வெளிமாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாலும் வவுனியா மாவட்டத்தில் குளத்து மீன்களுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. (க-402)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில்
15.02.1949

விண்ணில்
காணாமற்போர் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் ஆணைக்குழு இறந்தவர்கள், போரில் காணாமற்போனோர்கள் தொடர்பில் சாட்சியங்களை பதிவு செய்து விசாரணைகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளே மேற்கொண்டு வரும் நிலையில், தமது பகுதிக்கு சம்பந்தமே இல்லாத இருவரை அழைத்து முன் அழைப்பு இன்றி சாட்சியங்களை பதிவு செய்து அவர்களுக்கு பரிகாரமும் குறிப்பிட்டமை தமக்கு சந்தேகங்களை எழுப்பியுள்ளதாக நேற்று சாட்சியமளித்த தமிழ் மக்கள் பலர் குறைபட்டுக் கொண்டதை அவதானிக்க முடிந்தது. (ஐ-5)

# ராணுவ முகாமுக்குள் எமது உறவுகள் சித்திரவதையின் பின்னர் படுகொலை

*மட்டக்களப்பில் நேற்று உறவினர்கள் சாட்சியம்*



*சாட்சியமளிக்கும் தாய் ஒருவர்*

மட்டக்களப்பு சத்துருக் கொண்டான் இராணுவ முகாமுக்குள் வைத்து எமது உறவுகள் படுகொலை செய்யப்பட்டு அங்கேயே புதைக்கப்பட்டனர். அந்த உடல்களை மீட்டு எம்மிடம் ஒப்படையுங்கள் இவ்வாறு நேற்று சாட்சியமளித்தனர் பத்து வரையான உறவினர்கள். காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வு நேற்று மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது பத்து பேர் வரையிலான தமிழ் மக்கள் சாட்சியமளித்தனர். இதில் மட்டக்களப்பு மாவட்டம் சத்துருக் கொண்டான் பிரதேசத்தில் அமைந்துள்ள இராணுவ முகாமுக்கு 1990 ஆம் ஆண்டு 9 ஆம் மாதம் 9 ஆம் திகதி 185 பேர் வரையிலான மக்கள் கூட்டம் எனக் குறிப்பிட்டு அழைக்கப்பட்டிருந்தனர். இதில் 6 வயது 10 வயது சிறுவர்களும் அடங்குகின்றனர். அன்றைய தினம் மாலை 5 மணிக்கு அழைக்கப்பட்ட இவர்கள் எவரும் மீளத் திரும்பி வரவில்லை.

அன்று இரவு அங்கு அழுகுரல்கள் பெரிதாகக் கேட்டன. ஆனால் நாம் அங்கு செல்ல முடியவில்லை. இரவு பெரும் தீச்சுவாலையும் முகாமில் இருந்து தென்பட்டது. எமது உறவுகள் அனைவரும் அன்று சித்திரவதை செய்யப்பட்டு சுட்டு படுகொலை செய்யப்பட்ட பின்னர் தீயிட்டு கொளுத்தப்பட்டதாகவே நாம் உணர்கிறோம். எனவே உறவுகளுக்கு என்ன ஆனது என்பது தொடர்பில் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த இராணுவ முகாம் பகுதியை சோதனைக்கு உட்படுத்தி எமது உறவுகளின் உடல்களை மீட்டுத் தர வேண்டும் என சாட்சியமளித்தனர்.

குறித்த பகுதியில் தற்போது பொலிஸார் நிலை கொண்டுள்ளதாகவும் சம்பவம் இடம்பெற்ற காலத்தில் அந்த இராணுவ முகாமுக்கு பொறுப்பாக கேணல்பேசில்பெர்ணான்டோ, கப்டன் காமினி வர்ணகுல சூரிய ஆகியோர் இருந்ததாகவும் அவர்கள் சாட்சியமளித்தனர். அத்துடன் " சம்பவம் இடம்பெற்று 6 வருடங்களின் பின்னர் ஒரு கலந்துரையாடலில் கலந்துகொண்ட கேணல் காமினி வர்ணகுல சூரியவிடம் எமது உறவுகளுக்கு என்ன ஆனது என கேள்வி எழுப்பினோம் அப் போது அவர் குறிப்பிட்டார் அவர்கள் காற்றோடு போய் விட்டனர் என்று " இவ்வாறு அந்த உறவுகள் நேற்று சாட்சியமளித்தனர். (ஐ-5)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தேடுதல்கள்

...ந்தனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை, சங்கரத்தை, மாவடி, மூளாய், பொன்னாலை போன்ற பகுதிகளிலேயே இந்தச் சுற்றி வளைப்புத் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன. குறித்த பகுதிகளில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் ஆயிரக்கணக்கான படையினர் குவிக்கப்பட்டிருந்தனர். நேற்று அதிகாலை 4 மணி முதல் அவர்கள் வீடு வீடாகச் சென்று தேடுதலை நடத்தினர். இதன்போது படையினர் மதில் மேல் பாய்ந்தும், வேலிகளை வெட்டியும் வீடுகளுக்குள் நுழைந்தனர் என மக்கள் கூறினர். அத்துடன் உரிமையாளர்கள் இல்லாத வீடுகளின் ...வுகளை உடைத்தும் அவர்... சோதனைகளை நடத்தினர். குறித்த பகுதிகளுக்குள் வெளியார் நுழையவோ அல்லது அப்பகுதியில் இருப்பவர்கள் வெளியேறவோ படையினர் அனுமதிக்கவில்லை.

இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதலின்போது 300 இற்கு மேற்பட்ட இளைஞர்களைத் கைது செய்த படையினர், வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள திடலுக்குக் கொண்டு சென்று படைப் புலனாய் வாளர்கள் முன்னிலையில் வைத்து அவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டனர்.

சம்பவத்தைக் கேள்வியுற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் குறித்த பகுதிக்குச் சென்று நிலைமைகளை அவதானித்ததுடன், விசாரணை என்ற பெயரில் தடுத்துவைக் கப்பட்டுள்ள இளைஞர்களை உடனடியாக விடுவிக்குமாறு அங்கு நின்ற படை உயர் அதி காரியிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அத்துடன், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன், படையினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ள இளைஞர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினார். இதன் பின்னர் தடுத்துவைக்கப்பட்டிருந்த இளைஞர்கள் அனைவரும் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று அங்கு நின்ற படை உயர் அதிகாரி நேற்று மதியம் தன்னிடம் தெரிவித்தார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார். (த-4)

### பற்பொடிக்

தமது உறவுகளைக் கடத்திச் சென்றனர் என மக்கள் குறிப்பிட்டனர்.

பழுகாமத்தைச் சேர்ந்த மஞ்சுளாதேவி இரத்தினசிங்கம் என்பவர் தனது சாட்சியத்தில், தனது மகனைக் களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த இராணுவத்தினரே கடத்திச் சென்றனர். அவர் கொண்டு செல்லப்பட்ட பின்னர் அவர் தொடர்பில் எதுவும் தெரியவில்லை. இதன் பின்னர் பற்பொடி கொம்பனி இராணுவ முகாமிலிருந்து வந்த கப்டன் சிவா என்பவர் எனது பிள்ளையை விடுவிப்பதற்காக 2 லட்சம் ரூபா கோரினார். எனது பிள்ளையைக் கடத்தியது தாங்கள் தான் என்றும் அவர் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார் எனவும் பணம் தந்தால் விடுவிப்பதாகவும் தெரிவித்தார்.

இதற்கமைய அவருக்கு முதலில் 50 ஆயிரம் ரூபா பணம் கொடுத்தோம். அவர் எனது கணவரையும், அண்ணாவையும் கொழும்புக்கு அழைத்துச் சென்றார். அங்கு அவர்களை விடுதி ஒன்றில் தங்க வைத்து விட்டு எஞ்சிய ஒன்றரை லட்சத்தையும் தந்தால் தான் அவரை விடுவிப்பதாகத் தெரிவித்தார். அதற்கமைய பணத்தை கொடுத்ததும், மகனைக் கூட்டிக் கொண்டு ஓட்டோவில் வருவதாகவும் அதற்கும் 2 ஆயிரம் ரூபா பணத்தையும் வாங்கிக் கொண்டு சென்றார். அதன் பின்னர் அவர் வரவேயில்லை என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர் சாட்சியமளித்த மகேஸ்வரி இராஜேந்திரன் என்பவர் தனது மூன்று பிள்ளைகள் விசேட அதிரடிப்படையினரால் கொண்டு செல்லப்பட்ட பின்னர் காணாமற் போனதாகக் குறிப்பிட்டார். 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் திகதி வீட்டுக்கு அருகிலிருந்த நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்தபோது எனது மூன்று மகன்களை விசேட அதிரடிப் படையினர் பிடித்துச் சென்றனர். அதில் எனது 13 வயதான மகனும் உள்ளடங்குகின்றார். எங்களது வீட்டுக்கு அருகிலேயே விசேட அதிரடிப்படையின் முகாமும் அமைந்திருந்தது. அங்கு எனது பிள்ளைகள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை நான் கண்டேன். அந்த முகாமிலிருந்து வேறு இடத்துக்கு கொண்டு சென்ற பின்னர் எந்த் தகவலும் கிடைக்க வில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு பற்பொடி கொம்பனி இராணுவ முகாமிலிருந்து வந்தவர்களால் தமது உறவுகள் கடத்தப்பட்ட தாக வேறு சிலரும் தமது சாட்சியத்தைப் பதிவு செய்தனர். (த-5)

### மட்டக்களப்பு

பிரகாசம் சகாயம் என்பவரே இவ்வாறு கடத்தப்பட்டு காணாமற்போனதாக அவரது தாயார் சாட்சியமளித்தார்.

2010 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற பின்னர் எனது மகன் வீடு திரும்பவில்லை. அவர் மாநகரசபையின் அப்போதைய மேயராக இருந்த சிவகீதா பிரபாகரனிடம் காசு வாங்கி விட்டு நகரில் பொருள்கள் கொள்வனவு செய்து கொண்டிருந்தார். இதனை எனது உறவினர்களே நேரடியாகக்கண்டனர். அதன்பின் அவர் வீட்டுக்குத் திரும்பிவரவில்லை. இதனையடுத்து மேயருக்குத் தெரிவித்தேன். அவர்கள் பெரியதொரு ஆர்ப்பாட்டம் செய்வதற்கு முயன்றபோதும் பொலிஸார் அவ்வாறு செய்வதற்கு அனுமதிக்கவில்லை.

அவர் கடத்தப்படுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர் இராணுவத்தினருடன் இணைந்து இனியபாரதி குழுவினரும் அவரைத் தேடினர். அவர்களே கடத்தியிருப்பார்கள் என்று சந்தேகம் எனக்கு உள்ளது என்றார் -அவரது தாயார். (த-5)

### மருமகனை

விடுவோம் என்று தொலைபேசியூடாக இனந்தெரியாதோர் மிரட்டுவதாகக் கந்தையா மகேஸ்வரி என்பவர் சாட்சியமளித்தார்.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் மட்டக்களப்பில் இடம்பெற்று வருகின்றன. இறுதி நாள் அமர்வு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது சாட்சியமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 1991 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி எனது மருமகன் கித்துள் கிராமத்திலுள்ள வயலுக்குச் சென்றார். அங்கு வைத்து இராணுவத்தினர் அவரைப் பிடித்துச் சென்றனர். இதனையடுத்து நான் மருமகனைக் கொண்டு சென்ற இராணுவ முகாமுக்குச் சென்று கேட்டேன். மருமகனை அவரது கையைப் பின்னால் கட்டி அங்கே வைத்திருந்தார்கள். அவரை விடுவிக்குமாறு நான் கேட்டேன். அவரை விசாரித்த பின்னர் விடுவிப்பதாக அவர்கள் தெரிவித்தனர். ஆனால் அதன்பின்னர் அவர் விடுவிக்கப்படவுமில்லை. அவரைப் பற்றிய தொடர்பும் எமக்குக் கிடைக்க வில்லை.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் எங்களுக்குத் தெரிந்த ஒருவர், எனது மருமகன் வவுனியா தடுப்பு முகாமில் இருப்பதாகத் தெரிவித்தார். அங்கு சென்று முறைப்பாடுகளை மேற்கொள்ளுமாறு அவர் கூறினார். அதற்கமைய நான் வவுனியாவுக்குச் சென்று முறைப்பாடு கொடுத்தேன். அதன் பின்னர் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் இனந்தெரியாதோர் தொலைபேசியூடாக எனக்கு மிரட்டல் விடுத்தனர். உங்களது பேரப் பிள்ளையும் காணாமற்போய் விடுவார் என்று எச்சரித்தனர். அவர்களை யாரென்றே தெரியாது-என்றார். (த-5)

### வீட்டில்

ரின் மனைவி நேற்று சாட்சியமளித்தார்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக் குழுவின் அமர்வுகள் மட்டக்களப்பில் இடம்பெற்று வருகின்றன. மண்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதி மக்களுக்கான சாட்சியமளிப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் டேர்பா அரங்கில் இடம்பெற்றது.

இதில் சின்ன ஊறணியைச் சேர்ந்த இராஜேந்திரம் புஸ்பமலர் என்பவர் கடத்தப்பட்ட தனது கணவர் தொடர்பிலான சாட்சியங்களை முன்வைத்தார். 2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் திகதி வீட்டில் வைத்து எனது கணவர் கடத்திச் செல்லப்பட்டார். வீட்டுக்கு 58-6974 என்ற வெள்ளை வானில் வந்தே துப்பாக்கி முனையில் அவரை வலுக் கட்டாயமாகக் கொண்டு சென்றனர்.

பற்பொடி கொம்பனியடியில் உள்ள இராணுவ முகாமிலிருந்து வந்த விசேட அதிரடிப்படையினரே அவரைக் கடத்திச் சென்றனர். இது தொடர்பில் மறுநாள் பொலிஸ் நிலையத் தில் முறையிடச் சென்றபோது, வீட்டில் ஆயுதம் இருந்ததாக ஒப்புக்கொண்டால் உனது கணவர் விடுவிக்கப்படுவார் என்று அவர்கள் தெரிவித் தனர்.

அதற்கு மறுப்புத் தெரிவித்த பின்னர் எனக்கு கணவருடன் எந்தத் தொடர்பும் கிடைக்கவில்லை. அவரை எப்படியாவது மீட்டுத் தரவேண்டும் என்று மனைவி ஆணைக் குழுவினரிடம் கோரிக்கை விடுத்தார். (த-5)

### கைத் துப்பாக்

முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமண நிகழ்வுக்குச் சென்று விட்டு வீடு திரும்பி நகைகளைக் கழற்றி வைத்து விட்டு இருந்தபோதே இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துணிகரச் சம்பவம் உரும்பிராயில் நேற்று மதியம் இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த குறித்த குடும்பத்தினர் கோண்டாவிலில் உள்ள மண்டபம் ஒன்றில் நேற்று இடம்பெற்ற திருமண நிகழ்வில் கலந்து கொண்டனர். இதன் பின்னர் அவர்கள் வீடு திரும்பியுள்ளனர். வீடு சென்ற பின்னர் நகைகளைக் கழற்றி பாதுகாப்புப் பெட்டியினுள் வைத்துவிட்டு முன் ஹோலில் இருந்துள்ளனர். அப்போது சொகுசுக் கார் ஒன்று அவர்களது வீட்டின் முன்பாக வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய மூவர் தாம் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் (சி.ஐ.டி) என்று கூறி வீட்டுக்குள் நுழைந்துள்ளனர். அவர்கள் கைத்துப்பாக்கி ஒன்றை இடுப்பில் வைத்திருந்தனர். அதனைக் காட்டி வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்தினர். வீட்டின் உள்ளே தேடுதல் நடத்த வேண்டும் என்று கூறி அங்கிருந்த கணவன் மனைவி இருவரையும் வீட்டின் உள்ளே அழைத்துச்சென்று பூட்டிவிட்டு அங்கு சல்லடைபோட்டுத் தேடுதல் நடத்தியுள்ளனர். இதன்போது அங்கிருந்த 20 பவுண் நிறையுடைய நகைகளைக் கொள்ளையடித்துக் கொண்டு அவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

அவர்களில் இரண்டு பேர் சிங்களத்தில் பேசினர் என்றும் ஒருவர் தமிழில் கதைத்தார் என்றும் வீட்டுக்காரர்கள் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். அவர்கள் வந்த சொகுசுகாரின் இலக்கம் போலியானது என்பது தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் மாத்திரம் 2 விவசாயிகள் அழைக்கப்பட்டு தகவல் பெறப்படுவதாகப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. (த-4)

# கிண்ணத்தை வென்றது யாழ். இந்து

யாழ்ப்பாணம், மார்ச் 23

'இந்துக்களின் பெரும்போர்' துடுப்பாட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரி அணி சம்பியனானது. இந்துக்களின் போர் என வர்ணிக்கப்படும் யாழ். இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் இடையிலான ஆட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு இந்துக் கல்லூரி அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றது.

தனது முதலாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணி 6 இலக்குகளை இழந்து 192 ஓட்டங்களைப் பெற்றது. களத்தில் மதுஷன் 31 ஓட்டங்களையும், தயாளன் 21 ஓட்டத்துடன் ஆட்டம் இழக்காது இருந்தனர்.

நேற்று சனிக்கிழமை தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 274 ஓட்டங்களைப் பெற்றது. அதில் மதுஷன் 62 ஓட்டங்களையும், தயாளன் 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

கொழும்பு இந்துக் கல்லூரி சார்பில் பந்துவீச்சில் யசோதரன் 18 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 80 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும் கஜேந்திரன் 21 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 72 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.



யாழ். இந்து அணித் தலைவர் வெள்ளிக் கிண்ணம் பெறுகிறார்.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடி கொழும்பு இந் துக் கல்லூரி அணியினர் 30.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 97 ஓட்டங்களைப்பெற்றது. இதில் திவாகரன் 27 ஓட்டங்களையும், ஸ்ரீபன் 16 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி சார்பில் பானுகோபன் 7.5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், மதுஷன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 7 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் நிந்துஷன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 47 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

24 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணி ஓர் இலக்கினை இழந்து 24 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.


சிறந்த பந்து வீச்சாளராக யாழ்.இந்துக் கல்லூரி அணி வீரன் பானுகோபன் தெரிவானார்.

சிறந்த துடுப்பாட்ட வீரனாக கொழும்பு இந்துக் கல்லூரி அணி வீரன் யசோதரன் தெரிவானர்.

சிறந்த களத்தடுப்பாளராக யாழ். இந்துக் கல்லூரி அணி வீரன் கல்கோகன் தெரிவானர். சகல துறை ஆட்டநாயகனாக யாழ். இந்துக் கல்லூரி வீரன் மதுஷன் தெரிவானார். (த-23)



ஆட்ட நாயகன் மதுசன் (யாழ். இந்து)



சிறந்த துடுப்பாட்ட வீரன் யசோதன் (கொழும்பு இந்து)



சிறந்த களத்தடுப்பாளர் கல்கோகன் (யாழ். இந்து)



சிறந்த பந்துவீச்சாளர் பானுகோபன் (யாழ். இந்து)

## தாச்சிச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்.மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் உடுவில் உதய சூரியன் விளையாட்டுக்கழகமைதானத்தில் மின்னொளியில் "லீக்" முறையில் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியிலே இன்று ஞாயிறு இரவு 7 மணிக்கு மோதும் கழகங்கள்:

தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் எதிர் தையிட்டி வள்ளுவர் விளையாட்டுக் கழகம். (த-288)

## கபடியில் சம்பியன்

தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தின் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கபடிப் போட்டியில் இளவாலை இளஞ்சுடர் இளைஞர் கழக அணி சம்பியனானது.

கடந்த வாரம் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங் கத்தின் மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் இள வாலை இளஞ்சுடர் இளைஞர் கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை கலைச் செல்வி இளைஞர்கழக அணி மோதிக் கொண்டது. இதில் இளவாலை இளஞ்சுடர் இளைஞர்கழக அணி 42:27 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (த-23)

## கைதடி மின்னொளி கிண்ணம் வென்றது



யாழ்ப்பாணம், மார்ச் 23

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியிலே கைதடி மின்னொளி விளையாட்டுக் கழகம் பெரு வெற்றியீட்டியதுடன் இவ்வாண்டுக்கான சம்பியனை தனதாக்கிக் கொண்டது.

மேற்படி கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டி கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டுக்கழக மைதானத்திலே அண்மையில் நடைபெற்றது.


தென்மராட்சிப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட முப்பதுக்கும் மேற்பட்ட கழகங்கள் இந்தப் போட்டியில் பங்குபற்றிய போதும் இறுதிச் சுற்றுக்கு கைதடி மின்னொளி விளையாட்டுக் கழகமும் நுணாவில் அம்பாள் விளையாட்டுக் கழகமும் தெரிவாகி மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அம்பாள் விளையாட்டுக்கழகம் களத்தடுப்பை தெரிவு செய்ய மின்னொளி விளையாட்டுக்கழகம் முதலில் துடுப்பெடுத்தாடியது. பன்னிரண்டு பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இந்தப் போட்டியிலே மின்னொளி விளையாட்டுக் கழகம் எட்டு இலக்குகளை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

94 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய அம்பாள் அணி வீரர்கள் மின்னொளி வீரர்களின் அகோர பந்து வீச்சுக்கு ஈடு கொடுக்க முடியாமல் 11.3 பந்துப் பரிமாற்றங் களில் சகல இலக்குகளையும் இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இதன் மூலம் கைதடி மின்னொளி விளையாட்டுக் கழகம் 21 ஓட்டங்களால் வெற்றி பெற்று இவ்வாண்டுக்கான தென்மராட்சியின் முதன்மை கிரிக்கெட் அணி என்ற பெயரோடு வெற்றிக் கிண்ணத்தையும் கைப்பற்றிக் கொண்டது. (த-288)

## முதலாவது வெற்றியை பதிவு செய்தது இலங்கை



20/20 உலகக் கிண்ண சுப்பர் 10 சுற்றில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் இலங்கை அணி 5 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

5ஆவது 20/20 உலகக் கிண்ணத் தொடரின் சுப்பர்-10 சுற்று எனப்படும் பிரதான சுற்று போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமானது. சுப்பர்-10 சுற்றின் இரண்டாவது ஆட்டத்தில் இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான போட்டி சிட்டகொங்கில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 165 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இலங்கை அணி சார்பாக ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் குசல் பெரேரா அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 61 ஓட்டங்களையும் அஞ்சலோ மத்தியூஸ் 43 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக இம்ரான் தஹிர் 3 இலக்குகளையும் ஸ்ரெய்ன் மற்றும் மோர்கல் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து 166 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கோடு களமிறங்கிய தென்னாபிரிக்க அணிவீரர்கள் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடினர்.


டி கொக் 25 ஓட்டங்களையும் அம்லா 25 ஓட்டங்களையும் டுமினி 39 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

இலங்கை அணியின் சிறப்பான பந்து வீச்சுக்குத் தடுமாறிய தென்னாபிரிக்க அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்று 5 ஓட்டங்களால் தோல்விடைந்தது.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பாக சேனநாயக்க 2 இலக்குகளையும் மத்தியூஸ், மலிங்க மற்றும் மெண்டிஸ் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். (த)



# செரீனாவை நிலைகுலைய வைத்தார் யரோஸ்லவா



ரென்னிஸ் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள வீராங்கனை செரீனா வில்லியம்ஸ், தடுமாற்றத்துடன் வெற்றி பெற்றுள்ளார்.

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள மியாமி நகரில் மியாமி மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டிகள் நடந்து வருகின்றன. இதன் முதல் சுற்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

இப்போட்டியில் சர்வதேச அளவில் முன் னணியில் உள்ள வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர். அதனால் முதல் சுற்றிலிருந்தே ஆட்டம் சூடுபிடிக்க ஆரம்பித்தது.

மியாமி மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டியில் 5 முறை சம்பியன் பட்டம் வென்றுள்ளவர் செரீனா. இவர், கஜகஸ்தானின் யரோஸ் லவா ஷ்வதோவாவுடன் மோதினார்.


எதிர் வீராங்கனைகளை ஆரம் பம் முதலே நிலை குலைய வைத்து ஆட்டத்தை தன் பக்கம் திருப்பும் குணம் படைத்த செரீனா, இம்முறை அதில் சரிவைச் சந்தித்தார்.

முதல் செற்றைச் செரீனா தான் கைப்பற்றினார் என்றாலும் யரோஸ்லவாவுடன் கடும் போட்டியைச் சந்திக்க நேரிட்டது. இதனால் முதல் செற் 7-6 (9/7) என்ற கணக்கில் நீண்ட நேரம் நீடித்தது. இதில், ஒரு கட்டத்தில் 3-1 என்ற கணக்கில் வில் லியம்ஸ் பின் தங்கியிருந்தார். ஆனால், அதைத் தொடர்ந்து நடைபெற்ற ஆட்டங்களை வென்ற அவர் 5-3 என்ற முன்னிலையைப் பெற்றார்.

2ஆவது செற்றில் சுதாகரித்துக் கொண்ட செரீனா, அதனை 6-2 என்ற கணக்கில் எளிதாக வென்றார்.

இந்த ஆட்டம் குறித்து செரீனா கூறுகையில், முதல் செற் மிகவும் கடினமாக இருந்தது. யோஸ்லவா சிறப்பாக விளையாடினார். அவர் பந்தைத் திருப்பிய விதம் நன்றாக இருந்தது. அதனால், அமைதி காத்து எனது ஆற்றலை வெளிப்படுத்தி வெற்றி பெற்றேன் என்று தெரிவித்துள்ளார். (த)

# சாதிக்க வேண்டும்



மொஹமட் ஹபிஸ்

"இந்தப் போட்டியில் பந்துவீச்சாளர்களின் உதவியுடன் எதிரணியின் ஓட்ட எண்ணிக்கையை கட்டுப்படுத்த முடியும் என இந்திய அணித் தலைவர் மகேந்திர சிங் டோனி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்."

பங்களாதேஷில் நடைபெற்று வரும் ஐந்தாவது உலக 20/20 கிரிக்கெட் தொடரின் சுப்பர் 10 சுற்று நேற்று ஆரம்பமானது.


கடந்த 2007 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதலாவது உலகக்கிண்ண 20/20 கிரிக்கெட் தொடரில் சம்பியனான இந்திய அணி , அதன் பின்னர் நடைபெற்ற மூன்று தொடர்களிலும் அரையிறுதிக்குத் தகுதி பெறும் வாய்ப்பையும் இழந்தது.

இந்தப் போட்டியில் பந்துவீச்சாளர்களின் உதவியுடன் எதிரணியின் ஓட்ட எண்ணிக்கையை கட்டுப்படுத்த முடியும் என இந்திய அணித் தலைவர் மகேந்திர சிங் டோனி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சிறந்த துடுப்பாட்டத்தின் மூலம் எதிரணியி னரை வெற்றி கொள்ள முடியும் எனவும் டோனி சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை ஆசியக் கிண்ண போட்டிகள் போன்று இந்தத் தொடரிலும் சாதிக்க வேண்டும் என பாகிஸ்தான் அணித்தலைவர் மொஹமட் ஹபிஸ் தெரிவித்துள்ளார். கடந்த 2007 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக 20/20 தொடரில் இந்தியா- பாகிஸ்தான் அணிகள் மூன்று முறை மோதியுள்ளதுடன், இதில் 2 போட்டிகளில் இந்தியா வெற்றிபெற்றிருந்தமை குறிப்பிடத் தக்கது. (கு)

# மெய்யப்பன், தாரா சிங்குக்குச் சிக்கல்



ஐ.பி.எல் 6ஆவது பருவ காலத்தில் சூதாட்ட விவகாரம் விஸ்வரூபம் எடுத்தது. இது தொடர்பான வழக்கை மும்பை பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

ஐ.பி.எல் சூதாட்ட வழக்கில் குருநாத் மெய்யப்பன் மற்றும் விண்டு தாரா சிங்குக்கு மேலும் சிக்கல் அதிகரித்துள்ளது.

ஐ.பி.எல் 6ஆவது பருவ காலத்தில் சூதாட்ட விவகாரம் விஸ்வரூபம் எடுத்தது. இது தொடர்பான வழக்கை மும்பைப் பொலிஸார் விசாரித்து வருகின்றனர். சூதாட்டம் தொடர்பாக மெய்யப்பன், தாரா சிங் இடையே தொலைபேசி உரையாடல் நடைபெற்றதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

தொடர்ந்து அந்த உரையாடல் பதிவுகளையும், அவர்களுடைய குரல் மாதிரிகளையும் தடயவியல் துறையினர் ஆராய்ந்து அறிக்கை அளித்தனர்.

அறிக்கையில், மெய்யப்பன்- தாராசிங் குரல் மாதிரிகளுடன், தொலைபேசி உரையாடலில் பதிவு செய்யப்பட்ட குரல் ஒத்துப் போவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது என மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் கௌரவ உறுப்பினரும், இந்தியக் கிரிக்கெட் சபைத் தலைவர் சீனிவாசனின் மருமகனுமான மெய்யப்பனுக்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. (த)

# சர்வதேச ஹொக்கி போட்டி விதிமுறைகளில் மாற்றம்

சர்வதேச ஹொக்கிப் போட்டிக்கான விதிமுறைகளில் மாற்றம் கொண்டு வரப்படவுள்ளது.

சர்வதேச ஹொக்கிக் கூட்டமைப்பு சார்பில், போட்டி விதிகளில் மாற்றம் செய்யப்பட்டு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இனிமேல் போட்டிகள் 15 நிமிடங்கள் கொண்ட நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, மொத்தம் 60 நிமிடங்கள் மட்டுமே நடக்கும்.

முதல் மற்றும் மூன்றாவது இடைவேளைக்குத் தலா 2 நிமிடம் ஒதுக்கப்படும், மற்றபடி வழக்கம் போல 30 நிமிடங்கள் கழித்து 10 நிமிட ஓய்வு கிடைக்கும்.

இந்தப் புதிய விதிகள் அடுத்து வரும் சம்பியன்ஸ் கிண்ணம், உலக லீக் சுற்று, உலக லீக் அரையிறுதி, இறுதிச்சுற்று மற்றும் ஒலிம்பிக் போட்டிக்கான தகுதி சுற்று என எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் நடக்கும் [illegible] தொடர்களிலும் நடைமுறைக்கு வரும்.

மேலும் ரியோ டி ஜெனிரோ ஒலிம்பிக் போட்டிகளிலும் இம்முறை பின்பற்றப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)




# மிஸ்ராவை பாராட்டிய டோனி

பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் இந்திய அணி வீரர் மிஸ்ராவின் செயல்பாடு சிறப்பாக இருந்தது என அணித்தலைவர் டோனி பாராட்டியுள்ளார். பங்களாதேஷில் 20/20 உலகக் கிண்ணப் போட்டிகள் நடந்து வருகின்றன நேற்று முன் தினம் நடந்த ஆட்டத்தில் பாகிஸ்தான்- இந்தியா அணிகள் மோதின.

முதலில் விளையாடிய பாகிஸ்தான் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகள் இழப்புக்கு 130 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. பின்னர் விளையாடிய இந்திய அணி 9 பந்து எஞ்சி இருந்த நிலையில் 3 இலக்குகள் இழப்புக்கு 131 ஓட்டங்கள் எடுத்து 7 இலக்குகள் வித்தியாசத்தில் வென்றது.

இந்த வெற்றி குறித்து இந்திய அணியின் அணித்தலைவர் டோனி கூறுகையில், சுழற்பந்து வீரர் அமித் மிஸ்ராவின் பந்துவீச்சு மிகவும் அபாரமாக இருந்தது. 70 முதல் 75 சதவீதம் வரை அவர் தாக்கத்தை ஏற்படுத்தினார்.

ஆனால் இனி வரும் போட்டிகளிலும் அவரால் இதைவிட இன்னும் சிறப்பாக பந்துவீச முடியும் என்று நம்புகிறேன். நாங்கள் சில பிடிகளைத் தவறவிட்டோம், நாங்கள் சிறப்பாக விளையாடியதால் பாதிப்பு ஏற்படவில்லை. தவான் ரோஹித்தின் தொடக்கம் சிறப்பாக இருந்தது. பின்னர் வந்த கோஹ்லியும், ரெய்னாவும் அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டனர். ரெய்னா அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார் என்று தெரிவித்துள்ளார்.

தோல்வி குறித்து பாகிஸ்தான் அணித்தலைவர் முகமது ஹபீஸ், ஆடுகளம் துடுப்பாட்டவீரர்களுக்கு ஏற்ற வகையில் இல்லை. இந்த ஆடுகளத்தில் 150 ஓட்டங்கள் எடுத்து இருக்கவேண்டும். நாங்கள் 20 ஓட்டங்கள் குறைவாக எடுத்துவிட்டோம். இந்தியச் சுழற்பந்து வீச்சு மிகவும் அபாரமாக இருந்தது. குறிப்பாக மிஸ்ரா அபாரமாக வீசினார் என்று தெரிவித்துள்ளார். (த)

## கண்ணீர் அஞ்சலி



நியூ மைதிலி ஜுவெல்லறி உரிமையாளர் கஜந்தன் - துஷ்யந்தி தம்பதியரின் பாசமிகு மகள்

**கஜந்தன் சந்தோஷி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள் கின்றோம்.

உரிமையாளரும், பணியாளரும்,
S.N. கிருஷ்ணா ஜுவெல்லர்ஸ் 74/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திருமதி சாந்தி சிவஞானசுந்தரம்



அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் நல்லூர், அரச வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சாந்தி சிவஞானசுந்தரம் 22.03.2014 காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு நாதன்-செல்லம் தம்பதியினரின் மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-செல்லம்மா தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி சிவஞானசுந்தரத்தின்(டாக்டர் நந்தி) அன்பு மனைவியும், வள்ளி, தெய்வி(சிரேஷ்ட விரிவுரை யாளர், இணைந்த மருத்துவ விஞ்ஞான பிரிவு, மருத்துவ பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), ஜனனி (சிரேஷ்ட விரிவுரையாளர், முகாமைத்துவக் கற்கை கள் பீடம், யாழ்.பல்கலைக்கழகம்),லக்சுமி(சிரேஷ்ட விரிவுரையாளர், இணைந்த மருத்துவ விஞ்ஞானப் பிரிவு) ஆகியோரின் அன்புத் தாயாரும், தபோதரன் (சிரேஷ்ட விரிவுரையாளர், கணினி விஞ்ஞானத் துறை,யாழ். பல்கலைக்கழகம்), தேவானந்த்(இயக்குநர், MRTC, யாழ்.பல்கலைக்கழகம்), கமலரூபன்(பிரதம கணக்காளர்,மாகாணக் கல்வித் திணைக்களம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், நித்தநாயகம் மற்றும் Dr.ஞானலிங்கம், Dr.ஸ்ரீரங்கலிங்கம்,ஜானகியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், அபிராம், ஆனந்த்ராம், அஷ்வின்ராம்,வித்தகன், பிரணவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(23.03.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'சத்தியம்'
681/2, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(48011)
(5.6.3)
தகவல்:
குடும்பத்தினர்.

## வட இலங்கை சுதேச வைத்தியசாலை அவசர இயக்குநர் சபைக்கூட்டம்

23.03.2014 ஞாயிறு இன்று மாலை 4.00 மணிக்கு கொட்டடி விஷகடி வைத்திய நிலையம் சிவன் பண்ணை வீதி யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் இயக்குநர் சபை உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளவும்
நன்றி
செயலாளர்
வட இலங்கை சுதேச வைத்தியசாலை

## மரண அறிவித்தல்

### திருமதி ஜெயலக்ஷ்மி சுப்பிரமணியம்



நாயன்மார்க்கட்டைப் பிறப்பிடமாகவும், மயிலிட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கில் வசித்து வந்தவருமான திருமதி ஜெயலக்ஷ்மி சுப்பிரமணியம் நேற்று (22.03.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - இராசம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்புமனைவியும் சுதாகரன், சுபாஸ்கரன், சுந்தரேஸ்வரன் ஆகியோரின் தாயும் காலஞ்சென்றவர்களான தங்கலட்சுமி, மதியா பரணம், சுப்பிரமணியம் மற்றும் பதஞ்சலி, கமலாதேவி ஆகியோரின் சகோதரியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு
குடும்பத்தினர்

## கனடாக் கனவு எண்ணி 7 தினங்களில் கலைந்து போகுமா

ஆம் கனடாவில் படிக்க உழைக்க
மலிவாக விரைவாக வெறும் 23 இலட்சங்களுடன்
பறக்க சட்ட ஆலோசனை இறுதி நாள்
30.03.2Q14 ஆகும்
எனவே தாமதிக்க வேண்டாம் விரையுங்கள்
7 நாள்களும் காலை 8.00 பி.ப. 6 மணிவரை
திறந்திருப்போம்

திசைகாட்டி (பிறை) லிமிற்
175, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 2219016,

## வீடு வாடகைக் குண்டு

இணுவில் பகுதியில் வீடு வாடகைக் குண்டு.
தொடர்பு:
077 308 7172

## IELTS Preparation classes

Academic or General Training Exam Dates:
Jaffna - May 10, July 10
Colombo - May 10, 17, 24 | June 7, 21,

May 10 ஆம் திகதி யாழில் நடைபெறும் IELTS(A/GT) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான விசேட பிரிவுகள் ஆரம்பம்

48 Hours | Week days & Week end Training Program
British Council Special Trained Lecture Panel
- Modern Language Lab
- Focus individual Attention
- Proper Feedback and Analysis
- Conducive Learning Environment
- Test Practice on the pattern of IELTS Exams in Four Skills

Guaranteed 7+ Band
UK
Limited Seats Avilable
Registration Fee: Rs: 1000/-

Weekdays: 24.03.2014 | 28.03.2014 || Weekends: 29.03.2014 | 05.04.2014
அனைத்து கற்கைநெறிகளிலும் புதிய பிரிவுகள் ஆரம்பம். தவணை அடிப்படையிலான மிகக்குறைந்த கட்டணம்

LONDON METROPOLITAN COLLEGE
#197, Arasady Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 7230 | 021 753 8395
E mail: info@lmcjaffna.edu.lk | Web: www.lmcjaffna.edu.lk

## பணி நிலை வேண்டுகை

யாழ். நகரில் இயங்கி வரும் முன்னணி உற்பத்தி நிறுவனத்திற்கு பித்தளை, அலுமினிய வார்ப்பு வேலையில் முன் அனுபவம் உள்ள வார்ப்பு வேலை யாள்கள் தேவை.

ஊதியம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்
தொடர்பு : 077 2083000

## German Institute

German Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகிறது. Goethe Institute exam க்கு ஏற்றவாறு அடுத்த பிரிவுகள் 24.03 அன்று ஆரம்பம்.
தொர்புகளுக்கு Mrs. P.Kajenthini
T.P. 0771604823

## English Classes

தனி மற்றும். குழு வகுப்புக்கள்
Gr - 3 - O/L
T.P : 077 3314608

## BIT

கொழும்பு பல்கலைக்கழகம்
இளமாணி தகவல் தொழில்நுட்ப பட்டப்படிப்பு [BIT]

4th Semester

| பாடநெறிகள் | விரிவுரையாளர்கள் |
|---|---|
| IT Project Management | Mr.S. Pirasath & Mr.S.Thivi |
| Rapid Software Development | Mr.S. Garigaraganapathy |
| Programming II | Mr. V. Ganeshananthan |
| Data Communication & Networks | Mr. T. Tharmmendra |

கற்கைநெறிக்கான புதிய பிரிவுகள் 30. 03. 2014 அன்று காலை 8:30 மணிக்கு ஆரம்பமாகும்.

ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
NO. 137, K.K.S ROAD, JAFFNA
TELE : 021 222 4142 HOTLINE : 077 309 9308

## க.பொ.த உயர்தரப் பாடத்தேர்வு. ICT 2016

க.பொ.த உயர்தரப் பாடங்களை தேர்வு செய்ய முன் ICT பாடத்தை தேர்வு செய்வதன் நன்மை தீமைகளையும் சிந்தியுங்கள். உங்களிற்காக இப்புதிய பிரிவிற்கு அனுமதிக்கட்டணம் இல்லை. முதல் மாதக்கட்டணம் இல்லை. மிகவும் இலகுவான முறையில் அனைத்து செயன் முறை வளங்களுடனும் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
MCS மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்
யாழ் பல்கலை அருகில்
Type<NAME>ICT & send to 772 395 895

## ஜூஸ் பக்கெட் மெசின்

நிச்சயமான இலாபத்திற்கு
பொருத்தமான முதலீடு




- 1 வருட உத்தரவாதம்
- இலவச செயல்முறைகளுடன் கூடிய பயிற்சி வழங்கப்படும்
- விற்பனைக்கு பின் சேவை
- இலவச விநியோகம்

ரூ.2 /=
ரூ.5 /=
ரூ.10 /=
பக்கட்டுகளை தயாரிக்கலாம்

077 391 8870
077 106 6902
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitiya,Colombo - 03

## மரண அறிவித்தல்

### Dr. தம்பிமுத்து தனபாலரத்தினம்



யாழ்ப்பாணம் அரியாலை 25/15. அருளம்பலம் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட "அன்பு மெடிக்கல் கிளினிக்" உரிமையாளர் அன்பு வைத்தியர் என அன்பாக அழைக்கப்படும் Doctor தம்பிமுத்து தனபாலரத்தினம் நேற்றுமுன்தினம் (21.03.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து யோகம்மா தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்ற பொன்னம்பலம் - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும். சித்திரா. றஞ்சிதா. பாலகுமரன். புஸ்பேந்திரா. ரேணுகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வராசா. சுந்தரலிங்கம். Dr. கௌதமி. திலகராணி ஆகியோரின் அன்புமாமனும் வரன். Dr.அமலன். Dr.சுதர்சன். Dr. றஜித்தா (பிருந்தா). கீர்த்தன் ஆகியோரின் அன்புப்பேரனும் வீஷ்மா வின் பூட்டனும் காலஞ்சென்ற சீவரத்தினம் மற்றும் பாக்கியரெத்தினம்' பத்மாவதி செல்வரட்ணாவதி கணேசரட்ணம் ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் பி.ப. 4 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
25/15 அருளம்பலம் வீதி அரியாலை 021 221 1129
மனைவி, பிள்ளைகள்

## கண்ணீர் அஞ்சலி



(21.03.2014) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த நியூ மைதிலி ஜுவெல்லறி உரிமையாளர் கஜந்தன் - துஷ்யந்தி தம்பதியரின் பாசமிகு மகள்

**கஜந்தன் சந்தோஷி**


அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள் கின்றோம்.

உரிமையாளரும், பணியாளரும்,
ராஜா கிறீம் ஹவுஸ்,
36 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Hero
i3s
ஸ்ப்ளெண்டர் ஐ ஸ்மார்ட் ஒரு மிடுக்கான தெரிவு
STOPS STARTS SAVES
GREEN EFFICIENCY
splendor
iSmart
It's Smart Thinking
வசதியான பவர் ஸ்டார்ட்.
கவர்ச்சிகரமான வடிவமைப்பு
சிறந்த எரிபொருள் சிக்கனத்துடன் கூடிய APDV என்ஜின்
கருப்பு எலோய் வீல்
5
WARRANTY*
*Warranty for a period of 5 years or 70,000 kms from the date of purchase, whichever is earlier. Conditions apply.
அறிமுக விலை
ரூ. 169,634 + vat
ஹீரோ இலங்கையில் அறிமுகப்படுத்தும் i3s தொழில்நுட்பத்துடன் கூடிய முதலாவது உந்துருளி புதிய ஸ்ப்ளெண்டர் ஐ ஸ்மார்ட் தொழில்நுட்பமானது வண்டியை நீங்கள் வெகு நேரம் ஸ்டார்ட்டுடன் ஓடாது நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் சமயங்களில் தன்னியக்கமாய் ஸ்டார்ட் நிறுத்தப்படும். மேலும் நீங்கள் க்லச்சை அழுத்தியவுடன் மீண்டும் வண்டி உயிர் பெற்று ஓடத்தயாராகும். தயாராகுவோம் ஹீரோவின் புதிய மிடுக்கான தொழில்நுட்பத்தைக்கொண்டு எரிபொருளை சேமிப்போம் சூழலை பாதுகாப்போம்.
i3s
☎ : 011 5777000
*நிபந்தனைகளுக்குட்பட்டது *பெறுமதி சேர் வரி (VAT) அற்ற விலை
மேலதிக ஸ்மார்ட் விபரங்களுக்கு அருகிலுள்ள அபான்ஸ் ஹீரோ காட்சியறைகள் மற்றும் ஹீரோ விற்பனை முகவர்களிடமும் பெறலாம்.
Abans



கைதடி முதியோர் இல்லப் பாவனைக்கென புதிய சைக்கிள் அன்பளிப்பாக கையளிக்கப்பட்டது. மீசாலையைச் சேர்ந்த பொன்னையா நாகம்மா என்பவரது நினைவாக ஐயாத்துரை கனகரத்தினம் என்பவரால் புதிய பெண்கள் சைக்கிள் கையளிக்கப்பட்டது. (ஒ-9)



யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட இரண்டாம் வருட மாணவர்கள் கடந்த புதன் கிழமை கைதடி முதியோர் இல்லத்துக்கு வருகை தந்து இல்லத்தில் தங்கியுள்ள முதியோர்களுக்கு சிற்றுண்டி வகைகளை வழங்கி அவர்களை மகிழ்வித்துச் சென்றனர். (ஒ-9)




## பிரதேசங்களின் வரலாறும் வளமும் ஆவணப்படுத்தி பாதுகாத்தல் அவசியம்

### யாழ்.பல்கலைக்கழக வணிக பீடத் தலைவர் கருத்து

அச்சுவேலி, மார்ச் ?

"எமது பிரதேசங்களின் வரலாறும் வளமும் ஆவண மயப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும். அதன் பூர்வீக இயல்புகளை எதிர்காலச் சந்ததியினர் கண்டுகொள்ள வகை செய்ய வேண்டும். இந்த வகையில் கிராமங்களின் வரலாறுகளை உள்ளடக்கிய நூல்கள் படைக்கப்பட வேண்டும். இத்தகைய முயற்சியில் ஈடுபடுபவர்களுக்கு சகல தரப்பினரும் உறுதுணையாக இருந்து உதவ வேண்டும். இவ்வாறு கூறினார் யாழ்.பல்கலைக்கழக வணிக பீடத் தலைவர் பேராசிரியர் கலாநிதி தி.வேல்நம்பி.

நீர்வேலியூர் த.பரராசசிங்கம் எழுதி வெளியிட்ட "புகழ்பூத்த நீர்வேலி" நூலின் இரண்டாவது பதிப்பின் வெளியீட்டு விழா நீர்வேலி றோமன் கத்தோலிக்க பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன் தலைமையில் நடைபெற்ற வெளியீட்டு விழாவில் பேராசிரியர் வெளியீட்டுரை நிகழ்த்துகையில்,

"பேசுவது இலகுவான விடயம். சமூகம் ஏற்றுக் கொள்ளும் வகையில் எழுதுவதும் அதனை நூல் உருவில் அச்சிட்டு வெளியிடுவதும் சிரமமான கருமம். இதனை நூலாசிரியர் பரராசசிங்கம் நிதானமான முறையில் நிறைவு செய்திருக்கிறார். அத்துடன் புதிய தகவல்களையும் உள்ளடக்கி 14 வருடங்களின் பின்னர் இரண்டாவது பதிப்பை வெளியிடுவதும் தனி ஒருவராக இருந்து காத்திரமான நிலையில் நூலை படைத்திருப்பதும் பாராட்டத் தக்கது.

கிராமங்களின் பழந்தமிழ் இயல்புகள் ,பண்பாடுகள் வாழ்வியல் அம்சங்கள் மாறுபட்டு வருகின்றன. மாசடைகின்றன. இந்த நிலையில் பூர்வீகமான கிராமங்களை எதிர்காலச் சந்ததி கண்டு கொள்ள வேண்டும். அவர்களுக்கு காத்திரமான முறையில் பாதுகாத்து கையளிக்கப்பட வேண்டும்.

தமிழ் இலக்கிய வகைப்பாட்டில் இடப்பெயர் இலக்கியங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. சிறப்பான முறையில் படைக்கப்பட்டுள்ளன. இவை காலத்தின் பொக்கிசமாக விளங்குகின்றன. ஆய்வு முறைமையிலும் இடப்பெயர் தொடர்பான ஆய்வுகள் சிறப்பிடம் பெறுகின்றன.

நீர்வேலியின் நிலையம் தொழில்முறைமை. வளம். பண்பாட்டு. வரலாறு என்பனவற்றை ஒன்று சேர்த்து உரிய அமைப்பு முறையில் உருவாக்கப்பட்ட புகழ்பூத்த நீர்வேலி போன்று ஒவ்வொரு இடங்களையும் மையமாக கொண்டு நூல்கள் உருவாக்கப்பட வேண்டும். அவை வரலாற்று ஆவணங்களாகப் பாதுகாக்கப்பட வேண்டும். இவை எதிர்கால சந்ததிக்கு கையளிக்கப்பட வேண்டும்.

இத்தகைய நூல்கள் சமகால மாணவர்களின் ஆய்வியல் முயற்சியை தூண்டுவதோடு அதற்கான ஆவணங்களாகவும் உதவும் என்றனர்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் மதிப்புரையையும், கோப்பாய் பிரதேச செயலாளர் எம்.பிரதீபன் தொடக்கவுரையையும் நிகழ்த்தினர். (வ-11)

# தென்மராட்சி வலய மாணவர்களுக்கான ஓவியப் போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி, மார்ச் 23

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு இடையே ஓவியப்போட்டிகள் நடத்தப்படுவதற்கான விண்ணப்பங்கள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் பாடசாலை களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கைக் கலைக்கழகத்தின் அரச ஓவிய மற்றும் சிற்பக் குழு ஆகியவை ஒன்றிணைந்து மாணவர்களுக்கான இவ் வருடத்துக்குரிய ஓவியப் போட்டியை நடாத்தவுள்ளது.

போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள் தமது ஆக்கங்களை பாடசாலை அதிபரின் பரிந்துரையுடன் எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர் ஓவிய மற்றும் சிற்பக் குழு, தேசிய கலா பவனம், நெளும் பொக்களை மாவத்தை, கொழும்பு 7 என்னும் முகவரிக்கு அனுப்பி வைப்பதுடன் அதன் விவரங்களை பிரதேச செயலகத்துக்கும் அறியத் தருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகளில் பாலர் பிரிவு, சிறுவர் பிரிவு, கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு, அதி சிரேஷ்ட பிரிவு என வயது ரீதியாக நடாத்தப்படும் போட்டியில் ஓவியங்களிலிருந்து மாவட்ட ரீதியாக 150 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப் படுவதுடன் அவர்கள் இரண்டாம் சுற்றுக்கு முன்னனுப்பப்படுவர். முதற் சுற்றின் வெற்றியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

**போட்டியில் பங்குபற்றும் மாண வர்கள் தமது ஆக்கங்களை பாடசாலை அதிபரின் பரிந்துரையு டன் எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்**

இரண்டாம் சுற்றில் தெரிவு செய்யப்படும்படைப்புக்கள் அரசசிறுவர் ஓவிய விழாவுக்காகச் சமர்ப்பிக்கப் படும். இவற்றிலிருந்து வெற்றி பெறும் மாணவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி கொழும்பு ஜோன் டி சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும் உலக சிறுவர் தின நிகழ்வில் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு ஆள் சேர்க்க நேர்முகப் பரீட்சை ஆரம்பம்

அச்சுவேலி, மார்ச் 23

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III பதவிக்கு ஆள்களைத் தெரிவு செய்வ தற்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் (மட்டுப்படுத்தப் பட்ட நிலை) தோற்றியோரில் உயர்புள்ளி அடிப்படையில், நேர்முகப் பரீட்சை வியாழக்கிழமை தொடக் கம் கொழும்பு கல்வி அமைச் சில் நடைபெறுகின்றது.

**இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III பதவி ஆள ணிக்கு (மட்டுப்படுத் தப்பட்ட நிலை) போட்டிப் பரீட்சை கடந்த வருடம் நவம்பர் மாதம் 24 ஆம் திகதி கொழும்பில் நடைபெற் றது. பரீட்சைக்கு இலங்கை ஆசிரியர் சேவை, இலங்கை அதிபர் சேவை யைச் சேர்ந்தவர்கள் தோற்றியிருந்தனர்.**

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III பதவி ஆள ணிக்கு (மட்டுப்படுத் தப்பட்ட நிலை) போட்டிப் பரீட்சை கடந்த வருடம் நவம்பர் மாதம் 24 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது. பரீட்சைக்கு இலங்கை ஆசிரியர் சேவை, இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்கள் தோற்றியிருந்தனர். நாடளாவிய ரீதியில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தோற்றி இருந் தனர்.

கல்வி நிர்வாக சேவை ஆள ணியில் 45 வீதமானவர்கள் (மட்டுப்படுத்தப் பட்ட நிலை) போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுகின்றனர். இந்த வருடம் தெரிவு செய் யப்படவுள்ள ஆளணியில் 200 பேர் வரையில் மட்டுப் படுத்தப்பட்ட நிலையில் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்த முறை திறந்த நிலை மூலம் கல்வி நிர்வாக சேவைக்கு "பொது நிலை' மட்டத் தெரிவு இடம்பெறவுள்ளதால் 13 இற்கும் மேற் பட்ட பாடத்துறைகளுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கும், மட்டுப்படுத் தப்பட்ட நிலையில் இருந்தே தெரிவுகள் நடைபெறவுள் ளன. அந்த வகையில் "பொது நிலை", "விசேட பாடத்துறை" ஆளணித் தெரிவுகள் மட்டுப் படுத் தப்பட்ட பரீட்சைக்குத் தோற்றி யோரில் இருந்தே மேற் கொள்ளப் படவுள்ளன. (வ-11)

# பொதுமக்கள் ஒத்துழைக்காததால் மின்சாரம் வழங்குவதில் தாமதம்

முல்லைத்தீவு, மார்ச் 23

பொதுமக்களின் ஒத்துழைப்பு கிடைக் காததன் காரணமாகவே ஒட்டுசுட் டான் பிரதேசத்துக்கான மின் இணைப் புக்களை வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாக மின்சார சபையினர் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக இங்குள்ள [illegible] மின்சார வயர்கள் செல்லும் [illegible] இடையூறாகக் காணப்படும் மரங்களை வெட்டி அகற்றுவதில் [illegible] செலுத்துவதில்லை. இதனால் மின் இணைப் புக்களை வழங்க முடி யாத நிலை காணப்படுகின்றது.

எனவே அந்தந்தப் பகுதி கிராம அலுவலர்கள் உரிய நடவடிக்கை களை மேற்கொண்டு பொதுமக் களின் ஒத்துழைப்புடன் மின் வழங்கலின்போது ஏற்படும் தடைகளை அகற்ற வேண்டும் என வும் மின்சார சபையினர் தெரிவித் துள்ளனர். (க-500)










உரிய நேரத்தில் வேரோடு பிடுங்கப்படாவிட்டால், எதிர்காலத்தில் Bad English உங்களுக்கு அதிக வலியைத் தந்துவிடும். எனவே அதிக விளைவுகளை தருவதற்கு முன்பு ரூ. 800/- மாத்திரம் செலுத்தி எமது விசேட நிபுணர்களின் ஆலோசனைக்கு ஏற்ப விரைவானதும், வலியற்றதுமான ஆங்கில பரிசோதனையினை மேற்கொண்டு பரிந்துரைக்கும் பாடநெறியை பின்தொடருங்கள். ஆரோக்கியமான ஆங்கிலத்திற்கு British Council க்கு பிரவேசியுங்கள்.

49 அல்பிரட் ஹவுஸ் கார்டன், கொழும்பு 3 T +94 (0)11 7521 521 | 88/3 கொடுகொடல்ல வீதி, கண்டி T +94 (0)81 2222 410 | 70 ரக்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் T +94 (0)21 7521 521

முற்பதிவுகளுக்கு: கொழும்பு/கண்டி – தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் – 2014-03-22 முதல் ஆரம்பம்.
பரிசோதனைகள் மற்றும் பாடநெறிகள் காலி மற்றும் மாத்தறையில் அமைந்துள்ள Apex Business Academy யில் பெற்றுக்கொள்ள முடியும். உங்களுக்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்ள அழையுங்கள்.
மாத்தறை: +94 (0)41 2229 555, காலி: +94 (0)91 2232 755

E info.lk@britishcouncil.org

BRITISH COUNCIL

www.britishcouncil.lk

# மாணவர் படையணிக்கு சின்னம் சூட்டப்பட்டது



தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் மாணவர் ஒருவருக்கு சின்னம் சூட்டுகிறார்

தென்மராட்சி, மார்ச் 23
மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவர் படையணியினருக்கு (கடேற்) சின்னம் சூட்டும் நிகழ்வு வியாழக்கிழமை கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.
கல்லூரி அதிபர் அ.அம்பலவாணர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார், கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எதிரிசிங்க, சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை, மாணவர் படையணியின் 20 ஆவது பிரிவு பயிற்சி அலுவலர் லெப்.எஸ். பவனிதரன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு சின்னங்கள் சூட்டினர்.
பாடசாலை மாணவர் படையணிகளுக்கிடையே நடத்தப்பட்ட தேசிய மட்டப் போட்டியில் கல்லூரி மாணவர் அணி நான்காம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய சாரதிக்கு அபராதம்

தென்மராட்சி, மார்ச் 23
அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த வாகனச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
தென்மராட்சி தெற்குப் பகுதியில் சட்ட விரோதமாக வாகனத்தில் மணல் ஏற்றப்படுவதாக சாவகச்சேரி பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து அந்தப் பகுதிக்கு விரைந்த பொலிஸார் தச்சன்தோப்புப் பகுதியில் வைத்து மணல் ஏற்றி வந்த வாகனத்தைக் கைப்பற்றியதுடன் அதன் சாரதியையும் கைது செய்தனர்.
சாரதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு வியாழக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதனையடுத்து சாரதிக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 13 . 10 . 1935



மறைவு 15 . 02 . 2014

அமரர் திருமதி.
இராஜேஸ்வரி திருமேனி

எத்தனை நாள்கள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம் மனதை விட்டு அகலவில்லை
உங்களை அன்புடன் நினைவு கூருகின்றோம்


அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி மூலமும், குறுஞ்செய்தி வழியாகவும், கடிதம் மூலமும், எமது தாயாரின் துயர் பகிர்வில் பங்குகொண்டு ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"தாயகம்",
இளந்தாரி கோயிலடி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

குடும்பத்தினர்.

(43957 10.6)

USHA



MRP 4990/=

5 STAR RATING

ENERGY SAVER FAN

இது மின்விசிறி மட்டுமல்ல,
ஒரு முதலீட்டு திட்டம் ஆகும்
உங்களது பணத்தையும், மின்சாரத்தையும் USHA TECHNIX சேமிக்கின்றது

save Saves on Electricity Cost | Low Power Consumption*

இந்த பருவகாலத்தில் உயர் மின்சாரக் கட்டணங்களில் இருந்து உங்களை விடுவித்து மின்சாரத்தை சேமிக்கிறது Usha's Technix Fan. 43 வாட்ஸ் மின்சாரம் மட்டும் போதுமானது. இறக்கைகளின் நீளம் 1200 mm.

WE PLAY WITH AIR.
USHA AIR EXPERTS

USHA INTERNATIONAL LTD.
SHRIRAM
Plot No.15, Institutional Area, Sector 32, Gurgaon - 122 001 (Haryana) Tel : +91-124-4583100, Fax : +91-124-4583200
E-mail : corporate@ushainternational.com Website : www.ushainternational.com
Regd. Office : Surya Kiran Building, 19 Kasturba Gandhi Marg, New Delhi(India) Tel : +91 11 23318114 Fax : +91 11 23318118
Fans • Sewing Machines • Home Appliances • Engines & Pumpsets • Electrical Motors & Pumps • Water Coolers & Dispensers • Inverters • Cook Tops, Hobs & Hoods • Auto Components

Sri Lanka Office Address: 46 level -1, Parkway Building, Parkstreet Colombo -02, Sri Lanka. Phone: 2302068 Ext. 011, Fax: 112302087, Hot-line No. 0757777000
Importer and Distributor: Nelsons Enterprises, 124,1st Cross Street, Colombo, 11, Srilanka. Tel: 2343886, 2423170.
Distributor: K.I.R Holdings (Pvt) Ltd, 186/C, Anagarikar Dharmapala Mw, Karagampitiya, Dehiwala.